TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, * MADRAS-28. *
LIBRARY,
Acc No. 8339
Date

# திருப்பத்தூர்

ஆசிரியர்
திருமதி வள்ளி சொக்கலிங்கம், எம்.ஏ.

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-28
1981

முதற் பதிப்பு: 1981
த. நா. தொ. ஆய்வுத்துறை வெளியீடு எண். 87

DEPARTMENT O
8339
8

© த. நா. தொ. ஆய்வுத்துறை

894·6114

ஆசிரியர்
திருமதி வள்ளி சொக்கலிங்கம், எம்.ஏ.

விலை ரூ. 5-25

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால்
துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

# பதிப்புரை

தமிழகக் கோயில்களைப் பற்றி ஏதுமே தெரியாது; கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றியும், அவற்றோடு பிணைந்து விளங்கும் ஊர்வாழ் மக்களைப் பற்றியும் ஏதும் தெரியாது. அப்படியிருக்கும் மாணவரை ஒரே ஆண்டில் இதுபோல் ஒரு நூல் படைக்க உருவாக்குகிறது, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை நடத்தும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் என்றால் அது பெருமைக்குரிய செய்திதானே! இதுபோலத் தமிழக ஊர்களைப் பற்றியும், கோயில்களைப் பற்றியும் எத்தனை நூல்கள் வர வேண்டும்! அவற்றை எழுத எத்தனை இளைஞர்களை உருவாக்க வேண்டும்! அந்தப் பணியில் ஈடுபட்டு உள்ளது இந்தக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம். இந்நூலை நல்ல நடையில், கருத்துக்களை மிகுந்த உணர்ச்சியோடு வெளியிடும் திருமதி வள்ளிசொக்கலிங்கம் போன்றவர்களின் ஆர்வத்தை நல்லாற்றுப்படுத்தி நடாத்திச் செல்வதில் பெருமை கொள்கிறது இத்துறை. இவர்களது ஆய்வுகளை நூலாக்குவதிலும் பெருமை அடைகிறோம்.

இரா. நாகசாமி

# உள்ளடக்கம்


முன்னுரை 1

சிறப்புச் செய்திகள் 6

சமுதாயச் செய்திகள் 16

புராணச் செய்திகள் 22

கோயில்கள் 23

செப்புத் திருமேனிகள் 44

வழிபாடுகளும் விழாக்களும் 50

கல்வெட்டுச் செய்திகள் 61

இலக்கியச் செய்திகள் 95

# திருப்புத்தூர்

## முன்னுரை

"அளவரிய யதி ராசரை யகலநீக்கி யகலிடத்தைக்
களப்பர ரெனுங் கலியரைசன்
கைக்கொண்டதனை யிறக்கியபின்
படுகடன் முளைத்த பருதிபோல்
பாண்டியாதி ராஜன் வெளிப்பட்டு
விடுகதிரவிரொளி விலக வீற்றிருந்து
வேலை சூழ்ந்த வியலிடத்துக்
கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கிச்
செங்கோ லோச்சி வெண்குடை நீழற்
றங்கொளி நிறைந்த தரணி மங்கையைப்
பிறர்பால் உரிமை திறவிதின் நீக்கி
தன்பாலுரிமை நன்கனமைத்த
மானம்போர்த்த தானை வேந்தன்
ஒடுங்கா மன்ன ரொளி நகரழித்த
கடுங்கோன்என்னுங் கதிர்வேற் றென்னன்"[1]

என்ற கடுங்கோன் முதல், இரண்டாம் இராஜசிம்ம பாண்டியன் வரை, அதாவது கி. பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9-ம் நூற்றாண்டு வரை, முற்காலப் பாண்டியர்கள் பாண்டிய நாட்டைச் சிறப்பாக ஆண்டார்கள். இச்சமகாலத்தில் தமிழகத்தின் வடக்கே பல்லவர்கள் ஆட்சி செய்தனர். இப்பல்லவர்களுடைய குடைவரைக் கோயில்களும், ஒற்றைக் கற்கோயில்களும், கட்டடக் கோயில்களும் ஏராளமானவை இன்றளவும் அவர்கள் புகழ் பாடிக் கொண்டிருக்கின்றன. இதே காலத்திய பாண்டியர்களது குடைவரைக் கோயில்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. கழுகுமலை, 'வெட்டுவான் கோயில்' பாண்டியர்களுடைய ஒற்றைக் கற்கோயிலுக்கு மிகச் சிறந்ததொரு எடுத்துக்

1. வேள்விக்குடிச் செப்பேடு.

காட்டு. பாண்டியர்களுடைய கட்டிடக்கோயில் அமைப்பிற்குச் சான்றாக உள்ளவை ஒரு சிலவே. அக்கோயில்களில் சிறப்பாக நம் கண்முன் காட்சிதருவதுதான், திருப்புத்தூர் திருத்தளிநாதர் திருக்கற்றளியாகும். இந்த வகையிலும், இக்கோயிலில் உள்ள பிற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுக்கள் மூலம் அவர்களது வரலாற்றை அறிந்துகொள்ளும்வகையிலும் திருப்புத்தூர், வரலாற்றுக்குச் செய்யும் பணி சிறப்பானது. இத்திருப்புத்தூர் பற்றியும், இதன் சிறப்புக்குக் காரணமான திருத்தளிநாதர் கற்றளி பற்றியும் அறிவதே இந்நூலின் நோக்கம்.

**ஊரமைப்பு:** இராமநாதபுர மாவட்டத்தில், செட்டிநாட்டின் முக்கிய நகரமாகிய காரைக்குடியிலிருந்து 21 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ளது திருப்புத்தூர். பூகோளப்படத்தில் இதன் இடத்தை வடக்கு அட்சரேகை 9°5' க்கும் 10°25 க்கும் இடையில் என்றும், கிழக்குத் தீர்க்கரேகை 77° 20' க்கும் 79° 28' க்கு இடையில் என்றும் குறித்துள்ளார்கள். மதுரை-காரைக்குடி சாலையில் அமைந்துள்ள பெரிய ஊர் இது. இங்குள்ள பேருந்து நிலையம் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் எப்பகுதிக்கும் இங்கிருந்து செல்லலாம். இதன் அருகிலுள்ள புகை வண்டி நிலையம், கிழக்கிலுள்ள காரைக்குடி புகைவண்டி நிலையமே. இவ்வூரில் புகைவண்டி நிலையம் கிடையாது.

**எல்லைகள் :** K. வயிரவன்பட்டி, நரசிம்மன் பட்டிக்குக் கிழக்கு; நெடுமரத்திற்கு மேற்கு; கண்டவராயன் பட்டி, வாணியங் காட்டிற்குத் தெற்கு; தெம்மாப்பட்டுக்கு வடக்கு; இதற்கு இடைப்பட்டு 871.02 சதுர மைல் அல்லது 2247 ஏக்கர் 29 செண்டுகளைப் பரப்பளவாகக் கொண்டு திருப்புத்தூர் அமைந்துள்ளது. தேவாரம் பெற்றபாண்டி நாட்டுத் தலங்கள் பதினான்கனுள் இதுவும் ஒன்று. குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, திருக்கோட்டியூர், பட்டமங்கலம், காளையார் கோவில், பிரான் மலை போன்றவை திருப்புத்தூரைச்சுற்றியுள்ள வரலாற்றுச்சிறப்புமிக்க ஊர்களுள் சிலவாகும்.

**இயற்கைவளம்:** பாலாறு, மணிமுத்தாறு ஆகிய சிற்றாறுகள் திருப்புத்தூர், மகிபாலன்பட்டி, நெற்குப்பை முதலிய பல ஊர்

களை வளப்படுத்துகின்றன. இங்கு மார்ச் மாதம் முதல் மே மாதம் முடிய வெப்பமாகவும், டிசம்பர் முதல் பிப்ரவரி வரை குளிர்காலமாகவும் இருக்கும். கடல் மட்டத்திலிருந்து இவ்வூர் 321 அடி அல்லது 97.8 மீட்டர் உயரத்தில் உள்ளது. ''மலையாளம் பேய்ந்து விளைகிற சீமை, தஞ்சாவூர் பாய்ந்து விளைகிற சீமை, இராமநாதபுரம் காய்ந்து விளைகிற சீமை'' என்பது மக்களிடையே வழங்கிவரும் பழமொழி. மணிமுத்தாறு, பாலாறு போன்ற சிற்றாறுகள் ஓரளவு திருப்புத்தூருக்கு உதவினாலும், பெரும்பாலும் கண்மாய்கள், குட்டை குளங்கள், கிணறுகள் போன்றவைதான் திருப்புத்தூரின் நீர்த் தேவையைப் பூர்த்திசெய்கின்றன. திருப்புத்தூர் பெரிய கண் மாய், தெம்மாபட்டுக் கண்மாய், மருது சகோதரர்களால் வெட்டுவிக்கப்பட்டது என்று கூறப்படுகின்ற ஊருக்கு வெளியே உள்ள 'காராளன்கேணி' எனப்படுகின்ற கிணறுகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. திருப்புத்தூருக்கு வடக்கே 'பாண்டியன் கால்வாய்' என்ற ஒரு கால்வாய் திருப்புத்தூர் பெரிய கண்மாய்க்கு நீர் கொண்டுவருகிறது. பஞ்சாயத்துக் குடிநீர் வாரியம் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கிறது. காரைக்குடியிலிருந்து திருப்புத்தூருக்குச் செல்லும்பொழுது திருப்புத்தூர் நுழைவாயிலில் உள்ள சாம்பன் ஊரணி, குடி நீருக்காக மட்டுமே பயன்படுகிறது. இதை ஒரு பறையன் வெட்டியதாகக் கூறுகிறார்கள். மணிமுத்தாறுக்கு 'திருப்புத்தூர் ஆறு' என்றே பெயர் இருந்திருக்கிறது. கி. பி. 9ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் கொழுவூர் கூற்றத்து மீகுண்டாற்றுப் பிரம்மதேயம் திருப்புத்தூர் என்று வருகிறது. இங்கு குறிப்பிடப்படும் மீகுண்டாறு அதாவது மேற்கு குண்டாறு இன்றைய மணிமுத்தாறு அல்லது திருப்புத்தூர் ஆறு எனப்படுவதாகலாம்.

**மக்கள் :** இங்கு பெரும்பான்மையோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள். நன்செய், புன்செய் தானியங்கள் ஒரு போக விளைச்சலாக விளைகின்றன. மற்ற காலங்களில் இதர தொழில்கள், குறிப்பாக வியாபாரம் செய்கிறார்கள். கீழை நாடுகளான மலேஷியா, சிங்கப்பூர் மற்றும், கிழக்கு ஆசியா, துபாய் போன்ற நாடுகளுக்குச் சென்று பொருள் ஈட்டி வருகிறார்கள். திருப்புத்தூரைச் சுற்றியுள்ள காடுகளில் முந்திரி பயிரிடப்படுகிறது. நெல், கம்பு, தென்னை போன்றவைதான் இவ்வூரில் அதிகமாகப்

பயிரிடப்படுகின்றன. பாய் பின்னுகின்ற குடிசைத் தொழில் கூட்டுறவு நிறுவம் ஒன்றுமுள்ளது. இங்கு சனிக்கிழமை தோறும் வாரச் சந்தை கூடுகிறது. தினச்சந்தையும் உண்டு.

**பொதுச்செய்திகள்:** திருப்புத்தூர்வட்டத் தலைநகராகவும் ஊராட்சிமன்ற ஒன்றியத்தின் தலைநகராகவும் உள்ளது. இங்கு கி.பி. 1911 முதல் தாலுகா அலுவலகம் இருந்து வருகிறது. இது தவிர சிவகங்கை ஜமீன் தாலுகா அலுவலகமும் இருந்தது. ஜமீன் ஒழிப்பின் பயனாக இந்த அலுவலகம் அரசாங்கத் தாலுகா அலுவலகத்துடன் இணைந்தது. இதன் பின்னர் 1962-ல் காரைக்குடியில் ஒரு துணைத் தாசில்தார் அலுவலகம் ஏற்பட்டது. இதனால் இதன் அலுவலக எல்லை குறுகியுள்ளது. இங்குள்ள மக்கள் தொகை 18360 ஆகும்.

**ஊரும் பேரும் :** தற்காலத்தில் பேச்சு வழக்கில் திருப்பத்தூர் என்றும் எழுத்து வழக்கில் பெரும்பாலும் திருப்புத்தூர் என்றும், வழங்கப்படுகிறது. திருப்புத்தூர் என்பதுதான் சரியான பெயர். இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் 'திருப்புத்தூர்' என்றே குறிப்பிடுகின்றன. 'திருப்புத்தூரில் திருத்தளியான் காண்' என்று அப்பரும், "திருப்புத்தூரில் மருவியுறைதரு பெருமாளே" என்று அருணகிரி நாதரும், "திருப்புத்தூர் திருத்தளி படாரர்க்கு என்று கல்வெட்டுக்களும் குறிக்கின்றன. கி. பி. 18-ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'சிவகங்கைச் சரித்திரக் கும்மியும், அம்மானையும்' என்ற நூல் திருப்பத்தூர் என்றே குறிப்பிடுகிறது. கொன்றை வனமென்றும் இவ்வூருக்குப் பெயருண்டு. "தேன் துளிக்கும் நறும் கொன்றை வனத்திருக்கும் சிவனை" என்று மயூரகிரி புராணம் (பாடல் 67) கூறுகிறது.

வடஆர்க்காடு மாவட்டத்திலும் ஒரு திருப்பத்தூர் உள்ளது. மாவட்டம் கூறாது திருப்பத்தூர் எனப் பேசுவதும் எழுதுவதும் அந்நகரையே சுட்டும். இவ்வூரைக் குறிக்க 'இராமநாதபுரத்து திருப்பத்தூர்', என்று எழுதுவது இன்றியமையாதது. வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் பாடல் பெற்ற பதி அன்று. பாண்டிப் பதினான்கு பதிகளைச் சொல்லவந்த பாடல் ஒன்றில் தென்

திருப்புத்தூர் என்றே கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கு இரு திருப்புத்தூர்கள் இருந்ததை உணர்த்தும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடிக்கும், திருத்துறைப்பூண்டிக்கும் இடையே ஒரு திருப்பத்தூர் உள்ளது. முன்பு தமிழ்நாடு சட்டசபையில் 'கனம் திருப்பத்தூர் உறுப்பினர்' என்று அவைத்தலைவர் சொன்னவுடன் இருவர் எழுந்து பேச முயன்றதால் வேறுபாட்டைத் தெரிவிக்க இந்தத் தொகுதி 'திருக்கோட்டியூர்த் தொகுதி' என்ற பெயரால் 1957-67 வரை வழங்கி வந்துள்ளது.

தென் சிதம்பரம், புத்தூர், கொன்றைவனம், நவபுரம், கௌரிபுரம், வால்மீகிபுரம் என்றெல்லாம் பல பெயர்கள் உண்டு எனினும், புத்தூர் என்பதுதான் பெயர். திரு என்ற அடைமொழி சேர்ந்து திருப்புத்தூர் ஆயிற்று. கொன்றைவனமாக இருந்தது புதிதாக ஊராக ஆனமையால் புத்தூர் எனப்பட்டது என்று இவ்வூர்ப் பெயருக்குக் காரணம் கூறுவர். "புதிதாகத் தோன்றும் ஊர்கள் புத்தூர் எனப்படும். தேவாரப்பாடல் பெற்ற பாண்டி நாட்டுப் பதியொன்று திருப்புத்தூர் என்றே வழங்கி வருகிறது,"[2] என்று திரு ரா. பி. சேதுப்பிள்ளை கூறியுள்ளார். சேது புராணம் 'புத்தூர்' என்றே குறிப்பிடுகிறது. கௌரி வணங்கியதால் 'கௌரிபுரம்' என்றும், வால்மீகி வழிபட்டதால் வால்மீகிபுரம் என்றும் வழங்கப்படுகிறது. வால்மீகிபுரம் என்பதற்கு வேறொரு காரணமும் சொல்லப்படுகிறது. 'வால்மீகி' என்பதற்கு வடமொழியில் எறும்புப்புற்று என்று பொருள். எறும்புப் புற்றுகள் உள்ளதன் காரணமாக அழகிய எறும்புப் புற்றுகள் உள்ள ஊர் என்னும் பொருள்பட 'திருப்புத்தூர்' என வழங்கப்பட்டது என்றும் கூறப்படும்.[3] இவ்வூரில் உள்ள கல்வெட்டுகளில் தொன்மையான வரகுணனுடைய கல்வெட்டின் தமிழ்ப் பகுதியில் திருப்புத்தூர் என்றும் வடமொழிப் பகுதியில் 'நூதன கிராமம்'- புதிய கிராமம் என்று பொருள்படும் படியும் குறிப்பிடப்பட்டுள்ளது (137/1908). எனவே புதிய ஊர் என்ற அடிப்படையில் திருப்புத்தூர் என்பதே பழைமையான பெயராகும்.

---

2. ஊரும் பேரும்—பக்கம் 31. ரா. பி. சேதுப்பிள்ளை,
3. Ramnad District Gazetteer.

# சிறப்புச் செய்திகள்

**மருது பாண்டியர் :** இந்தியாவின் சுதந்திரப் போரில் ஈடு பட்டு, அமரத்துவம் பெற்ற, தமிழ்நாட்டின் மானங்காத்த மருது பாண்டியர் சமாதி திருப்புத்தூரிலுள்ளது. மருது சகோதரர் களுக்கும் திருப்புத்தூருக்கும் நிறையத் தொடர்பு உண்டு. இப்பொழுது இராமநாதபுரம் உள்ள பகுதி பண்டு மறவர் நாடாக விளங்கியது. சேதுபதி என்ற மறவர்கள் ஆண்ட இப் பகுதியைச் சேதுநாடு என்பர். இந்நாடு இப்போதுள்ள இராம நாதபுரம், சிவகங்கைச்சீமை, புதுக்கோட்டை, தஞ்சைப் பகுதி ஆகியவற்றை உடையதாய் விரிந்திருந்தது.

இவ்வளவு பெரிய நிலப்பரப்பு உள்நாட்டுப் போர் காரணமாக பவானிசங்கரன் என்பவன் ஆட்சியின் முடிவில் பல துண்டுகளாயிற்று. அவற்றில் பாம்பாற்றிற்கு வடபால் உள்ள பகுதிகளைத் தஞ்சையை ஆண்டவர் கவர்ந்து கொண் டனர். எஞ்சிய பகுதிகள் ஐந்து கூறாக்கப்பட்டன. ஐந்தில் மூன்றைக் கட்டயத்தேவர் என்பவர் எடுத்துக் கொண்டார். எஞ்சிய இருபகுதியைச் சசிவர்ண தேவர் என்பவர் எடுத்துக் கொண்டார். இவரே தனி அரசாக உருக்கொண்ட சிவகங்கைச் சீமையின் முதல் மன்னர். இந்நிகழ்ச்சி கி. பி. 1730-ல் நடை பெற்றது.

சிவகங்கை தனி அரசான முதல் தலைமுறையின், இறுதி யில் தோன்றியவர்கள் மருது பாண்டியர். நரிக்குடி முக்குளம் என்ற ஊரில் உடையான் சேர்வை என்ற மொக்கப் பழனி யப்பன் சேர்வைக்கும், அனந்தாயி என்ற அம்மையாருக்கும், கி. பி. 1748-ல் பிறந்தவர்களே பெரிய மருது, சின்னமருது என்பது செவிவழிச் செய்தி. மேலும் பின்னால் சிவகங்கைச் சீமைபற்றி நடந்த வழக்குகளின் குறிப்புகளினாலும் இது புலனாகிறது. இவர்களது பெயர் பிறந்த குடும்பத்தின் குல தெய்வப் பெயராகிய மருதப்ப சுவாமியின் நினைவாக வைக்கப் பெற்றது என்பது அறிஞர் கால்டுவெல் கருத்து ஆகும்.

இவர்களுடைய தந்தையார், அவர்காலத்தில் முத்து விஜய ரெகுநாத சேதுபதி படையில் படைத்தளபதியாய் விளங்கினார். கி.பி. 1772 ல் இராமநாதபுரம் சிவகங்கைச் சீமை மீது கர்னல் ஸ்மித்தின் படையெடுப்பு நிகழ்ந்தது. சிவகங்கை மன்னனும், பாஞ்சாலங்குறிச்சி மன்னனும் கப்பம் கட்டவில்லை. இப்பகுதியெல்லாம் அக்காலத்தில் நவாபு அரசரின் மேற்பார்வையிலிருந்தது. கர்னல் ஸ்மித்தை எதிர்த்துச் சிவகங்கை மன்னர் முத்துவடுகர் வீரப்போர் புரிந்து உயிர் துறந்தார். இப்போரில் அரசருக்குத் துணையாக விளங்கியவர்கள் முத்துவடுகரின் வீர மனைவி வேலு நாச்சியாரும் அவர் படைத்தலைவராய் விளங்கிய மருதுபாண்டியருமே. இச்சூழ்நிலையில் நான் சிவகங்கைச் சீமையின் அரசுரிமை மெல்லமெல்ல மருதுபாண்டியர் கைக்கு மாறியது.[1] மருது பாண்டியர் தன் சாதியினரல்லர், சேர்வைக்காரர்கள் என்பது தெரிந்தும், சுற்றி இருக்கும் பகை நெருப்புக்குச் சிவகங்கைச் சீமை இரையாகாதபடி காப்பாற்றி வாழ்விக்கத் தன்னினும் மருது சகோதரர்களே ஆயிரம் மடங்கு வல்லவர்கள் என்று வேலுநாச்சி நம்பினாள். அந்த உணர்வு ஓர் உயிர் சாசனமயே உருக்கொண்டது. அதன்படி சிவகங்கைச் சீமை மருது பாண்டியர் உடைமையாயிற்று.[2]

சிவகங்கையின் வரலாற்றில் மருதிருவர் ஆட்சிக்காலமே அறம் மலிந்த பொற்காலமாக விளங்கிற்று. கி.பி. 1783, 1789 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் ஏகாதிபத்திய படைகள் சீறிவந்தன. இவ்விரு படையெடுப்புகளும் திருப்புத்தூர் பகுதிகளில் நடந்திருக்கின்றன. இதைச 'சிவகங்கைக் கும்மியும் அம்மானையும்' என்ற அக்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியம் விரிவாகப் பேசுகிறது.

திருப்பத்தூரில் பத்து நாட்கள் கும்பினியாருடன் சண்டை நடந்திருக்கிறது. ஆனால் 1801-ம் ஆண்டில் நிகழ்ந்த ஏகாதிபத்திய படையெடுப்பு, சிவகங்கைச் சீமையின் வாழ்வைப் பொடியாக்கி விட்டது. இப்படையெடுப்புக்கு முக்கிய காரணம் மருதிருவர், பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் தம்பி ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்ததே ஆகும். இப்போரும் திருப்புத்தூரில் நடந்திருக்கிறது. மருது வீரர்களின்

---

1. 'கலைக்களஞ்சியம்' 2. 'மருதிருவர்' - திரு. ந. சஞ்சீவி.

படையிலுள்ள வீரர்கள் கூற்றாகப் பின்வரும் பகுதி சிவகங்கைச் சரித்திர அம்மானையில் அமைந்துள்ளது.

"தாமும் வைரவனைத் தாராளமாய்த் துதித்து
வேலெடுத்து கட்டாரி வீரன் மனத்திறமாய்க்
காலெனக் குதித்துக் கால் தளத்தைக் குத்தலுற்றான்
சோல்சர் பரங்கித் துடியான காப்பிரிகள்
மாசேனையுள்ள வயிற்கள் சகலோரும்
ஏகக் குரல் எழுப்பி இரைச்சல் வெகுவாகச்
சாகின்றோம் வீணாய்ச் சண்டாளன் ஊமையனால்
வந்தோந் திருப்பத்தூர் மண்ணில் சகலோரும்."

இப்போர் 28-5-1801-ம் நாள் தொடங்கி 27-10-1801-ல் மருது பாண்டியர் தூக்கில் இடப்பட்ட நிலையில் தான் முடிவுற்றது. ஏறத்தாழ 150 நாட்கள் இடையறாது நடந்த இப்போர் பற்றிய விவரங்களைக் 'கர்ணல் வெல்ஷ்' எழுதி வைத்துள்ள 'இராணுவ நினைவுகள்' என்ற நூல் தெரிவிக்கின்றது.

இவர்கள் அரசர் மரபினர் அல்லர் என்பதைப் பயன் படுத்திக் கொண்டு வெள்ளையாட்சியாளர்கள் சிவகங்கைக்குப் பொம்மை அரசர் ஒருவரைத் தேடிப்பிடித்து முடிசூட்டு விழா நடத்தினர். அதன் விளைவு மருது பாண்டியர் படைவலிமையைப் பெரிதும் தாக்கியது. மேலும் காசின் மீது ஆசை கொண்ட கருத்தான் என்ற மருதுவின் அந்தரங்கக் காவலனே கொடுத்த துப்பின் துணைகொண்டு வெள்ளையர்கள் மருதுபாண்டியரைப் பிடித்தனர். இவ்வீர சகோதரர்கள் 27-10-1801 - ல் திருப்பத்தூர் கோட்டையில் தூக்கில் இடப்பட்டனர். இவர்களை, "...மாநகர் திருப்புத்தூரில் தூக்குவதால், பட்டணத்தார் கண்ணால் பார்க்க வாரீர்", என்று வெள்ளையர் முரசறிவித்ததாகச் சிவகங்கைக் கும்மி சொல்லுகிறது.

மருது சகோதரர்கள் திருப்புத்தூர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுப், பிறகு திருப்புத்தூர்க் கோட்டை தென்மூலைக் கொத்தளத்தில் உள்ள அனுமார் கோயிலுக்கு வடபக்கத்திலிருந்த புளிய மரத்தில் தூக்கில் போடப்பட்டார்கள். இச்செய்தியைச 'சிவகங்கைச் சரித்திர கும்மியும், அம்மானையும்' என்ற நூலின் பகுதிகள் உறுதிப்படுத்துகின்றன. அவையாவன;

"திக்கோர் அறிய அக்கினி மேஸ்தர் இரண்டு
தென்னை மரத்தை வெட்டிவந்து
கோட்டையின் தென்கிழக்குக்
கொத்தளத்தின் மேலேந்தி
தாட்டீகன் அக்கினீசு மேஸ்தர்
சமதையாய் இரண்டு மரம் நாட்டி
ஊஞ்சல் எனவே நூல்கயிறு
உருவுஞ் சுருக்கிலதிலேத்தி
பாஞ்சைநகர்க் கட்டபொம்மை
பண்டுமுன் தூக்கில் போட்டாற்போல
பெரியமருதேந்திரனை அக்கினீசு
பிரபல தவிசில் போடுமென்றார்
துருசாய்த்தவசு செய்ய
துரைமருதே சீக்கிரம் செல்லுமென்றார்
விரசாய் வெள்ள மருதேந்திர துரை
வீரன் வெகு வேகமுடன்
உரசாகவே கொத்தளந்தனிலேறி
உயர்ந்த கயர்ச் சுருக்கு கழுத்திலிட்டு
திரசாகவே காளீசர் பதத்தைச்
சிந்தையில் தியானம் செய்துகொண்டு
அரசாண்ட வெள்ள மருதேந்திரன்
அரனடிப் பாதத்தில் சேர்ந்தாரப்போ
பழிக்கஞ்சா மேஸ்தர் அக்கினீசு
பாங்காக வெகு இறுமாப்பாய்
கிளிக்கூடு செய்து சின்னமருதை
கெட்டியாய் அதில் போட்டடைத்து
ஊஞ்சல் எனத் தவசில் சின்னமருது
உறங்கியே ஊஞ்சலாடினாரே
பாஞ்சைநகர் ஊமையனால் நமக்குப்
பலித்ததருந் தவசு என்றே
திருப்பத்தூர் தன்னில் வளர்
திருத்தளீசர் சேர்வை புரிந்திருந்தார்"

"திருப்பத்தூர் கோட்டைதன்னில்
தென்மூலைக் கொத்தளத்தில்

சிறப்புடன் தவசு ரெண்டு தெங்கிளநீர் மரத்தை நன்றாய்
விருப்பமாய் நாட்டி மேலே விட்டமும் போட்டு ஊஞ்சல்
பொருப்பு நால் கயிறு ரெண்டு போதவே நாட்டினாரே"

"திருப்பத்தூர் தன்னில் திருத்தளி நாதரருள்
சிறப்புடைய கால வயிரவர் பாதம்
சேவை புரிந்து இருவர் செய்தார் அருந்தவசு"

திருப்புத்தூரில் மருது வீரர்கள் தூக்கிலிடப்பட்டதை அறிந்ததும், அம்மாவீரர்களின் ஊரான அருப்புக்கோட்டைத் தாலுகா நரிக்குடி முக்குளத்திலிருந்து அன்னார்களின் வாரிசுதார் பெருமாள்சேர்வை என்பவர் திருப்புத்தூர் வந்து ஆட்சியாளரிடம் அந்த மாவீரர்களின் வாரிசு என்பதைத் தெளிவுபடுத்தி தூக்கில் தொங்கிய அந்த வீரர்களின் இரண்டு சடலங்களையும் வாங்கி, "திக்கெல்லாம் போற்றும் திருப்பத் தூர்க்கோட்டை, சிங்காரத்தோப்பு" என்று 'சிவகங்கைச் சரித்திர கும்மி, புகழ்கின்ற திருப்புத்தூருக்கு மேற்கே உள்ள சிங்காரத் தோப்பு என்னுமிடத்தில், அதாவது தற்சமயம் சுவீடிஷ்மிஷன் ஆஸ்பத்திரி உள்ள இடத்தில் அடக்கம் செய் தனர். அடக்கம் செய்த இடத்தைப் பாதுகாக்க வேண்டும்; முன்னோர்களான மாவீரர்களுக்கு மரியாதை செய்யவேண்டு மென்று வாரிசுகள் திருப்புத்தூரிலேயே தங்கிவிட்டனர். அன்றி லிருந்து அவரும் அவருடைய வாரிசுதாரர்களும் அடக்கம் செய்த இடத்தைப் பாதுகாத்துக் கொண்டு, சமாதிக்கு மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் சுவீடனிலிருந்து இங்கு வந்து கண் வைத்தியம் பார்த்துவந்த டாக்டர் கூகல்பர்க் அவர்கள் சிவகங்கைச் ஜமீன்தாரிடமிருந்து இனாமாக சிங்காரத் தோப்பில் $17\frac{1}{2}$ ஏக்கர் வாங்கி, அந்த மாவீரர்களை அடக்கம் செய்திருந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்காக, சமாதியின் அடையாளச் சின்னமாக வானளாவி நின்ற இரண்டு வில்வ மரங்களை வெட்டியபோது, மருது பாண்டியர்களின் வாரிசு தாரருக்கும், ஆஸ்பத்திரி நிர்வாகத்தாருக்கும் மோதல் ஏற்பட்ட தில் சர்க்கார் தலையிட்டு அந்த மாவீரர்களின் சமாதியிலும் பக்கத்திலும் எதுவும் செய்யக்கூடாது என்று தடுத்துவிட்டது.

"திருப்புத்தூரிலுள்ள இந்த வாரிசுதாரர்கள் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன், மருது பாண்டியர் தூக்கில் இடப்பட்ட 100 ஆண்டுகளுக்குப் பின்னர், பிரிட்டிஷ் அரசு உத்தரவிற்கிணங்க முறைப்படியும் சட்டப்படியும் தாங்கள்தான் வாரிசுதாரர்கள் என்றும், தங்களிடம் சிவகங்கைச் சீமை ஜமீனை ஒப்படைக்க வேண்டும் என்றும் வழக்குத் தொடர்ந்தனர்.

இன்றும் அனுமார் கோவிலின் வடபக்கத்தில் பழைய மார்க்கெட் என்று சொல்லப்படுமிடத்தில் ஒரு புளியமரம் நிற்கிறது. இதுபுதிய மரம் என்றும், இதற்குமுன் பழையமரம் ஒன்று இங்கு இருந்தது என்றும், இதில்தான் மருதுபாண்டியர் தூக்கில் இடப்பட்டனர் என்றும் சொல்கிறார்கள்.

சுவீடிஷ் மருத்துவமனையின் வலதுபுறமாக மருதுபாண்டியரின் சமாதி இருக்கிறது. மிக அமைதியான சூழ்நிலை காணப் படுகிறது. இரண்டு பாறாங்கற்கள் சமாதிக்கு அடையாளமாக வைக்கப்பட்டுள்ளன. வேறு எந்த கட்டிட அமைப்பும் இல்லை.

'தாங்கள் மாண்டதும் தங்கள் உடலைத்திருப்புத்தூரிலும் தலைகளைக் காளையார் கோயிலிலும் புதைக்க வேண்டும் என்பதே அவர்கள் வேண்டுகோள். அவர்களுடைய இறுதி ஆசையும் பிரார்த்தனையும் குறைவின்றி நிறைவேறின. அதன்படி அவர்களது தலைகள் காளையார் கோயில், கோவிலின் சந்நிதிக்கு எதிரிலும், உடல்கள் திருப்புத்தூரிலும் புதைக்கப்பட்டன' என்பர்.[1] ஆனால் காளையார் கோயிலில் அவர்கள் தலைகள் புதைக்கப்படவில்லை. இரண்டுமே திருப்புத்தூரில் புதைக்கப்பட்டன. தூக்கிலிடப்பட்ட பிணத்தை மூன்று நாட்கள் கழித்து எடுத்துப் புதைக்கும் போது, அவற்றை தலை வேறு உடல்வேறாகப் பிரித்து காளையார் கோயிலுக்குக் கொண்டு போக வாய்ப்பில்லை என்றும் கூறுகிறார்கள்[2].

திருப்புத்தூரில் வசிக்கும் மருதுவின் வாரிசுதாரர்களும், அவர்கள் உறவினர்களும், விசேடதினங்களில் மருது வீரர்களின்

---

1. 'மருதிருவர்'-திரு. ந. சஞ்சீவி.
2. மருது பாண்டியரின் வாரிசுதாரர் திரு தங்கசாமி சேர்வை.

சமாதிக்குச் சென்று சமாதியில் மலர் மாலை வைத்து, பொங்கல் இட்டு வழிபடுகிறார்கள். ஏதாவது இடையூறு ஏற்பட்டால் அது நீங்க வேண்டும் என்று மருது சமாதிக்கு வேண்டிக் கொள்கிறார்கள். குழந்தை பிறந்தால் குறிப்பிட்ட நாள் கழிந்ததும் அதை மருது சமாதிக்கு எடுத்துச் சென்று சமாதி மண்ணைக் குழந்தைக்குப் பூசுகின்றனர். குழந்தையும் அவர்களைப் போல வீரமாக இருக்கவேண்டும் என்பதனால் இவ்வாறு செய்கிறார்கள். அவர்கள் குடும்பத்தினர் பெயர்கள் பெரும்பாலும் மருது பாண்டியன், சுந்தரபாண்டியன், வெள்ளைமருது, சின்னமருது சேர்வை, மொக்கைப் பாண்டியன், வேலுநாச்சியார் என்பன போன்றே காணப்படுகின்றன.

திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் வயிரவர் சன்னிதிக்கு முன்னால் உள்ள மண்டபத்தில் மருது சகோதரர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இந்தமண்டபம் இவர்களால் கட்டப்பட்டது என்பர். திருப்புத்தூரில் இவர்கள் ஒரு சத்திரமும் கட்டியுள்ளார்கள் என்பர். திருப்பத்தூர் பைரவர்மீது மருதரசுக்கு மிக்க ஈடுபாடு உண்டு. அங்கு கோயில் கொண்டுள்ள இறைவரின் மார்பில் 'மருது சேர்வை' என்று பெயர் பொறித்த பதக்கம் உள்ளது என்றும் கூறுகின்றனர்.

**கோட்டை :** திருப்புத்தூரில் பண்டு ஒரு பெரிய கோட்டை இருந்திருக்கிறது. தற்போது அக்கோட்டையின் இடிந்த பகுதிகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. இக்கோட்டை யாரால் கட்டப்பட்டது என்று சரிவரத் தெரியவில்லை. இவ்வூர் மக்கள், 'ஆதிசந்திர பாண்டியன் கட்டியது. 1000 வருடத்திற்கு முற்பட்டது' என்று சொல்லுகிறார்கள். சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்கள் காலத்தில், ஆங்கிலேயருக்கு எதிராக அவர்கள் உரிமைக்குரல் எழுப்பிய காலத்தில், திருப்புத்தூர் கோட்டை இடிபாடுகள் இல்லாமல் முழுமையாக இருந்திருக்கிறது. முக்கியத்துவம் பெற்றும் திகழ்ந்திருக்கிறது. ஆங்கிலேயருக்கும் சிவகங்கைக்கும் இடையே போர் நடந்த காலத்தில்தான் கோட்டை இடிந்திருக்க வேண்டும். 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 'சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும்' என்ற நூலில் திருப்புத்தூர்க் கோட்டைச் சிறப்பாகப் பேசப்படுகிறது.

"தேரும் திருக்குளமும் சிவாலயமும்
சிறந்த திருப்புத்தூர்க் கோட்டை"

"திக்கெல்லாம் போற்றும் திருப்புத்தூர்க்
கோட்டைச் சிங்காரத்தோப்பு"[6]

கோட்டைக்குள் படைவீடு கொத்தளங்கள் இருந்திருக்கின்றன.

"திருப்புத்தூர்க் கோட்டைத் தென்மூலைக்
கொத்தளந்தான்"[7]

"தேரும் திருக்குளமும் சிவாலயமும்தான் சிறப்பாய்
ஊரும் பெரிதான ஊடையமும் கோட்டைகளும்
வாடி புருட்டிகளும் மதிலுமதில் கட்டரிப்பும்
தேடியே அக்கினீசு திருப்புத்தூர் வந்து நின்றான்"[7]

தற்போது எஞ்சியுள்ள கோட்டையின் இடிந்த பகுதிகளைக் கொண்டு கோட்டை வட்ட வடிவமாக இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. கோட்டைச் செங்கற்கள் கனத்தில் குறைவாக, ஆனால் நீளமாக இருக்கின்றன. முன்பு கோட்டைக்குள்தான் ஊர் அமைந்திருக்க வேண்டும். தற்போது ஊர், கோட்டைக்கு வெளியே வெகுவாக விரிந்திருக்கிறது.

இந்தக் கோட்டைச் சுவரை ஒட்டி மக்கள் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மதில் சுவற்றைத் தெய்வமாகவே மதிக்கிறார்கள். கோட்டையின் நாற்புறமும் பாதுகாப்புத் தெய்வங்கள் இருந்திருக்கின்றன. அக்கோயில்கள் இன்றும் உள்ளன. ஊருக்குள் நுழைந்தவுடன் கிழக்கில் இருப்பது கோட்டைக் கருப்பர் கோயில். இதையொட்டி மதில் சுவர் வளைந்து செல்கிறது. கோட்டைக்கு வெளியே உள்ள அகில் (அகழி) என்னும் குட்டை குளங்களையும், அகில்மனைத் தெருவையும் இன்றும் காண்கிறோம்.

கோட்டைச் சுவரே திருத்தளிநாதர் கோயிலின் வடமதில் சுவராக உள்ளது. கோட்டைக்கு வெளியேதான் ஸ்ரீ தளி ஊருணி அமைந்திருந்திருக்கிறது. தெம்மாபட்டு, புதுப்பட்டி, தம்பிப்

6. சிவகங்கைச் சரித்திரக் கும்மி.
7. சிவகங்கைச் சரித்திர அம்மானை.

பட்டி, மேட்டுப்பட்டி போன்ற இடங்கள் கோட்டையைச் சுற்றி விரிந்துள்ளன.

கோட்டை எப்பொழுது கட்டப்பட்டது என்பது குறித்துப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. இக்கோட்டை மருதுபாண்டிய ரால் கட்டப்பட்டது என்பர் சிலர்.[8] இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதிகளால் கட்டப்பட்டது என்ற கருத்தும் நிலவு கிறது. கி.பி. 1711-1725-ல் ஆண்ட விஜயரெகுநாத சேதுபதி திருப்புத்தூர் கோட்டையைக் கட்டினார். இக்கோட்டையின் காரணமாக திருப்புத்தூர் தாலுகாவிற்கு மள்ளாக்கோட்டைத் தாலுகா என்று பெயர் வந்திருக்கலாம் என்றும் சொல்லப்படு கிறது.[9] ஆனால் சேதுபதிகளால் இக்கோட்டை கட்டப்பட்டது என்பது பொருந்துவதாக இருந்தாலும், விஜய ரெகுநாத சேதுபதிக்கு முன்பே இக் கோட்டை கட்டப்பட்டது என்று கருத இடமுண்டு.

திருமலை நாயக்கரின் பெயரர் சொக்கநாத நாயக்கர் கி.பி. 1682 வரை ஆண்டார். மதுரையை முஸ்லீம் படைகள் தாக்கிய போது. அப்போது இராமநாதபுறப்பகுதியை ஆண்ட திருமலை, சேதுபதி தமக்குப் படையுதவி செய்யாததற்காக, சேது மன்னரு டன் போர் தொடுத்தார். மறவர் சீமையில் புகுந்து திருப்புத் தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார் கோயில் ஆகிய இவையனைத்தையும் கைப்பற்றினார். சேதுபதியோ திருப்பத்தூர் முதலிய கோட்டைகளை இழந்தமைக்காக மனம் கலக்கமுறாமல் மேற்கொண்டு போர் நடத்தினார். இச்சமயத் தில் சொக்கநாதர் மதுரையில் சமயச் சார்பான விழாவை முன்னிருந்து நடத்த வேண்டியவராய் இருந்ததால், போர்ப் பொறுப்பைத் தம் படைத்தலைவரிடம் ஒப்புவித்து மதுரை திரும்பினார். சேதிபதியோ இப்படைத் தலைவர்களோடு போரிட்டு திருப்புத்தூர் முதலிய கோட்டைகளை மீட்டார். திருமலை சேதுபதி கி.பி. 1702-ல் மதுரை நாட்டுடன் இருந்து வந்த தொடர்பை அறுத்துக் கொண்டு முழு உரிமை மன்னர் ஆனார். உடனே இராமநாதபுரக் கோட்டைகளைச்

8. சோமலெ - இராமநாதபுர மாவட்டம்.
9. Ramnad District Gazetteer. Page 981.

சீர்திருத்தி வலிவுள்ளதாக்கினார்[10] எனத்தெரிகிறது. எனவே கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கோட்டை கட்டப்பட்டதாகக் கொள்ளலாம். இராமநாதபுரத்திலிருந்து சிவகங்கைச் சீமை பிரிந்த போது திருப்புத்தூர்க் கோட்டை சிவகங்கை ஆட்சியின் கீழ் வந்தது.

''ஆலமரத்தை வெட்டுங்கடி
ஆளுக்கொரு கட்டாய்க் கட்டுங்கடி—இந்தக்
கூலி கொடுக்காத கோட்டை சாயுபைக் கூப்பிட்டு''

என ஒரு நாட்டுப்பாடலில் இன்றும் கோட்டையைப் பற்றிய குறிப்பு வழங்கி வருகிறது.

10. திரு. அ.கி. பரந்தாமனார் - மதுரை நாயக்கர் வரலாறு - பக்கம் 276, 337.

# சமுதாயச் செய்திகள்

இந்துக்கள், முகம்மதியர்கள், கிறித்துவர்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து வாழ்கின்ற ஒரு சமுதாயத்தை நாம் திருப்புத்தூரில் பார்க்கமுடிகிறது. இந்துக்களுள் அகமுடையார், இசை வேளாளர்கள், சோழிய வேளாளர்கள் அல்லது பிள்ளை மார்கள், கோனார்கள், ஹரிஜனங்கள் ஆகியோர் வசிக்கிறுர்கள். இவர்களுள் முகமதியர்களும், சேர்வைக்காரர்கள் எனப்படுகிற அகமுடையார்களும் தான் எண்ணிக்கையில் அதிகமாக வசிக்கிறார்கள்.

இவ்வூர் மக்கள் அனைவராலும் சமய வேறுபாடுஇன்றி திருத்தளிநாதர் கோயிலிலுள்ள 'பைரவர்' மிகச் சக்தி வாய்ந்த வராகக் கருதப்படுகிறார். சிறு குழந்தைகளுக்கு கக்குவான் இருமல் வந்தால் பைரவருக்கு முடி இறக்குவதாக வேண்டிக் கொண்டால் கக்குவான் இருமல் நின்றுவிடும் என்று சொல் கிறார்கள். கிறித்தவர்களும், முகமதியர்களும் பைரவருக்கு முடி இறக்குவதோடு, பைரவரை எழுந்தருளப் பண்ணி னால் காலரா போன்ற நோய்கள் நின்றுவிடும் என்றும் நம்பு கிறார்கள்.

## முகமதியர்கள்

திருப்புத்தூரிலுள்ள பெரும்பான்மையான முகம்மதியர் கள், 'இஸ்லாமானவர்கள்' என்றே குறிப்பிடப்படுகிறார்கள். இதுவே இவர்கள் இந்துக்களாயிருந்து முகமதிய மதத்தைத் தழுவியவர்கள் என்பதைத் தெரிவிக்கிறது. பெரும்பாலும் பிள்ளைமார்களும், கோனார்களும்தான் இஸ்லாமானார்கள் என்று சொல்கிறார்கள்.

திருப்புத்தூரில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் தொடக் கத்திலேயே முகம்மதியர் குடியேற்றம் தொடங்கியிருக்கிறது. திருப்புத்தூருக்கு மிக அண்மையில் உள்ள சுண்டைக்காட்டு வேலங்குடியைப் பிரச்சாரத்தலமாகக்கொண்டு இஸ்லாம் மதத்

தைப்பரப்பினர். அரேபியாவிலிருந்து வந்த 'கானுமியா ஒளி' என்பவரின் வம்சாவளியினர் சுமார் பத்துக் குடியினர் இன்னும் திருப்புத்தூரில் வசிக்கிறார்கள். அவர்களே இங்குள்ள பள்ளிவாசல்களுக்கு, லபேக்கள் (குருமார்கள்) ஆவர். கானுமியா ஒளி திருப்புத்தூரில் தவறிய காலத்தில் தனக்குக் 'கோரி' (சமாதி) கட்டக்கூடாது என்று கூறினாராம். அதனால் அவருக்குக் கோரி கட்டப்படவில்லை. ஆனால் அவர் நினைவாக 'அகோரி' (கோரி அல்லாதது), 'கானுமியா ஒளி தர்க்கா' என்று ஒரு தர்க்காவைக் கட்டினார்கள். இத்தர்க்கா, திருப்புத்தூரிலிருந்து புதுகைக்கோட்டைக்குச் செல்லும் ரோட்டில் உள்ளது. மருதுசகோதரர்கள் இதற்கு மானியம் கொடுத்திருக்கிறார்கள். இக் கானுமியா ஒளி பிரச்சாரம் செய்தபோது திருப்புத்தூரிலுள்ள சேர்வைக்காரர்களில் ஒரு பகுதியினர் இஸ்லாம் மதத்தைத் தழுவினார்கள். இவர்கள் இந்துக்களாயிருந்து முகமதியர் ஆனமையால், இவர்களுக்கு அன்றைய காலம்போல இன்றைக்கும், நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்புவரை, ஊர் மரியாதை, கோயில் மரியாதை ஆகியவை இருந்துவந்திருக்கின்றன.

தென்னுட்டின் மீது மாலிக்காபூர் படையெடுத்து வருவதற்கு முன்னரே, முஸ்லீம்கள் ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் நுழைந்து, பாண்டிய மன்னர்களின் படைத் தொழிலில் ஈடுபடலாயினர். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் (கி.பி.1216—1238) ஒரு கழனிக்கு துளுக்கராயன் குழி என்று பெயர் வழங்கி வந்திருக்கிறது. இன்று திருப்புத்தூரில் சுமார் 5000 முகமதியர்கள் அச்சுக்கட்டுப் பகுதியிலும், பட்டாணிகர் தெருவிலும் வசிக்கிறுர்கள். பட்டாணியர்கள் சுமார் 100 பேர் இருக்கிறுர்கள். இவர்கள் தங்களை வடஇந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள்.

கி. பி. 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மருது சகோதரர்களுக்கும், கவுரிவல்லப தேவனுக்கும் காளையார் கோயில் கன்மாய்க் கரையில் போர் நடந்த காலத்தில், ஆங்கிலேயர் கவுரி வல்லபனுக்கு உதவிசெய்தனர். அப்போது ஆங்கிலேயருக்கு உதவியாக ஆர்க்காட்டு நவாப்பினால் அனுப்பப்பட்டவர்களின் வாரிசுகள்தான் அச்சுக்கட்டுப்பகுதி

யில் வசிப்பவர்களுள் பெரும்பான்மையோர் ஆவர். இப்போரில் 'ஷேக் இமாம்' என்ற தளபதி இறந்தான். அவனுக்காக எடுக்கப் பட்ட கோரி, அச்சுக்கட்டுப் பகுதியில் உள்ளது. கவுரி வல்லபனால் கொடுக்கப்பட்ட மானியம் இச்சமாதிக்கு உண்டு.

கி.பி. 1310-ல் மாலிக்காபூர் பாண்டிநாட்டின் மீது படை யெடுத்து வந்தபோது, மாலிக்காபூரினால் அனுப்பப்பட்ட 'சமஸ்கான் சாகேப்' என்பவர் திருப்புத்தூரில் இறந்தார். இவருக்குச் சமாதி, பட்டாணியர் தெருவில் உள்ளது. இதற்கு பிற்காலத்தில் மருது சகோதரர்களால் அளிக்கப்பட்ட மானியம் உள்ளது என்கிறார்கள்.

இங்குள்ள முக்மதியர்களில் பெரும்பாலோர் திருத்தளி நாதர் கோயிலில் எழுந்தருளியுள்ள பைரவருக்கு முடியிறக்கு கிறார்கள். சனீஸ்வரர், திருத்தளிநாதர், பைரவர் ஆகியோருக்கு அர்ச்சனைகள் செய்கிறார்கள். வீட்டில் திருமணம் போன்ற விசேடங்கள் நிகழ்ந்தால், திருத்தளிநாதரை வணங்கிச் செல்லு கிறார்கள்.முகமதியர்கள் விசேட காலங்களில் பள்ளிவாசலில் கொழுக்கட்டை செய்து வைத்துக் கும்பிடுகிறார்கள். இவர்கள் உருதும் தமிழும் பேசுகிறார்கள். பெரும்பாலும் இங்குள்ள முகமதியர்களுக்கு விவசாயமே தொழில் ஆதலால், பொங்கல் பண்டிகையும் இவர்களால் கொண்டாடப்படுகிறது.[1]

பட்டாணியர்களும், இந்துக் கடவுளரை வணங்குகின்றனர். திருப்புத்தூரிலிருந்து மதுரைக்கு செல்லும் பெருவழியில் 'வாணி யன் கோவில்' என்று ஒரு ஐயனார் கோவில் உள்ளது. இங்குள்ள ஒரு கருப்பருக்கு 'பட்டாணிக் கருப்பு' என்று பெயர். இவர் தொப்பியும், மீசையுமாக ஒரு போர் வீரனைப் போல இருக்கிறார். கி. பி. 18-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பமாக இருக்கலாம். இதற்கு, பட்டாணியர்கள் வேண்டிக் கொண் டால், $1\frac{1}{4}$ பணம் (15 காசு) கொடுப்பார்கள். குழந்தை பிறந் தால் இங்கிருந்து விபூதி வாங்கிக் கொண்டுபோய் பூசுவார்கள்.

**அகம் படையர்கள் :** இவர்கள் சேர்வைக்காரர்கள் என்றும், அகம்படியர் என்றும், அமுடையார் என்றும், அகம் படையார் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர்களும்

1. செய்தியளித்தவர்கள் திருப்பத்தூர் வாழ்முகமதியர்கள்.

திருப்புத்தூரில், எண்ணிக்கையில் அதிகமாக வசிக்கின்றார்கள். கி. பி. 17-ம் நூற்றாண்டின் இறுதியில், சிவகங்கைச் சீமையை ஆண்ட மருதுபாண்டியர், அகம்படையர் வகுப்பில் உதித்தவர்களே. ராஜகுல அகம்படையர் என்றும், கோட்டைப்புற அகம்படையார் என்றும் இரு பிரிவினர் இவர்களில் உண்டு, தமிழகத்தில் பரவலாக இந்த இனத்தினர் வசிக்கிறார்கள்.'

'அகம்' என்ற அடிச் சொல்லிருந்து அகமுடையார் என்பது வந்திருக்கவேண்டும். அகம் என்பதற்கு உள், வீடு, நிலம் என்றெல்லாம் பொருள் கொண்டால் இவர்கள் நிலமுடையவர்கள், வீடுடையவர்கள் என்றெல்லாம் பொருள்படும். இவர்களுடைய தோற்றத்தைக் குறித்து அகலிகை, கவுதமர், இந்திரன் ஆகியோரைத் தொடர்புபடுத்திப் பல கதைகள் கூறுகிறார்கள். அகலிகைக்குப் பிறந்தவர்களே அகம்படியர் என்றும் சொல்லப்படுகிறது.

இவர்கள் சிறு தேவதைகளான அய்யனார், பிடாரி, துர்க்கை மாரியாத்தா, கருப்பண்ணசாமி போன்ற தெய்வங்களை வணங்குகிறார்கள். இவர்கள் தெய்வங்களை வணங்கும் போது, பாடல்பாடி, குலவையிட்டு (குரவை) வணங்குவது வழக்கம். குறிப்பிட்ட விசேட தினங்களில் மாரியம்மன் கோயில் போன்ற பொது இடங்களில் பெண்கள் கூடி, குலவையிட்டு, கும்மியடித்து வணங்குவார்கள். குலவையிட்டுப் பாடுகின்ற சில மாரியம்மன் பாடல்கள் கிடைத்துள்ளன.[4]

"அஞ்சடுக்குக் கிண்ணங்களாம் அது நிறைஞ்ச மல்லிகைப்பூ
குனிஞ்செடுக்க மாட்டாமல்
கோபம் கொள்வாள் மாரியாத்தா
ஆத்து மணலைச் சோறாக்கி ஆவரமொட்டைக் கறியாக்கி
மின்னட்டாம் பூச்சியை விளக்கேத்திப்
பின்னாலே வாராளாம் மாரியாத்தா

---

2. அகம்படியர்கள் பற்றிய குறிப்பு கொடுத்து உதவியவர் திருப்புத்தூரிலுள்ள திரு. வீரபத்திரர் ஆவர்.

3. Casts & tribes of South India — E. Thurston

4. இப்பாடல்களைத் தொகுத்தளித்தவர் காரைக்குடி இராமசாமித் தமிழ்க் கல்லூரி மாணவி மீனாட்சி.

எல்லாரு வாசலிலே எண்ணை ஊத்தி விளக்கெரியுது
மாரியாத்தா வாசலிலே எளநித் தண்ணி நின்னெரியுது
எல்லாரு வாசலிலே கல்லும் கரட்டையுமாம்
மாரியாத்தா வாசலிலே கொட்டும் குலவையுமாம்
ஊசி நுழையாத உடைமுள்ளாம் காட்டுக்குள்ளே
ஒத்த குதிரை போட்டு வாராளாம் மாரியாத்தா
வருவாளாம் மாரியாத்தா வரமும் கொடுத்திடுவாள்
வந்தவினை தீர்த்திடுவாள் வளமான மாரியாத்தா
யாரும் நுழையாத அரிச்சந்திர காட்டுக்குள்ளே
ஆகாயத் தண்ணிப்பந்தல் வைக்கிறாளாம் மாரியாத்தா
காந்த லைட்டுக்களாம் பேண்டுவாத்திய மேளங்களாம்
பாளையிலே மதுப்போட்டு பார்வையிடுவாள் மாரியாத்தா
காசு ஓலை களிப்பாக்காம்
களிமடல்போல் வெற்றிலையாம்
நீருபோல் சுண்ணாம்பாம்
நித்தம் முழுங்குவாள் மாரியாத்தா''
''காலை ரயிலேறி கல்கத்தா போயிறங்கி
மாலை ரயிலேறி மாயவரம் போயிறங்கி
அந்தி ரயிலேறி ஐகோர்ட்டுப் போயிறங்கி
கோர்ட்டு திறந்தபிறகு, குறிச்சியிலே போயமர்ந்து
சர்ச்சியுடன் வழக்குப்பேசி ஐயிச்சுவந்தாள் மாரியாத்தா'
''நூலும் சிறுநூலாம் முத்தும் சிறு முத்தாம்
சிந்தாமல் கோர்ப்பாளாம் செல்லப்புள்ளை மாரியாத்தா
மதுவாம் மதுக்குடமாம் மதுக்கேத்த பொண்டுகளாம்
பொண்டுகளை முன்னேவிட்டு
பெருமை பேசுவா மாரியாத்தா
ஈரச் சொளகுளே சீரான மத்தாப்பாம் சீராகப்
புறப்படுவாள் செல்லப்புள்ளை மாரியாத்தா''
''ஆனைவாரதப் பாருங்களே
ஆனை அசைஞ்சு வாரதப் பாருங்களே
ஆனைத்தடம் போல— நம்மூரு
மாரியின் அட்டியின் மின்னலைப் பாருங்களே.
குதிரைவாரதப் பாருங்களே
குதிரை குதிச்சு வாரதப் பாருங்களே
குதிரைத் தடம்போல நம்மூரு மாரியின்

கொலுசு மின்னலைப் பாருங்களே
தெருக்கூட்டி மணப்பரப்பி
தென்னம்பாளையை விரிச்சுணத்தி
தெருக்கிடக்கிற சிங்காரத்தை
திரும்பிப்பார்ப்பாளாம் மாரி யாத்தா"

**கிறித்துவர்கள்**

இவ்வூரில் நிறைய கிறித்துவ தேவாலயங்கள் உள்ளன. ஸ்வீடிஷ் மிஷன் ஏற்படுத்திய மருத்துவ மனையை ஒட்டித் திருப்புத்தூரில் உண்டான தேவாலயம் தற்போது தென்னிந்திய தேவாலயமாக விளங்குகிறது. இங்குள்ள கிறித்துவர்கள் பெரும்பாலோர் வேளாளர்களிலிருந்து மதம் மாறியவர்களே' இவர்கள் தங்களை வேளாளக் கிறித்துவர்கள் என்றே கூறிக் கொள்கிறார்கள். இவர்களும் திருத்தளிநாதர் கோயில் பைரவருக்கு வேண்டிக் கொண்டு முடியிறக்குகிறார்கள். திருப்புத்தூரைச் சுற்றியுள்ள கல்லல், சிவரக்கோட்டை, சறுகணி போன்ற ஊர்களிலிருந்தும் கிறித்துவர்கள் திருத்தளி நாதர் கோயிலுக்கு வருகிறார்கள். இவர்களுடைய பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் இந்துக்களைப் போலவே உள்ளன. இந்துக்கள் தை மாதத்தில் பொங்கல் வைப்பதைப் போல, இவர்களும் தை மாதத்தில் 'அந்தோனியார் பொங்கல்' வைக்கிறார்கள். திருப்புத்தூரின் தென்பகுதியான தெம் மாம்பட்டைச் சுற்றிலும், சப்பரத்தில் அந்தோனியாரை ஊர் வலமாக எடுத்துச் செல்கின்றனர். ஊர்வலத்தின் போது உப்பும், மிளகும் தூவுகிறார்கள். இந்த நிகழ்ச்சியில் இந்துக்களும் கலந்துகொள்கிறார்கள். புது வருடப் பிறப்பு, கிறிஸ்துமஸ் போன்ற விசேடங்களின்போது, காப்பரிசியோடு மற்ற பலகாரங்கள் செய்து உற்றார் உறவினருக்குக் கொடுத்து மகிழ்கிறார்கள். குழந்தை பிறந்த ஒரு மாதத்திற்குள் ஞானஸ்தானம் செய்து பெயர்வைக்கிறார்கள்.

இவ்வூரில் மற்றும் இசைவேளாளர், சோழிய வேளாளர், கோனார்கள், ஹரிஜனங்கள் ஆகியோரும் வசிக்கிறார்கள். முகமதியர், கிறித்துவர், சோழியவெள்ளாளர், ஹரிஜனங்கள் ஆகியோருக்குத் தனித்தனியே சுடுகாடுகள் உள்ளன.

# புராணச் செய்திகள்

வடமொழியிலும், தமிழ் மொழியிலும் திருப்புத்தூர் பற்றித் தலபுராணங்கள் உள்ளன. இத்தலமான்மியம், மகாஸ் காந்த புராணத்தில் வடசங்கர சங்கிதையிலும் உரைக்கப்பட்டுள்ளது. தமிழில் திரு. ராய. சொக்கலிங்கம் அவர்கள் திருப்புத்தூர் புராணத்தை இயற்றியுள்ளார்கள்.

பாண்டிநாட்டுத் திருப்புத்தூர் சிற்சபையில் சிவபெருமான் கௌரிதாண்டவம் ஆடினார் என்று மயிலை. சீனி. வேங்கடசாமி 'இறைவன் ஆடிய எழு வகைத் தாண்டவங்கள்' என்ற நூலில் கூறியுள்ளார். திருப்புத்தூர் தலபுராணமும் இக்கருத்தை வலியுறுத்துகிறது. திருப்புத்தூர் ஆதியில் கொன்றைவனமாக இருந்ததாகவும், இங்கு தான்தோன்றியாய் இறைவன் பேரிலிங்கமாய் இருந்தான் எனவும், அம்மூலத்திலிருந்து கிளைத்த கிளைகளாக வடகிழக்கில் ஒரு சிவமூர்த்தமும், மேற்கில் ஒரு சிவமூர்த்தமும், திருத்தளிச் சுற்றில் எட்டுலிங்கங்களும் விளங்கின என்றும், இறைவி இங்கு வந்து அஷ்டலிங்க பூஜை செய்தாள் என்றும் புராணம் கூறுகிறது. சிவகங்கைத் தீர்த்தம் இறைவன் திரிசூலத்தால் நிலத்திற்குத்தி எழச்செய்த தீர்த்தம் என்றும் கூறப்படுகிறது.

கௌரியோடு, அனந்தன், வாசுகி இருவரும் இங்கு வந்து பிரதிஷ்டை செய்து வழிபட்ட லிங்கத்திற்கு 'நாகேஸ்வரர்' என்று பெயர். ஸ்ரீதளி குளத்திற்கு 8 படித்துறைகள். இவ்விடம் அஷ்டதிக்பாலர்கள் விமோசனம் பெற்ற இடம் என்றும் இலக்குமி, வால்மீகி வழிபட்ட தலம் என்றும் கூறப்படுகிறது. அசுரர் செய்த கொடுமை பொறுக்காத தேவரும் மக்களும் காசிக்குச் சென்று இறைவனை வேண்டி, நடத்திய யாகத்திலிருந்து உதித்தவர் பைரவர் என்றும், பிரமசாரியாக நின்ற அவர் வடுகன், வயிரவன் என்ற நாமங்கள் தாங்கிக் கொன்றைவன மாகிய திருப்புத்தூருக்கு வந்து, மேற்கு நோக்கி ஸ்ரீதளி அருகே யோக மூர்த்தியாய் அமர்ந்தார் எனவும் பைரவரைப் பற்றி புராணம் கூறுகிறது.

# கோயில்கள்

"திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீறு அணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாய்ப் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண் கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவிகாடே"

என்ற அப்பர் பாடல் தமிழகத்து மக்கள் வாழ்க்கையில் திருக்கோயில்கள் வகித்த உயர்ந்த இடத்தை விளக்குவதாகும். பாடல் பெற்ற சிவத்தலமான திருப்புத்தூரில் கீழ்க்கண்ட கோயில்கள் உள்ளன.

1. திருத்தளி நாதர் கோயில், 2. மேற்குத் திருத்தளி நாதர் கோயில், 3. நின்ற நாராயணப் பெருமாள் கோயில், 4. விநாயகர் கோயில், 5, அநுமார் கோயில், 6. கோட்டைக் கருப்பர் கோயில், 7. அங்காளம்மன் கோயில், 8. பூமாலியம்மன் கோயில், 9. அய்யனார் கோயில். இன்னும் ஓரினத்தார்க்கே மட்டும் உரிய காளியாத்தாள் கோயில், வாணிகங் கோயில் போன்றவைகளும் உள்ளன.

**கோபுரங்கள்:** கோயில் என்றவுடனே நம் நினைவுக்கு வருபவை, நம் கண்முன் நிற்பவை வானளாவிய கோபுரங்கள் தான். கோபுரம் என்பது கோயிலின் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டிட அமைப்பாகும். ஆனால் திருப்புத்தூரில் ஒரு கோயிலிலும் கோபுரம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அம்மன் கோயில் கோபுரமும் சிறிது காலத்திற்கு முன்பு கட்டப்பட்டு இடையில் நின்று விட்டது. திருத்தளிநாதர் கோயிலில் முன்பு மூன்று பிரகாரங்களின் வாயில்களிலும் கோபுரங்கள் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. கி. பி. 13-ம் நூற்

றாண்டுக் கல்வெட்டொன்று நடுக் கோபுரத்திற்கு வடக்கே 'திருவம்பலப் பெருமாள்' என்ற படிமத்தை ஒருவன் எடுப்பித்ததாகக் கூறுகிறது. ஆனால் தற்போது திருத்தளிநாதர் கோயிலில் ஒரு கோபுரம் கூட இல்லை. முன்பு இருந்ததாகக் கூறப்படும் கோபுரங்கள் இப்பொழுது இல்லை என்னும் போது அதற்கான காரணத்தை ஒருவாறு ஊகிக்கலாம்.

பிற்காலப் பாண்டியர்கள் ஹொய்சளருடனும், முகமதியருடனும், சிங்களருடனும் நடத்திய போர்களில், திருப்புத்தூர் பாசறையாக இருந்திருக்கிறது. சிங்களர், முகமதியர், ஹொய்சளர் ஆகியோருடைய படையெடுப்பிற்குத் திருப்புத்தூர் உள்ளாகியதையும், திருத்தளி நாதர் கோயில் பாழ்படுத்தப் பட்டதையும், கி. பி. 14-ம் நூற்றாண்டில் முகமதியர்களால் பாழ்படுத்தப்பட்ட திருத்தளியாண்டார் கோயிலைப் புதுப்பித்து, விக்கிரகங்களை மீண்டும் பிரதிஷ்டை செய்து விசயாலய தேவன் என்பவன் புனிதப்படுத்தினான் என்பதையும், நாம் இங்குள்ள கல்வெட்டுக்களால் அறிகிறோம். மேலும் இராம்நாதபுர சேதுபதிகளுக்கும், நாயக்கர்களுக்கும் இடையே போர் மூண்ட போதும் திருப்புத்தூர் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. அதேபோல் மருது சகோதரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே போர் நடந்தபோது, திருப்புத்தூரில் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு சுமார் 1000 வருடங்கள் தொடர்ந்து திருப்புத்தூர் பகைவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகியதன் காரணமாகக் கோயில் கோபுரங்கள் இடித்துப் பாழ்படுத்தப்பட்டிருக்கலாம். அவை இன்னும் கட்டப் படாமல் இருக்கின்றன.

## திருத்தளிநாதர் கோயில்

"காசிக்கு அதிகமாம் ஒருமுழம், காரணம் மிகுந்த புத்தூர், கங்கைக்கு ஒரு முழம் அதிகமாம், கமல சீதளி தடாகம்" என்று, ஒரு நாட்டுப்பாடலில் சிறப்பிக்கப்படுகின்ற திருப்புத்தூரில் உள்ள கோயில்களில், 'வைரவங் கோயில்' என்று ஊர்மக்களால் அழைக்கப்படுகின்ற திருத்தளிநாதசுவாமி கோயில் முதன்மை வாய்ந்தது. சிவகாமியம்மன்கோயில், பைரவர் கோயில் ஆகிய இரண்டு கோயில்களும் இதனுள் அடங்கியவை.

இக்கோயில்களை இணைத்து ஒரு பெரிய மதில் உள்ளது. திருப்புத்தூர் கோட்டைச் சுவரே இக்கோயிலின் வடபுற மதிலாக உள்ளது. இக்கோயிலின் மொத்த பரப்பளவு, ஸ்ரீதளி ஊருணியையும் சேர்த்து, 17 ஏக்கர் - 72 செண்டு ஆகும். இக்கோயிலில் மூன்று திருச்சுற்றுக்கள் உள்ளன. இம்மூன்று திருச்சுற்றுக்களுக்குள் பல்வேறு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மண்டபங்களும், கோயில்களும், பிற சேர்க்கைகளுமாக நிறைய கட்டிடப் பகுதிகள் உள்ளன. இவையனைத்திலும் திருத்தளிநாதர் கோயில் காலத்தால் முற்பட்டதாகும்.

**காலம் :** கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோரது பாடல் பெற்ற கோயிலிது. ஆகவே இக்கோயில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலேயே சிறப்புற்றிருந்தது எனத் தெரிகிறது. ஓங்குகோயில் என்று தேவாரம் இதைக் குறிக்கிறது. ஆனால் இன்றுள்ளதுபோல் கற்றளியாக இருந்ததா என்று தெரியவில்லை. கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட பாண்டியன், மாறஞ்சடையனாகிய வரகுணனின் காலத்தியக் கல்வெட்டுகள் இரண்டு, தனிக்கற்களில் இங்குள்ளன. அவற்றில் ஸ்ரீதளி, திருத்தளி என்று இக்கோயில் குறிப்பிடப்படுகிறது. இன்று இக்கோயில் அதிட்டானத்திலிருந்து விமானம் வரை கல்லால் ஆகியது. விமானத்தின் வடபுறச்சுவரில் உள்ள முற்காலப் பாண்டியன் மாறஞ்சடையன் கல்வெட்டுதான் கட்டிடப் பகுதியில் உள்ள கல்வெட்டுகளில் பழமையானது இக்கோயில், அக்கல்வெட்டில், 'திருப்புத்தூர் திருக்கற்றளி' என்று குறிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் நோக்கும்போது, இக்கற்றளி கி. பி. 9-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது, என்று உறுதியாகக் கூறலாம். திருத்தளிநாதர் கோயில், விமானம் (கருவறை), அர்த்தமண்டபம், முன்மண்டபம் அதை அடுத்துத் தற்காலத்தில் கட்டப்பட்ட ஒரு முற்றம் ஆகியவைகளைக் கொண்டு விளங்குகிறது.

**கருவறை :** கருவறையிலுள்ள லிங்கம் சுயம்பு லிங்கமாகும். கருவறைக்குள், திருமஞ்சனத் தீர்த்தத்திற்காக, நீர் நிரப்பி வைக்க ஒரு கல் தொட்டி இருக்கிறது. கருவறையின் நிலை மகர தோரணத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அடுத்

துள்ள அர்த்த மண்டபத்தின் தரைப் பகுதி, அண்மையில் புதுப் பிக்கப்பட்டது. இம் மண்டபத்தில் பல செப்புத்திருமேனிகள் இருபுறமும் வைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் வாயி லின் இரு புறமும் துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. இந்த துவாரபாலகர்கள், கோயில் கட்டப்பட்ட காலத்திலேயே அமைக்கப்பட்டவையாகும். இத் துவாரபாலகர்கள் சிற்பங்கள் மீது சுதை, வர்ணம் ஆகியவை பூசி வைத்துள்ளார்கள். அர்த்த மண்டபத்தின் வெளிப்புற வாயில் மகர தோரணங்களால் அலங் கரிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தரப் பகுதியின் கொடுங்கையில் கூடு களில் சிறிய அழகிய சிற்பங்கள் உள்ளன. கீழே பூதவரி உள்ளது. இக் கருவறையும் அர்த்தமண்டபமும்தான் கோயில் எடுப்பித்த காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

**முன் மண்டபம் :** அர்த்த மண்டபத்தை அடுத்துள்ள முன் மண்டபம் கி. பி. 10-ம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் முன் மண்டபத்தின் அதிட்டானப் பகுதி யில் ராஜராஜன் கல்வெட்டும், பிறகு வீர இராஜேந்திரன் கல் வெட்டும் காணப்படுகின்றன. முன்மண்டபத்தின் இடப்புறம் நடராஜரின் செப்புத்திருமேனி சிவகாமியம்மையுடன் உள்ளது. முன் மண்டபத்தின் வலப்புறம் தெற்கு நோக்கி ஒரு வாயில் உள்ளது. இம் மண்டபத்தில் செம்பால் ஆன நந்தி ஒன்று உள்ளது. தரையில் தற்காலத்திய மொஸைக் போடப்பட் டுள்ளது. இம்மண்டபத்தில் 18 முழுத் தூண்களும், 3 அரைத் தூண்களும் உள்ளன. தூண்களுக்கும், சுவர்களுக்கும் வர்ணம் பூசப்பட்டுள்ளது. முன் மண்டபத்தின் பிரஸ்தரப் பகுதியில் பூதவரி, யாளி வரிகள் உள்ளன. இம் மண்டபத்தின் வாயிலின் வெளியில் இருபுறமும் துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன.

முன்மண்டபத்தின் வாயில் கதவு மரத்தால் செய்யப் பெற்று செப்புத் தகடு போர்த்தப்பட்டது. இக்கதவை உபய மாகக் கொடுத்தவரின் பெயரும், செப்புத் தகட்டில் பொறிக் கப்பட்டுள்ளது. முன் மண்டபத்தை அடுத்து, இக்காலத்தில் எடுத்துக் கட்டப்பட்ட ஒரு சிறிய மண்டபம் போன்ற அமைப்பு உள்ளது. இம்மண்டபத்தின் இடதுபுறம் 'திரு முறைக் கோயில்' என்ற தேர் அமைப்புப் பெட்டியில் திருமுறை களான தேவாரம், திருவாசகம் போன்றவை வைக்கப்பட்டுள்

ளன. வலது புறம் மணிவாசகர், சுந்தரர், அப்பர், சம்பந்தர், படிமங்களும், இடது புறம் சுப்பிரமணியர் படிமமும், வலது புறம் விநாயகர் படிமமும் உள்ளன. இவ் வெளி மண்டபத் தில் இரண்டு முழுத் தூணும், இரு அரைத் தூண்களும் உள்ளன. இம்மண்டபத்தில் ஏறுவதற்குப் படிகள் அமைக் கப்பட்டுள்ளன.

**விமானம்:** அதிட்டானப் பகுதி சிறிது பூமிக்குள் புதைந் துள்ளது. இது ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், கபோதம் வேதிகை ஆகியவை கொண்டு விளங்குகின்றது. சுவர்ப்பகுதி பல கால் வரிகளையும், தேவ கோட்டங்களையும் பெற்று அமைந்துள்ளது. சுவர்களிலுள்ள தூண்களில், தூண்களின் பகுதியான கால், கலசம், பத்மம், கும்பம், பலகை, போதிகை என்பன சிறப்பாக அமைந்துள்ளன. போதிகைகள் சற்று கோண வடிவுடையவை. இப்போதிகைகள் பல்லவர் காலத்துப் போதிகைகள் போல நடுவில் பட்டையாகவும், இருபுறங்களிலும் சுருண்டு அலை போன்றும் அமைந்துள்ளன. பாண்டியர் காலக் கட்டிட அமைப்பில் பெரும்பான்மையும் தேவகோஷ்டங்களில் சிற்பங்கள் இருப்பதில்லை. அவை வெறும் அழகுக்காக அமைக்கப்பட்டவையே. திருப்புத்தூர்க் கோயிலின் கருவறைத் தேவகோட்டங்களிலும் சிற்பங்கள் இல்லை. ஆனால் மேற்கிலுள்ள தேவகோஷ்டத்தில் முன்பு சிற்பம் இருந்திருக்கவேண்டும். ஏனெனில் சிற்பத்தை, அத்தேவ கோட்டத்தில் பொருத்த, ஒரு துளை அமைப்பு உள்ளது. தேவ கோஷ்டங்களின் மேல் உள்ள மகரதோரணங்கள் அழகிய (கொடிக்கருக்கு, முத்துச்சரம் போன்ற) வேலைப்பாடு உடையனவாய் உள்ளன. மகர தோரணம் தேவகோஷ்டத்தின் இருபுறமும் கீழிறங்கி உள்ளது. உள் இடமில்லாத தேவ கோஷ்டங்களின் மேல் சாலைபோன்ற அமைப்பும், அதற்கு மேல் கீர்த்திமுகக் கூடுகளும் காணப்படுகின்றன.

பிரஸ்தரப் பகுதியில் கொடுங்கையின் அடியில் பூத வரி மானமும், மேலே யாளி வரிமானமும் உள்ளன. கொடுங் கையில் கீர்த்திமுகக் கூடுகள் உள்ளன. கூடுகளின் நடு வட்டத் தில் சிறிய வடிவில் கலை நுணுக்கத்துடன் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தெற்கிலுள்ள கூடுகளில் ரிஷப வாகனர்,

அர்த்தநாரி, புள்ளின் வாய் கீண்ட கண்ணன், அவன் குடக் கூத்து ஆடியது, தேனுகாசுரனை அழித்தது ஆகிய சிற்பங்களும், மேற்கில் யாளி, கண்ணன் காளிங்க நடனம், குதிரையாய் வந்த கம்சனை அழித்தது ஆகியவற்றைச் சித்தரிக்கும் சிற்பங் களும், வடக்கில் உள்ள கூடுகளில் லிங்கம், நந்தி, வாலி சிவலிங்க பூஜை செய்தல், ஒரு பெண் ஒரு கையில் அரிவாள் ஏந்தி, மற்றொரு கையில் சிறு குழந்தையொன்றைப் பிடித் துக்கொண்டிருக்கும் காட்சி, இரண்டு குரங்குகள் ஒன்றுக் கொன்று பேன் பார்ப்பது, மூன்று குள்ள பூதங்கள் (ஆனால் அவைகளுக்கு மொத்தம் நான்கு கால்கள்தான்) ஆகிய சிற்பங்கள் அழகிய வேலைப்பாடுடன் கூடியனவாய் உள்ளன.

விமானம் கல்லால் ஆகியது. மூன்று தள விமானம். கிரீவமும் சிகரமும் சதுரவடிவமான நாகர அமைப்பை உடை யவை. தளங்களில் நடுவில் சாலை அமைப்புக்களும் மூலை களில் கூட அமைப்புக்களும் உள்ளன. கிரீவத்தின் கீழ் பகுதியில் நான்கு மூலைகளிலும் ரிஷபங்கள் காணப்படுகின் றன. மத்தியில் விமான தேவதைகளோடு கூடிய கோஷ்டங்கள் உள்ளன. கோஷ்டங்களின் மீது சிங்கத் தலையால் அலங்கரிக் கப்பட்ட கூடுகள் காணப்படுகின்றன. சாலை, கர்ணகூடம் ஆகிய அமைப்புகளுக்கு இடையே உருண்டையான சிறு தூண்கள்மீது தாமரை மலர்கள் மலர்ந்திருப்பது போன்றுள்ள அமைப்பு சிறப்பானது. விமானத்தின் தெற்கில் கீழே தட்சிணாமூர்த்தியும், மேலே யோக தட்சிணாமூர்த்தியும், மேற்கே யோக நரசிம்மரும், வைகுண்டநாதரும், வடக்கே பிரம்மாவும் உள்ளார்கள். விமானமும், சுவர்ப் பகுதியும் காரை பூசப்பட்டு காரை அழிந்த நிலையில் உள்ளன.

**முதல் திருச்சுற்று:** முதல் திருச்சுற்றைச்சுற்றிலும் அஷ்ட திக் பாலர்களுக்காக பலிபீடங்கள் உள்ளன. தெற்கிலுள்ள தேவ கோஷ்டத்தின் முன்பாகத் தட்சிணாமூர்த்தியின் உருவம், கி. பி. 13-ம் நூற்றாண்டில் வீரபாண்டியன் காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது, என்பதை இங்குள்ள கல்வெட்டு களால் (174;175-1954) அறிகிறோம். இந்த தட்சிணாமூர்த்தி யின் கருவறைக்கு முன்பாகச் சிறிய மண்டபம் உள்ளது. இம் மண்டபத்தின் முன்னிரு தூண்கள் சிங்கம் தாங்கியனவாய்

உள்ளன. வடபுறமுள்ள துர்க்கை சிற்பமும் அதையொட்டி மண்டபமும் பிற்காலத்தில்தான் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்க வேண்டும். முன்பு கோமுகத்திற்கு அருகில் இருந்த துர்க்கைச் சிற்பத்தைச் சிறிது தெற்கில் தள்ளி வைத்து, தனி ஆலயமாக சுமார் 50 வருடங்களுக்கு முன்பு கட்டியிருக்கிறார்கள். கரண்ட மகுடம் சூடி, கனமான ஆடை தரித்தவளாய், அபயம், கட்ய வலம்பித முத்திரை உடையவளாய்ப், பின்னிரு கரங்களில் சங்கு சக்கரம் தாங்கி, ஆரம் கேயூரம், வளையல் ஆகியவை அணிந்து நிற்கிறாள். பின்னால் ஒளி வட்டம் உள்ளது.

முதல் திருச்சுற்றில் மேற்கில் தல விருட்சமான கொன்றையும் அதன் கீழ் இரண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும், வடமேற்கு மூலையில் அகத்தியலிங்கர் கோயிலும், வடக்கில் சண்டிகேசுவரர் கோயிலும் உள்ளன. அகத்தீஸ்வரர் கோயில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்ததாய் அல்லது அதற்கு முந்தியதாய் இருத்தல் வேண்டும். ஏனெனில் கி. பி. பதின் மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்கள் இங்குள்ளன.

முதல் திருச்சுற்றில் தெற்கில் கிணறு ஒன்று உள்ளது. இத்திருச்சுற்றில், திருச்சுற்று மாளிகையும் உள்ளது. முன்பு திருச்சுற்று மாளிகையின் நான்கு மூலைகளிலும் நான்கு மண்டபங்கள் இருந்திருக்கின்றன. இப்போது வடமேற்கு மூலையிலுள்ள மண்டபம் மட்டும் இடிந்தநிலையில் எஞ்சியுள்ளது. கருவறை வெளிமண்டபத்தையும், முதல் பிரகார வாயிலையும் இணைக்கும்படியாக ஒரு மண்டபம்உள்ளது. அதில் பதினாறு தூண்கள் உள்ளன. முதல் திருச்சுற்றில் நுழைந்தவுடன் இடப்பக்கமாகச் சென்றோமானால் அங்கு ஒரு மண்டபத்தைக் காணலாம். இம்மண்டபத்தின் தூண்களில் வாலி சிவனை வணங்குதல், வியாக்கிரபாதர் சிவனை வணங்குதல், மயில் மீது முருகன், நடனமாடும் விநாயகர், லிங்கத்துக்குப் பால் சொரியும் பசு ஆகிய சிற்பங்கள் உள்ளன.

8337

**சப்தமாதர்கள்:** இத்திருச்சுற்றை இடமிருந்து வலமாகச் சுற்றிச் செல்லும்போது கருவறையின் தெற்கில் திருச்சுற்றுமாளி

கையில் சப்தமாதர்கள் உருவங்களும், அதையடுத்து ஜேஷ்டா தேவியின் உருவமும் உள்ளன. இவை கி. பி. 13-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டு இவ்விடத்திற்கு வந்துள்ளன. ஏனெனில் இச்சப்தமாதர்களுக்குப் பின்னுள்ள சுவரில் கி. பி. 12-ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த குலசேகர பாண்டியனின் கல்வெட்டுக்கள் உள்ளன. மேலும் முகமதியர் படையெடுப்பால் பாழடைந்த இக்கோயிலை கி. பி. 14-ம் நூற்றாண்டின் துவக்கப்பகுதியில் விசயாலய தேவன் புதுப்பித்து தெய்வங்களை மீண்டும் பிரதிஷ்டை செய்தான் எனக்கல்வெட்டுக்களால் அறிகிறோம். எனவே அவனால் வேறொரு இடத்திலிருந்து இங்கு கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யப்பட்டதாக, சப்தமாதர்கள் சிற்பங்கள் இருக்கலாம். இச்சிற்பங்கள் உருவ அமைதியால் கி.பி. 10–11ஆம் நூற்றாண்டைச்சேர்ந்தவை. சப்தமாதர்கள் சிற்பங்கள் தனித்தனி பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன, சப்தமாதர்களுக்கு முன்னும் பின்னும் வீணாதரர், விநாயகர் சிற்பங்கள் உள்ளன. சப்தமாதர்கள் பிராமி, மாகேஸ்வரி, இந்திராணி, வைஷ்ணவி, வாராகி, கௌமாரி, சாமுண்டா என்ற வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. சப்த மாதர்கள் இடதுகாலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளனர். நான்கு கரங்களில், முன்னிரு கரங்களில் வலது கரத்தை அபயமுத்திரையிலும் இடது கரத்தைத் தொடைமீதும் வைத்திருக்கிறார்கள். பின்னிரு கரங்களில் அவரவர்க்குரிய ஆயுதங்களை, அதாவது பிராமி-அக்கமாலை, கெண்டி, மாகேஸ்வரி - மழு, மான், இந்திராணி-வஜ்ரம், சக்தி, வைஷ்ணவி-சங்கு, சக்கரம், வாராகி-ஏர், உலக்கை, கௌமாரி-சக்தி, வஜ்ரம், சாமுண்டா - சூலம், அனல் ஆகிய ஆயுதங்களைத் தாங்கியுள்ளளார்கள். பிராமிக்கு மூன்று முகங்களும், சாமுண்டாவிற்கு விரிந்த சடையும் உள்ளன. அனைவரும் மார்புக் கச்சு அணிந்துள்ளனர். சப்தமாதர் சிற்பத்தை அடுத்து ஜேஷ்டா தேவியின் உருவம் உள்ளது. இச்சிற்பம் கி. பி. 10, 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். சேஷ்டா தேவியின் இருபுறமும் அவளுடை மாட்டுத்தலை மகனும், மகளும் உள்ளனர். மூவருக்கும், இரு கரங்கள் உள்ளன. மூவரும் இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டு வலது கரத்தை அபயமுத்திரையிலும்,

இடது கரத்தைத் தொடை மீதும் வைத்துள்ளனர். இதை அடுத்து தென்மேற்கிலுள்ள மண்டபத்தில் ஒரு அறை எடுக்கப்பட்டு அதில் சோமாஸ்கந்தர் உற்சவமூர்த்தி வைக்கப்பட்டுள்ளது.

**திருமால் :** கருவறைக்கு வடக்கிலுள்ள திருச்சுற்று மாளிகையில் மிழலை ஈசர், விநாயகர், திருமறைக்காட்டு ஈசர் ஆகியோரது ஆலயங்கள் உள்ளன. வடமேற்கு மூலையில்இருந்த மண்டபமும், வடக்கிலுள்ள திருச்சுற்று மாளிகையின் ஒரு பாதியும் இடிந்துள்ளன. எஞ்சியுள்ள வடபுறத் திருச்சுற்று மாளிகை ஒரு அறை போலத் தடுக்கப்பட்டுள்ளது. அதனுள் அமர்ந்த நிலையில் திருமால் காணப்படுகிறார். இருபுறமும் முனிவரும், பூதேவியும் உள்ளனர். திருத்தளிநாதர் கோயிலில் உள்ள சிற்பங்களிலேயே இதுதான் பழமையானது என்று கொள்ளலாம். இவை எங்கிருந்து கொண்டு வந்து இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டன என்ற விவரம் அறிய இயலவில்லை. இவை கி. பி. 9-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். பெருமாள், முனிவர், பூதேவி மூவரும் அமர்ந்த நிலையில் உள்ளனர். இன்று சௌமிய நாராயணப் பெருமாள் என்று பெயர் தாங்கிய இவர் புன்முறுவலுடன் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ளார். ஜடாமகுடம் தரித்து நான்கு கரங்களுடன் காட்சி தருகிறார். பின்னிரு கரங்களில் பிரயோகச் சக்கரமும், சங்கும் உள்ளன. முன்னிரு கரங்கள் ஆகூய, கட்டிய வலம்பித ஹஸ்தத்தில் உள்ளன. முப்புரிநூல், கழுத்திலுள்ள ஆரம் ஆகியவை பட்டையாக உள்ளன. முனிவர் ஜடாமகுடம், பட்டையான கண்ணி தரித்து, இருகரங்களில் ஒன்றில் கதையேந்தி, மறுகையை தொடைமீது தாங்கிய வண்ணம், விஷ்ணுவை நோக்கி அமர்ந்துள்ளார். முப்புரிநூல் பட்டையாகச் செல்லுகிறது. தெற்கு நோக்கி விஷ்ணுவைப் பார்த்தவண்ணம், கூப்பிய நிலையில் பூதேவி அமர்ந்துள்ளாள். இச்சிற்பங்கள் அமைப்பில் பல்லவர் சிற்பங்களை ஒத்திருக்கின்றன.

**காலிங்கராயன் மண்டபம் :** முதல் திருச்சுற்றின் தென்கிழக்குமூலையில் உள்ள மண்டபத்தின் தூண்களும் கொடுங்கைப் பகுதிகளும் மிக அழகிய வேலைப்பாடுடை

யவாய் உள்ளன. கல்வெட்டு கூறுகின்ற காலிங்க ராயன் மண்டபம் என்று இதைக் கருதவாய்ப்புண்டு. இம் மண்டபத்தில், தெற்கு நோக்கிய வண்ணம் ஆடவல்லான் சந்நிதி உள்ளது. இது கல்லால் ஆன நடராசர் திருவுருவம். கௌரிதாண்டவமூர்த்தி என்று தற்போது அழைக்கப்படுகின்ற ஆடவல்லான், கல்வெட்டுக்கள் கூறுகின்ற கூத்தாடுந் தேவராக இருக்கலாம். கி. பி. 13-ம் நூற்றாண்டில் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் காலத்தில் திருப்புவனத்து சீயன் சம்பந்தன் அதிகைமான் என்பவன் கூத்தாடுந் தேவரையும், அவர்க்குரிய அம்மனையும் பிரதிஷ்டை செய்து வழிபாட்டிற்காக நிலமும் கொடுத்துள்ளான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது (180/1935). ஆகையால் இவ்வாடவல்லான், கல்வெட்டு கூறுகின்ற கூத்தாடுந் தேவராக இருக்கக் கூடும். பத்து கரங்களுடன், சூலம், உடுக்கை, அம்பு, கத்தி, மழு, கஜஹஸ்தம், வில், கேடயம், அங்குசம் ஆகியவை தாங்கியவராய் முயல்கன் மீது நின்று இடது காலை வீசி, வலது காலை முயலகன் மீது ஊன்றி நின்று ஆடுகிறார். தலையில் கங்கையையும், பிறைச்சந்திரனையும் தாங்கியுள்ளார். அருகில் இடப்புறம் அம்மை, இடது கரத்தை டோல ஹஸ்தத்தில் வைத்து, வலது கைய்யில் மலர் தாங்கியுள்ளாள். வலப்புறம் நந்தி மேளம் வாசிக்கிற நிலையில் காட்டப்பட்டுள்ளார். இம்மூன்று சிற்பங்களுக்கும் அண்மைக் காலத்தில் வண்ணம் பூசப்பட்டுள்ளது.

ஆடவல்லான் சன்னிதிக்கு முன்பு உள்ள மண்டபத் தூண்கள் மிக அருமையான சிற்ப வேலைப்பாடுடையவை (தரை, விதானம் ஆகியவை புதுப்பிக்கப்பட்டுள்ளன). ஒரு பெரிய தூணைச்சார்ந்து இரண்டு மூன்று தூண்கள் உள்ளன. தூண்களுக்குள் சிறு சிறு தூண்கள் உள்ளன. ஒரு தூணே ஒரு முழுக்கட்டிடப் பகுதிபோல உள்ளது. பெரிய தூணைச் சார்ந்துள்ள சிறிய தூண்களைக் கல் ஜன்னல்கள் இணைக்கின்றன. தூண்களில் நாக பந்தமும், போதிகையில் பூமுனையும் உள்ளன. பூமுனைகள் புதுமாதிரியாகக் கூம்பு போன்றுள்ளன. நாக பந்தத்தை யாளிகள் இணைக்கின்றன. தூண்களுக்குள் உள்ள சிறிய தூண்களைச் சிங்கங்கள்,

பூதகணங்கள் ஆகியவை தாங்குவதாகக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெரிய தூணின் நான்கு புறங்களிலும் அழகிய சிற்பங்கள் உள்ளன.

ஒரு தூணில் லிங்கோத்பவர் உருவம் உள்ளது. மேலே அன்னம் பறந்து செல்கிறது. அதற்கருகில் தாழம்பூ இறைவன் தலைமுடியிலிருந்து கீழே இறங்கி வருகிறது. கீழே வராகம் பூமியைக் குடைந்து செல்கிறது. லிங்கோத்பவருக்கு இருபுறமும் முறையே பிரம்மாவும் திருமாலும் கூப்பிய கரங்களுடன் நிற்கின்றனர். இக் காட்சிகள் அனைத்தையும் ஒரு சிறு சதுரத்திற்குள் காட்டி விடுகிறான் சிற்பி. இச் சிறு சதுரத்திற்குள் உருவங்களின் ஆடை அணிகலன்கள் நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இந்த லிங்கோத்பவர் சிற்பத்திற்கு மேலே மற்றொருகாட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. லிங்கத்தின் இருபுறமும் திருமாலும் அனுமனும் கூப்பிய கரங்களுடன் உள்ளனர். அனுமன் வலது கையில் பூக்குடலையைத் தாங்கியுள்ளான். திருமால் நான்கு கரங்கள் உடையவராய் சங்கு சக்கரம் தாங்கி, கூப்பிய கரங்களுடன் அமர்ந்த நிலையில் உள்ளார். லிங்கத்திற்குப் பின்புறம் இரு வெண் சாமரங்கள் உள்ளன. இதே தூணின் மேற்கில் அர்ச்சுனன் தவம் செய்து இறைவனிடம் வில்லைப் பெற்ற காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

இதே தூணின் கிழக்கில் இராவணன் கைலையங்கிரியைப் பெயர்த்தெடுக்கும் காட்சி சிற்பமாக உள்ளது. பத்து தலையும் 20 கரங்களுமாக, இரு கைகளை இடுப்பில் ஊன்றிய வண்ணம், கைலையைப் பெயர்த்தெடுக்க முயல்கிறான். கைலைமலையில் சிவபெருமான், அம்மையை இடதுமடியில் தாங்கி அமர்ந்துள்ளார். இறைவன் மழு, மான் தாங்கி, அபய வரத முத்திரைகள் காட்டியவராய் அமர்ந்துள்ளார். நெற்றிக் கண் கூட காட்டப்பட்டுள்ளது. தலையில் கங்கையும் பிறையும் அணிந்துள்ளார். உமையம்மை பயத்துடன் சிவனை அணைத்துக் கொண்டுள்ளாள். இக்காட்சி மிகச் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது.

திருமகள் உருவமும், அடியவர்களும் முனிவர்களும் வணங்குவது போன்ற காட்சிகளும், முருகன், விநாயகர் உருவங்களும்,

துவாரபாலகர் சிற்பங்களும், பால்குடிக்கும் கன்றைத் தடவிக் கொடுக்கும் பசுவும், நரசிம்மமூர்த்தியின் இரண்ய சம்ஹார காட்சியும், குழலூதும் கண்ணன் உருவமும், பூக்கள் பிற வேலைப்பாடுகள் ஆகியவையும் செதுக்கப்பட்டுள்ளன.

மரத்தால் ஆன கொடுங்கைகள் போலவே கல்லிலும் இங்கு கொடுங்கைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வழகிய மண்டபத்தை உண்டாக்கிய சிற்பியின் கைவண்ணம் வியத்தற்குரியது. இம்மண்டபத்தில் பைரவர், விநாயகர், சந்திரன் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன.

**இரண்டாம் திருச்சுற்று :** இரண்டாம் திருச்சுற்றில் நுழைந்தவுடன் வாயிலின் எதிரே பெரியகல் நந்தியும், கொடிக் கம்பமும், பலிபீடமும் உள்ளன. முதல் பிரகாரத்தின் வாயிலையும், இரண்டாவது பிரகாரத்தின் வாயிலையும் இணைக்கும் படியாக ஒரு மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் நவகிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. முன்பு இரண்டாம் திருச்சுற்றிலும் ஒரு திருச்சுற்று மாளிகை இருந்திருக்க வேண்டும். இன்று அதுபாழடைந்து இடிந்து காணப்படுகிறது. திருச்சுற்றில் நாம் நுழைந்தவுடன் இடதுபுறம் உள்ள திருச்சுற்று மாளிகை மாடுகட்டும் கொட்டிலாக உள்ளது. வலது புறத்திலுள்ள மண்டபம் அறையாகத் தடுத்து உக்கிராண (சரக்கறை) அறையாகப் பயன்படுகிறது. இம்மண்டபம் முன்பு ஒரு திருக்கல்யாண மண்டபமாக இருந்திருக்கலாமோ என்று என்னும்படியாக இதன் அமைப்புக்கள் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் தெற்கில் மடைப் பள்ளியும், ஆறுமுகர் சன்னனிதியும், தென் மேற்கு மூலையில் விநாயகர் சன்னிதியும், இத்திருச்சுற்றின் வடக்குப் பகுதியில் பைரவர் கோயிலும், நாகேஸ்வரர் கோயிலும் உள்ளன. இவ்விரண்டாம் திருச்சுற்று கி. பி. 11-ஆம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இதில் உள்ள மடைப் பள்ளியைக் கட்டுவித்தவர் கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த ஸ்ரீ வல்லபதேவ பாண்டியனின் பட்டத்தரசியான உலகமுழுதுடையாள் என்று, இரண்டாம் பிரகாரச் சுவரில் உள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

இம்மடைப் பள்ளியை அடுத்து ஆறுமுகசுவாமி சன்னிதி உள்ளது. இதற்கு அருணகிரியாரின் திருப்புகழ்

உண்டு; வடக்குப் பார்த்த சன்னிதி. இவ்வாறு வடக்குப் பார்த்த சன்னிதியில் ஆறுமுகனிருப்பது அரிது என்று சொல்லுகிறார்கள். இச்சன்னதியில் உள்ள படிக்கட்டில் வட்டெழுத்துக் கல்வெட்டு உள்ளது. வேறு எங்கோ இருந்ததைக் கொண்டுவந்து இச்சன்னதியின் படியாக்கியிருக்கிறார்கள். இரண்டாம் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் பிற்காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் சன்னிதி உள்ளது.

**பைரவர் கோயில்:** இரண்டாம் திருச்சுற்றின் வடக்கில் பைரவர் கோயில் மேற்கு நோக்கிள்ளது. திருத்தளி நாதர் கோயிலில் பைரவர் வழிபாடு மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வூர் மக்கள் திருத்தளிநாதர் கோயிலை 'வயிரவன் கோயில்' என்றே கூறுகிறார்கள். இவ்வூர் மக்களின் பெயர்கள் பெரும்பாலும் வயிரவசாமி, வயிரவநாதன், வடுகநாதன், சட்டநாதன் என்ற பைரவர் பெயர்களாகவே காணப்படுகின்றன. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள திருப்புத்தூர் வரைபடத்தில் திருத்தளிநாதர் கோயில், வயிரவர் கோயில் என்றே குறிப்பிடப்படுகிறது. இப்பைரவர் வழிபாட்டுச் சிறப்பு கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டும். இப் பைரவர் பற்றி கோயிலில் உள்ள பழமையான கல்வெட்டுக்கள் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த குலசேகர பாண்டியனின் கவ்வெட்டுக்களாக உள்ளன. இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம் ஆகிய அமைப்புக்களுடன் முதலில் இருந்திருக்கவேண்டும். முன்மண்டபத்தை அடுத்துள்ள மண்டபம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் பருது சகோதரர்களால் கட்டப்பட்டது. இம்மண்டபத்திலுள்ள தூண்களில் மருதுசகோதரர் உருவங்கள் உள்ளன. பைரவர் கல்வெட்டுக்களில் ஆண்டபிள்ளையார் என்று குறிப்பிடப் படுகிறார். பலரும் ஆண்ட பிள்ளையார் வழிபாட்டிற்காக பொருள் கொடுத்துள்ளனர்.

கருவறையில் பைரவர் யோகமூர்த்தியாய் இரண்டு பாதங்களையும் பிணைத்து முழந்தாளை ஒடுக்கிப் பாதங்கள் நிலத்திற் பதியாது உடம்புள் அடங்கவைத்து, இரு கோரைப் பற்கள் விளங்கப், புன்னகையுடன் அமர்ந்துள்ளார். மார்பை

முப்புரிநூலும், முத்து மாலையும் அலங்கரிக்க, இடது கரத்தைத் தொடையில் வைத்து, வலக் கரத்தில் அசனி தரித்து (அசனி-இடி) பரியாங்க நிஷ்டையில் மேற்கு நோக்கி அமர்ந்துள்ளார். சூலாயுதத்தையும் ஏந்தியுள்ளார். இவருக்கு வாகனம் கிடையாது. மற்ற இடங்களில் உள்ளது போன்ற அமைப்பு, இங்கு பைரவருக்கு இல்லை.

பைரவர் கோயில் விமானம் சிற்ப வேலைப்பாட்டில் சிறந்து விளங்குகிறது. இவ்விமானம் உப பீடம், அதிட்டானம் சுவர், பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி ஆகிய அமைப்புக்கள் அனைத்தையும் கொண்டு விளங்குகிறது. உப பீடத்திலும் அதிட்டானப் பகுதியிலும் உள்ள ஜகதி பத்ம ஜகதியாயும், குமுதம் விருத்த குமுதமாகவும் உள்ளன. குமுதத்தில் மணிகள், முத்துக்கள் பதிக்கப்பெற்றது போன்ற சிலம்புவரி அமைப்புக்கள் உள்ளன. கபோதப் பகுதியில் கூடுகள் உள்ளன. சுவர்களில் கால் வரிசையும், மூன்று பக்கமும் தேவ கோட்டமும், கும்ப பஞ்சரமும் உள்ளன. தூண்கள் நாகபந்தம், கால், கும்பம், பத்மம், பலகை, போதகை என்ற அமைப்புக்களுடன் உள்ளன. சுவர்ப் பகுதியில் கல் ஜன்னல்கள் உள்ளன. பிரஸ்தரப்பகுதியில் கொடுங்கை, பத்மவரியாகவும், கீழே யாளி வரியும் உள்ளது. கொடுங்கையின் உட்பகுதி வேலைப்பாடுடையதாய் அமைந்துள்ளது. இக்கொடுங்கைகளில் கூடுகள் உள்ளன. இக்கூடுகளில் பூக்கள், முத்துச்சரம் போன்ற வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. விமானம் செங்கல்லினால் ஆனது. விமானத்தின் மேல் நிலையில் பைரவர், ரிஷபவாகனர், கஜசம்ஹார மூர்த்தி ஆகிய கலைச் சிற்பங்களும், கீழ்நிலையில் காம வயப்பட்ட பெண்களின் நிலையைச் சித்தரிக்கும் சுதைச் சிற்பங்களும் உள்ளன.

**நாகேஸ்வரர் கோயில் :** இப்பைரவர் சன்னிதிக்குப் பின்புறம் கிழக்கு நோக்கி இருப்பது நாகேஸ்வரர் கோயிலாகும். கௌரி இங்கு வரும் போது கார்கோடன், வாசுகி இருவரும் உடன் வந்ததாகவும் அவர்கள் பிரதிஷ்டை செய்து வழிபட்டதால் 'நாகேஸ்வரர்' எனப்படுகிறார் என்று புராணங்கள் கூறுகின்றன. அருவியூரான குலசேகர பட்டணத்து ஸ்ரீ கைலாயமுடையான் என்பவனால், கருவறைக்குக் கிழக்கே பிரதிஷ்டை

செய்யப்பட்டது தான் பாணலிங்க நாயனார் என்றும், பாண லிங்க நாயனார் சன்னிதி முன்பாக இரு நொந்தா விளக்குகள் எரிக்கப் பொருள் கொடுத்துள்ளான் எனவும் ஒரு கல்வெட்டு (1691-1935) கூறுகிறது. இதைக் கொண்டு நோக்கும் போது பைரவர் சன்னிதிக்குக் கிழக்கில் உள்ள நாகேஸ்வரர் தான் பாணலிங்க நாயனாராக இருக்க வேண்டும் என்பதும், இக் கோயில் தோன்றிய காலம் கி. பி 13-ஆம் நூற்றாண்டின் இறுதி என்றும் தெரிகிறது. இக்கோயிலின் வேலைப்பாடும் பைரவர் கோயில் வேலைப்பாட்டை அமைப்பில் ஒத்துள்ளது. கும்ப பஞ்சரங்கள் மிக அழகாக உள்ளன. கும்பஞ்சரங்கள் மீது மகர தோரணங்கள் உள்ளன. நாகேஸ்வரர் கோயிலை ஒட்டி இரண்டாம் பிரகாரத்தின் வடக்கில் மூன்றாம் பிரகாரத்திற்குச் செல்ல ஒரு வாயில் இருக்கிறது.

**மூன்றாம் திருச்சுற்று :** தெரு உயர்ந்து, கோயில் பள்ளமாக இருப்பதால் நாம் கோயிலுக்குச் சற்று சரிவாகக் கீழிறங்கித் தான் செல்ல வேண்டியுள்ளது. மூன்றாம் பிரகாரத்திலுள்ள நுழைவு வாயில் 'நம்பியாண்டார் நம்பி வாயில்' என்றழைக்கப்படுகிறது. மூன்றாம் திருச்சுற்றில் நுழைந்தவுடன் வெதுபுறமாக இருப்பது திருக்கல்யாண மண்டபமாகும். இது புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி நெல் கொட்டி வைப்பதற்கான களஞ்சியங்கள், ஐந்து அறைகள் உள்ளன. ஆனால் இவற்றில் தற்போது வைக்கோல், முதலி யவை வைத்திருக்கிறார்கள். மூன்றாம் திருச்சுற்றின் தென் கிழக்கு மூலையில் யானை கட்டும் இடம் உள்ளது. இதற்குக் கூரையாகத் தகரம் வேயப்பட்டிருக்கிறது. மூன்றாவது திருச்சுற்றில் கற்குவியல்கள் ஆங்காங்கு காணப் படுகின்றன இந்தத் திருச்சுற்றுமாளிகை முன்பு இருந்து பின் இடிந்திருக்குமோ என்று எண்ணும்படியாக உள்ளது. மூன்றாம் பிரகாரத்தின் மேற்கில், இரண்டாம் திருச்சுற்றிலுள்ள பைரவர் சன்னிதிக்கு நேராக, ஒரு மேரு பிரதிஷ்டை உள்ளது. பிருத்வி பிஜத்தின் மூலையில் சிறிது பழுதுபட்டுள்ளதால் வழிபாட்டில் இல்லாமல் இருக்கிறது முன்பு இம்மேருவிற்கு ஆடுபலி கொடுத்தல் முதலியவை இருந்தது.

கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே மூன்றாம் பிரகாரம் இருந்திருக்கிறது எனக் கல்வெட்டால் அறிறோம் சடையவர்மன் வீரபாண்டியன் காலத்தில், கேரளசிங்க வள நாட்டு சோழிய நாராயணபுரமான அழகாபுரியைச் சேர்ந்த மன்னார்குடையான் பொறப்டிக நாயகன் திருவம்பலப் பெருமாள் என்பவன் மூன்றாம் பிரகாரத்தில் சில தெய்வ உருவங்களைப் பிரதிஷ்டை செய்தான் என இங்குள்ள கல்வெட்டு கூறுகிறது.

**அம்மன் கோயில்:** தேவிக்குத் தனிக் கோட்டமாக அம்மன் கோயிலை அமைக்கும் மரபு முதற்குலோத்துங்கன் காலத்தில் தொடங்கியது. அதைத் தொடர்ந்து மற்ற இடங்களிலும் அம்மனுக்குத் தனிச்சன்னிதி ஏற்பட்டது. திருப்புத்தூரில் திருத்தளிநாதர் கோயிலில் கி. பி. 12-ஆம் நூற்றாண்டிலேயே அம்மன் சன்னிதி ஏற்பட்டு விட்டதைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். அப்போது அம்மை திருக்காமகோட்டமுடைய நாச்சியார், திருப்பள்ளியறை நாச்சியார் என்றழைக்கப்பட்டாள். விஜயநகர மன்னர் அச்சுததேவராயரின் கி.பி 1530 ஐச் சார்ந்த கல்வெட்டு ஒன்று (112-1908) இக்கோயிலில் உள்ளது அதில் அம்மை 'சிவகாம சுந்தரி' என்ற தற்போதைய பெயரால் குறிப்பிடப்பட்டிருக்கிறாள். அம்மன்கோயிலில் பழைய கட்டிட இயலவில்லை 100 ஆண்டுகளுக்குள் இக்கோயில் அமைப்பை பார்க்கமுழுவதும் நாட்டுக் கோட்டை நகரத்தாரால் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். கருவறையும், அர்த்த மண்டபமும் அதை அடுத்துச் திருச்சுற்றுடன் கூடிய மண்டபமும் ஆகியவை உள்ளன. அம்மன் கோயிலில் நுழைந்தவுடன் உள்ள மண்டபத்தின் இருபுறமும் மரவாகனங்கள் வைக்கப்பட்டுள்ளன. அம்மன் கோயிலுக்குக் கோபுரம் கட்டப்பட்டு இடையிலேயே நிற்கிறது.

**மேற்கு திருத்தளிநாதர் கோயில்:** இக்கோயில் திருத்தளிநாதர் கோயிலைச் சார்ந்ததே. தினமும் ஒரு வேளை காலையில் மட்டுமே பூஜைகள் நடக்கிறது. மக்கள் இங்கு அதிகமாக வருவது இல்லை. இக்கோயில் ஸ்ரீதளி ஊருணியின்மேற்குக் கரையில் உள்ளது. அதனால் இக்கோயில் மேற்குத் திருத்தளிநாதர்

கோயில் எனவும், மேல்திருத்தளிநாதர் கோயில் எனவும், மேத்தளிநாதர் கோயில் எனவும் அழைக்கப்படுகிறது.

மேற்குத் திருத்தளிநாதரை பற்றிப்புராணம் கூறும் செய்தி யாவது: "அஷ்டதிக்கு பாலகர்களும் ஸ்ரீதளி தீர்த்தத்தை அடைந் தவரவர்க்குரிய திசையில் நின்று நீருள்மூழ்கி, இறைவனை வணங்கினர். அப்போது அத்தீர்த்தத்தின் நடுநிலத்திலிருந்து ஒரு மஹாலிங்கம் சுயம்புவாக தோன்றியது. ஒளிமயமாக விளங்கிய அம் மஹாலிங்கத்தைத் திசைக் கதிபர் எண்மரும் தலைவணங்கி கரம் கூப்பி நின்றனர். இறைவன் அவர்களைத் திருவருளால் நோக்கி, 'அன்புடையீர் நீங்கள் இத்தீர்த்தத்தின் மேலைக்கரை யில் சுயம்புலிங்கத்தை இறைவி துணையோடு பிரதிஷ்டை செய்து வணங்குவீர்களானால் குறை தீரும்' என்று அருளிச் செய்தான். அம்மொழி கேட்ட திக்குபாலகர் தீர்த்தத்தில் எழுந்த இலிங்கத்தை எடுத்து அத்தீர்த்தத்தின் மேற்பால் ஒரு திருக்கோயில் அமைத்து, அதன்கண் இறைவனை இறைவியோடு அமர்வித்துப் பூஜைசெய்து போற்றினர். சிவாகம விதிப்படி இத் திருக்கோயிலில் பூஜை நிகழ்ந்தது. இங்கு கோயில் கொண்ட இறைவன் பச்சிமேச்சுவரன் என்ற திருப்பெயர் உடையவன். இறைவி பச்சிமேச்சி எனப்படுகிறாள்." திருத்தளிநாதர் கோயிலில் பத்து நாள் உற்சவம் நடக்கும் போது ஐந்தாவது நாள் திருச்கல்யாணத்தின் போது, இக்கோயிலுக்கு வந்து இறைவி தவத்தில் இருப்பாள். திருத்தளிநாதர் இங்கு வந்து இவளை அழைத்துச் சென்று திருமணம் செய்து கொள்வார்.

**கோயிலின் அமைப்பு :** கருவறை, அர்த்த மண்டபம், பிறகு ஓடுகள் வேய்ப்பட்டதொரு மண்டபம் ஆகியவை கொண்டு இக்கோயில் விளங்குகிறது. கோபுரம் இல்லை. கருவறையும் அர்த்த மண்டபமும் மட்டுமே கோயில் கட்டப் பட்ட காலத்தில் இருந்திருக்க வேண்டும். முன் மண்டபமும் அதை அடுத்துள்ள மண்டபமும் பிற்காலச் சேர்க்கையாகும். கருவறையிலுள்ள லிங்கம், சுயம்புலிங்கமாகும். அர்த்த மண்டபத்தில் சிற்பங்கள் இல்லை. அதையடுத்த மண்டபத் தில் சன்னிதியின் நேரே நடுவில் நந்தியும், சன்னிதிக்கு வலப் புறம் விநாயகர் சிற்பமும், இடப்புறம் முருகர், அம்மன் சிற்பங் களும் உள்ளன. கோயில் திருச்சுற்றில் புல்புதர்கள் மண்டிக்,

கோயிலும் வௌவால்களின் குடியிருப்பாய் உள்ளது. திருச்சுற்றில் சப்த மாதர்கள் சிற்பங்கள், வெட்டவெளியில் சிதிலமடைந்து கிடக்கின்றன. இச்சிற்பங்கள் தனித்தனி கற்களில் பெரியனவாய் உள்ளன. இதற்றை கி. பி. 10, 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

கருவறையின் சுவர் பகுதி வரை கல்லாலும், விமானம் செங்கல்லாலும் ஆகியது. விமானத்தில் சுதை வேலைப்பாடுகள் உள்ளன. விமானம் நாகர சிகரமுடையது. நான்கு புறமும் ந்திகள் அமர்ந்திருக்கின்றன. சுவர்ப்பகுதி தேவகோட்டங்களும், கால்வரிசையும் பெற்றுத் திகழ்கிறது. தேவகோட்டத்தில் சிற்பங்கள் இல்லை. தேவகோட்டத்தின் மேலுள்ள மகாதோரணம் எவ்வித வேலைப்பாடுமில்லாமல் உள்ளது. மகரதோரணம் கால்களை விட்டுக் கீழிறங்கவில்லை. சுவரிலுள்ள தூண்களில் குடம், பத்மம், பலகை, போதிகை ஆகிய அமைப்புக்கள் உள்ளன. மேற்கிலும் தெற்கிலும் உள்ள சுவர்ப் பகுதிகளில் கல்வெட்டுக்கள் உள்ளன. ஆனால் படிக்க முடியாதபடி பொறிந்துள்ளன. பிரஸ்தரப் பகுதியில் கொடுங்கையில் கூடுகளும், பத்மவரியும் உள்ளன. கூடுகளில் சிற்பங்கள் இல்லை. கீழே கருவறையில் அதிட்டானப் பகுதியின் பெரும் பகுதி மண்ணுக்குள் ஆழ்ந்திருக்கிறது. கோயில் கட்டிட அமைப்பு கல்வெட்டுக்களின் எழுத்தமைதி ஆகியவைகளைக் கொண்டு இக்கோயில் கி. பி. 12, 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

**நின்ற நாராயணப் பெருமாள் கோயில் :** இக்கோயிலில் திருப்பணி வேலை நடந்து கொண்டிருக்கிறது. திருத்தணிநாதர் கோயிலுக்குத் தென்புறத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. கிழக்குப் பார்த்த வண்ணம் பெருமாள் நின்ற கோலத்தில் இருக்கிறார். தெரு உயர்ந்து கோயில் தாழ்ந்துள்ளது. விமானத்தின் அதிட்டானப்பகுதி மண்ணுக்குள் புதைந்துள்ளது. மேல் வரியில் கல்வெட்டுக்கள் உள்ளன. கருவறைச் சுவர், கால்வரிசைகளையும் தேவகோட்டங்களையும் கொண்டு விளங்குகிறது. தேவகோட்டங்களில் சிற்பங்கள் இல்லை. தேவகோட்டத்தின் மேல் மகரதோரணத்திற்குப் பதிலாகச சாலை அமைப்பு உள்ளது. பிரஸ்தரப் பகுதியில் கொடுங்கையில்

கீர்த்திமுகக் கூடுகளும், கொடுங்கைக்கு மேலே யாளிவரி மானமும் கீழே பத்மவரி மானமும் உள்ளன. கூடுகளுக்குள் எவ்வித வேலைப்பாடுமில்லை. கருவறைப்பகுதி தளம் வரை கல்லாலும், விமானம் சுதையாலும் கட்டப்பட்டு உள்ளது. இங்கு படிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு, கோலவராக வினாயகருக்குக் காங்கேயன் என்ற அரசியல் அதிகாரி நிலம் தானமாகக் கொடுத்ததைக் கூறுகிறது. இக்கல்வெட்டு (140 -1908) கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்தது. இதனால் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலேயே இக்கோயில் இருந்திருக்கிறது எனத் தெரிய வருகிறது.

இக்கோயிலில் தினமும் ஒருவேளை காலையில் பூஜை நடக்கிறது. சுத்தான்னம் நெய்வேத்தியமாகும். வைகாசை மரபைத் தழுவி இங்கு வழிபாடுகள் நடக்கின்றன. வைகுண்ட ஏகாதேசி இங்கு சிறப்பாக நடைபெறும். கருவறையின் தென்பகுதியில் மகாலட்சுமி சன்னிதியும், வடபுறத்தில் ஆண்டாள் சன்னிதியும் உள்ளன. இவை பிற்காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டவை. கருவறையை அடுத்துள்ள மண்டபத்தில் ராமர், சீதை, விஸ்வசேனர் ஆகியோரது சிற்பங்களும், பெருமாள், ஆண்டாள் மகாலட்சுமி ஆகியோரது செப்புத் திருமேனிகளும் உள்ளன.

**அநுமன்கோயில்:** கோட்டையின் தென்மேற்கு மூலையில் காவல் தெய்வமாக அமைக்கப்பட்டது என்பர். இக்கோயில் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது. முன்பு கோட்டை இருந்தபோது, கோட்டையின் மேற்கு வாசலில் இருந்தது. இது, கருவறையும், அர்த்த மண்டபமும், முன்மண்டபமும் கொண்டு விளங்குகிறது. கருவறையில் உள்ள அனுமார் மீது குங்குமமும், வெண்ணெயும் தடவித்தடவி, அவரது உருவமே சரிவரத் தெரியவில்லை. நான்கு கரங்களில் பின்னிரு கரங்களில், ஒன்றில் கதையும், ஒன்றை தர்ஜனி ஹஸ்தத்திலும் வைத்துள்ளார் என்று மட்டும் தெரிகிறது. முன்மண்டபத்திலுள்ள தூணில் விஜயநகர காலத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

**கிராமதேவதைகள்:** மேற்சொன்ன கோயில்களைத்தவிர திருப்புத்தூரைச் சுற்றிலும் கிராம தேவதைகளும் அவற்றின் கோயில்களும் உள்ளன. சாத்தன் என்றும் சாதவாகனன் என்றும் வழங்கப்படும் ஐயனாரே கிராம தேவதைகளில் முதலிடம் பெற்றவர். திருப்புத்தூரில் தெம்மாப்பட்டு ஐயனார் கோயில், வடக்குப் பெரியகண்மாய்க் கரையிலுள்ள ஐயனார் கோயில், ஆஞ்சனேயர் கோயிலின் அருகிலுள்ள வாணிகங் கோயில் ஆகிய ஐயனார் கோயில்கள் இங்குள்ளன. இந்த ஐயனார்க் கோயில்களில் பொதுவாகப் பெரிய கருப்பர், சின்னக் கருப்பர், மதுரை வீரர், வீரபத்திரர், காளி, பேச்சி யம்மன், துர்க்கை போன்ற சிற்பங்கள் உள்ளன. வாணியங் கோயிலில் அரியவீரர் சன்னிதிக்கு எதிரே கழுமரம் உள்ளது. ஐயனாரைத் தவிர ஏனைய கிராம தேவதைகள் பெரும் பாலும் பெண் தெய்வங்களே. ஊர்க் காவல் தெய்வமாகிய இவைகளுக்குக் கிராமத்தின் சுற்றுப்புறத்தில் கோயில்கள் எடுக்கப்பட்டன. இவ்வாறு திருப்புத்தூரில் தென்புறக் காவல் தெய்வமாகப் பிடாரிகோயில் என்னும் பூமாயி அம்மன் கோயிலும், வடபுறக் காவல் தெய்வமாக அங்காளம்மன் கோயிலும் உள்ளன.

**பிடாரியார் கோயில் :** கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல் வெட்டுகளை அதிட்டானப் பகுதியில் கொண்டுள்ள இக் கோயிலில் திருப்பணிவேலை நடந்து வருகிறது. பூமாயி யம்மன் கோயில் எனப்படுகின்ற இக்கோயிலில் பூச்சொரிவிழா சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இக்கோயில் சப்த மாதர்களுக்காக எடுக்கப்பட்ட கோயிலாகும். தனித்தனி கற்களால் ஆன சப்த மாதர்கள் சிற்பங்களின் இருபுறமும் வீணாதரரும், விநாயகரும் உள்ளனர். இவர்களுள் பிடாரியே முதலிடம் பெறுகிறாள். கொற்றவைக்கு வீரர்கள் தலைப்பலி கொடுக்கும் வழக்கம் பல்லவர் காலச்சிற்பங்கள் முதலாக அறியப் படுகிறது. அதுபோல இங்கு ஒரு சிற்பம் பலகைக்கல்லில் செதுக் கப்பட்டுள்ளது. வீரனொருவன் ஒரு காலை ஊன்றி முழங்கா லிட்டு நின்று, தன் தலையை அறிய முயலுவதாக உள்ள இச் சிற்பத்தில் வீரனுக்குத் தாடி மீசை உள்ளன. இக் கோயிலில் ஒரு பைரவர் சிலையும் உள்ளது.

வடக்கிலுள்ள அங்காளம்மன் கோயிலும் இவ்வாறு கிராம தேவதைக்காக எடுக்கப்பட்ட கோயிலே. இங்கு வீரபத்திரர், சப்த கன்னியர் ஆகிய பழைய சிற்பங்கள் உள்ளன. சப்த கன்னியர் எழுவரும் ஒரே கல்லில் செதுக்கப் பட்டுள்ளனர். எழுவரும் நின்ற நிலையில் உள்ளனர். ஒவ்வொருவருக்கும் இரு கரங்கள் உள்ளன. இங்குள்ள மாறஞ்சடையனின் வட்டெழுத்துக் கல்வெட்டு வேறு எங்கிருந்தோ கொண்டுவந்து வைக்கப்பட்டதாகத் தெரி கிறது. இக்கல்வெட்டில் ஸ்தலசயனப்பெருமாளுக்குக் கொடுக்கப்பட்ட கொடை குறிப்பிடப்படுகிறது. அங்காளம்மன் கோயிலில் நாயக்கர்கள் பரம்பரைப் பூசாரியாக இருக்கி றார்கள்.

**கருப்பர் கோயில் :** திருப்புத்தூரில் கிழக்குக் கோட்டை வாசலில் காவல் தெய்வமான கருப்பர் கோயில் உள்ளது. இவர் கோட்டைக்கருப்பர் எனப்படுகிறார். கோட்டையின் மதில் சுவரை ஒட்டி இக்கோயில் உட்புறமாக உள்ளது. கோயி லில் நாயக்கர் காலச் சிற்பங்கள் காணப்படுகின்றன. கோயிலின் முன்பாகச் சுடுமண்ணால் அமைக்கப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டுள்ள குதிரைகள், முன்கால்களைத் தூக்கிய வண்ணம் நிற்கின்றன. இரவில் ஐயனாரும் கருப்பரும் அவரு டைய பரிவாரத்தாரும் குதிரைகள்மீது ஏறிச்சென்று கிராமங்களைத் தீய தெய்வங்களின் தாக்குதலினின்றும் காத்து வருகிறார்கள் என்பது மக்களின் நம்பிக்கை.

இவ்வாறாகப் பல கோயில்களை உடைய திருப்புத்தூர், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவையும் உடையதாய் சமயப் பொறைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றது.

# செப்புத்திருமேனிகள்

வையகம் வியக்கும்வண்ணம் தமிழகத்துச் செப்புத்திருமேனிகள் கலையழகுடனும் தெய்வீகத் தன்மையுடனும் காட்சி தருகின்றன. திருத்தளிநாதர் கோயிலில் கி. பி. 10 - ஆம் நூற்றாண்டிலிருந்து அண்மைக்காலம் வரையிலான பல அழகிய செப்புத்திருமேனிகள் உள்ளன. இச் செப்புத் திருமேனிகள் கருவறையை அடுத்துள்ள அர்த்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன. இங்கு சுமார் 40 திருமேனிகள் உள்ளன. இவைகளுள் ஒருசில குறிப்பிடத்தக்கவை.

**இராமர், இலக்குமணர், சீதை :** இவர்களின் செப்புத் திருமேனிகள் மிகவும் வனப்பு வாய்ந்தவை. கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். நல்ல உயரமாக உள்ளன. இச் செப்புத்திருமேனிகள் ஆடவல்லான் சன்னிதானத்திலுள்ள சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்டவை.

**இராமர் :** பத்மபீடத்தில், நின்ற கோலத்தில் இரு கரங்களுடன் அலங்காரமாகக் கையில் வில்லேந்திய பாவனையில் காட்சி தருகிறார். மார்பில் ஸ்ரீவத்ஸம் காணப்படுகிறது. கரண்ட மகுடமும், முழங்கால்வரை ஆடையும் தரித்துள்ளார். முகத்தில் புன்முறுவலும், கம்பீரமும் காணப்படுகிறது. கேயூரம், கங்கணம், வாகு வளையம், உதர பந்தம், மகர குண்டலம் ஆகியவை அணிந்துள்ளார். மார்பில் அழகிய ஆரங்களும், முப்புரி நூலும் காட்சியளிக்கிறது. புரிநூல் 4 பிரிவாகப் பிரிந்து பின்னோக்கிச் செல்லுகிறது. ஆடை அழகிய வேலைப்பாடுடையனவாய் உள்ளது. பின்புறம் குழல் பல கற்றைகளாகப் பிரிக்கப்பட்டு விளங்குகிறது. இராமர், சீதை, இலக்குமணர் ஆகியோரது செப்புத்திருமேனிகள், ராஜராஜன் பாண்டி நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருத இடமுண்டு.

**இலக்குமணர் :** இவரும் பத்ரபீடத்தில் நின்ற கோலத்தி லுள்ளார். இரு கரங்கள். வில்லைப் பிரயோகம் பண்ணுகிற பாவனையில் இடதுகாலைச் சற்று முன்னே வைத்து நிற்கிறார். மார்பில் ஸ்ரீவத்ஸம் உள்ளது. முப்புரி நூல் நான்குப் பிரிவாகப் பிரிந்து பின்புறம் செல்கிறது. முன்புறம் முடிச்சு காணப்படு கிறது. மகுடம் தரித்துக், கேயூரம் உதரபந்தம், மகர குண்டலம், ஆரங்கள் ஆகியவை அணிந்து விளங்குகிறார். முழங்கால் வரை ஆடை வரிபோன்ற அமைப்பில் உள்ளது. வரிந்து கச்சையாக கட்டியுள்ளார்.

**சீதை :** பத்ர பீடத்தில் திரிபங்க நிலையில் நிற்கிறாள். இரு கரங்களில் இடது கரத்தை டோல ஹஸ்தத்திலும் வலது கரத்தில் மலர் தாங்கியுமுள்ளாள். மார்பை பல ஆரங்களும் சன்ன வீரமும் அழகு செய்கின்றன. கணுக்கால் வரை வரிவரி யான வேலைப்பாடுடன் கூடிய ஆடை அணிந்துள்ளாள். இரு தோள்களையும், கரங்களையும் செவிப்பூக்கள், கேயூரங்கள், குண்டலங்கள், வளையல்கள் அழகுபடுத்துகின்றன. கிரீட மகுடம் தரித்து இளமுறுவலுடன் காட்சி தருகிறாள். இம் மூன்று செப்புத்திருமேனிகளும் திருத்தளிநாதர் கோயிலிலுள்ள செப்புத் திருமேனிகளுள் முதன்மையானவை.

**பைரவர் :** பைரவர் வழிபாடு இங்கு சிறப்புடையது. இங் குள்ள பைரவர் திருமேனியை வருடத்தில் ஒருநாள் உற்சவ மூர்த்தியாக எழுந்தருளப் பண்ணுகிறார்கள். இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க செப்புத்திருமேனியாகும். பைரவர் பத்ம பீடத் தில் நின்ற நிலையில் உள்ளார். இரு கரங்கள். கதையைத் தரையில் ஊன்றி அதன் மீது வலது கரத்தைக் குவித்து வைத் துள்ளார். கதை மீது பாம்பு சுற்றியுள்ளது. இடது கரத்தில் கபாலம் ஏந்தியுள்ளார். ஜடாபாரத்துடன், பத்ரகுண்டலம் தரித்துக், கழுத்தில் கண்டமணியுடன் காட்சியளிக்கிறார். வாயின் இருபுறங்களிலும் கோரைப்பற்கள். பாம்பையே அரை ஞாணாக அணிந்துள்ளார். இது கி.பி. 12-13-ம் நூற்றாண் டைச் சேர்ந்த செப்புத் திருமேனியாக இருக்கலாம். பைரவர் நிர்வாணமாகக் காட்சியளித்தாலும் அசுரனைத் தோலுரித்து, தோலை அங்கிபோன்று, நீண்ட சட்டைப் போன்று, தோளிலி ருந்து கணுக்கால் வரை இருபுறமும் அணிந்து காட்சி தருகின்

றார். இது போன்றதொரு சிற்பம் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் பிரகாரத்திலுள்ளது. இச்செப்புத்திருமேனியைப் பைரவர் என்று முதன்முதலாகக் கூறியவர் T.A. கோபிநாதராவ் ஆவர். பத்மபீடத்துடன் பிரபையைப் பொருத்துவதற்கான முளைகள் உள்ளன.

**காளி :** பூமாயியம்மன் என்று கூறப்படுகின்ற இச்செப்புத் திருமேனி இவ்வூரிலுள்ள பூமாயியம்மன் கோயில் திருவிழாவின்போது பத்து நாட்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறது. இதன் நான்கு கரங்களில் பின்னிரு கரங்களில் டமருகமும் பாசமும், முன்னிரு கரங்களில் சூலமும் கபாலமும் விளங்குகின்றன. மார்பில், ஆரமும் பட்டையான முப்புரிநூலும் அழகு செய்கிறது. இச்செப்புத் திருமேனியைக் கி. பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம். வலது காதில் அரவ குண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும், கைகளில் கேயூரம், கங்கணம், வயிற்றில் உதர பந்தம் ஆகியவையும் அணிசெய்கின்றன. இடையிலுள்ள இடைக்கச்சை இருபுறமும் முடிச்சுக்களும், வளைவுகளும் உடையதாகஉள்ளது. காளி நிற்கின்ற பத்ம பீடத்துடன் பிரபை பொருந்துவதற்கான முளைகள் உள்ளன. காளியின் தலையில்சுடர்முடி உள்ளது.

**நடராசர் :** கருவறை முன்மண்டபத்தில் நடராசர் செப்புத் திருமேனி உள்ளது. கி. பி 12, 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. நடராசர் தன் நான்கு கரங்களில் பின்னிரு கரங்களில் உடுக்கையும் அனலும் தாங்கி, முன்னிரு கரங்களில் அபயமும் கஜ ஹஸ்தமும் காட்டி, வலது காலை முயலகன் மீது ஊன்றி, இடது காலை உயர்த்தி முகத்தில் புன்சிரிப்புடன் ஆனந்தத் தாண்டவமாடுகிறார். காலின் கீழ் முயலகன் சூசி முத்திரை காட்டியவண்ணம், தலை தூக்கி நடராஜரைப் பார்க்கும்வண்ணம் உள்ளான். நடராசரின் பின்புறமுள்ள பிரபையில் 31 சுடர்கள் உள்ளன. இப் பிரபை மகரவாய்களிலிருந்து வெளிப்பட்டதாகக் காட்டப்பட்டுள்ளது. இறைவனின் இடதுபுறமும் விரிசடைகள் பரந்துள்ளன. இவை

பிரபையைத் தொடவில்லை. விரிசடையின் வலதுபுறம் கூப்பிய கரங்களுடன் கங்கையும், இடதுபுறம் பிறைச் சந்திரனும் காணப்படுகின்றன. வலதுகரத்தைப் பாம்பு சுற்றியுள்ளது. வலதுகாலின் பின்புறம் பாம்பு படையெடுத்து நிற்கிறது. காதுகளில் மகர, பத்ர குண்டலங்கள், மார்பில் முப்புரிநூல் வயிற்றில் உதரபந்தம், இடையில் கச்சு, வலதுகாலில் ரக்ஷாபந்தனம் ஆகியவை காணப்படுகின்றன. அருகிலுள்ள சிவகாமியன்னை திருமேனியும் இக்காலத்ததே. அன்னை வலதுகையில் மலர்தாங்கி, இடதுகையை டோலஹஸ்தத்தில் வைத்துள்ளார்.

**விஷ்ணு :** இருபுறமும் ஸ்ரீ தேவி, பூதேவி ஆகியோரு டன் காட்சியளிக்கும் திருமால் திருமேனியும் கி. பி. பதி னொன்று அல்லது பன்னிரெண்டைச் சார்ந்ததாகக் கொள்ள லாம். திருமால், திருமகள், பூமகள் ஆகியோருடன் நின்ற நிலையில் உள்ளார்.

திருமால் சமபங்கத்தில் நான்கு கரங்களுடன் பின்னிரு கரத்தில் சக்கரமும், சங்கும் கொண்டு முன்னிருகரத்தில் ஒன்றில் அபயமும், மற்றொரு கரத்தினை, தரையில் கதையை ஊன்றி வைத்து அதைத் தொட்டுக் கொண்டிருப்பது போன்ற பாவ னையில் குவித்து வைத்துள்ளார். கையிலுள்ள சக்கரம் சிறிது சாய்வாக உள்ளது. கிரீட மகுடம் தரித்து பீதாம்பரதாரி யாக உள்ளார். மார்பை ஆரங்களும் முப்புரிநூலும் அணி செய்கின்றன. முப்புரிநூல் மூன்று பிரிவாகப் பிரிந்து பின்புறம் செல்கிறது. காதில் மகரகுண்டலம் விளங்குகிறது. 'கொன் றைவளைப் பெருமாள்' எனப்படுகின்ற இம்மூர்த்தியின் மார்பில் ஸ்ரீ வத்ஸம் உள்ளது. மற்றும் கேயூரம், உதரபந்தம், கடகம், கடிசூத்திரம் ஆகியவையும் அணிசெய்கின்றன. கடிசூத்திரம், சிம்மமுகம் போன்ற அமைப்புடன் உள்ளது. முறுவல் பூத்த முகத்துடன் காட்சியளிக்கிறார். இருபுறமும் தேவிகள் உள்ளனர். வலதுபுறம், தாமரைமலர் தாங்கி, பத்ம பீடத்தில் திரிபங்க நிலையில் நின்றிருக்கிறாள். கிரீடமகுடமும் மார்புக்கச்சம் காணப்படுகின்றன. வலது கையை டோல ஹஸ்தத்திலும், இடது கையில் தாமரைமலரும் வைத்துள்ளாள்.

கணுக்கால் வரை ஆடை உள்ளது. செவிப்பூ, காதுகளில் பத்ரகுண்டலங்கள் அணிந்துள்ளாள். மார்பில் ஆரங்களும் முப்புரிநூலும் தவழுகின்றன. கரங்களைக் காப்புகளும் கேயூரங்களும் அணிசெய்கின்றன. இடதுபுறம் பத்மபீடத்தில் பூமகள் திரிபங்கநிலையில், வலது கையில் நீலோத்பல மலரையும் இடது கையை டோலஹஸ்தத்திலும் வைத்து நின்றுள்ளாள். கணுக்கால் வரையும் வரிவரியான வேலைப்பாடுடன் கூடிய ஆடை, மற்றும் செவிப்பூ, குண்டலங்கள், கேயூரம், புரிநூல் வாகுவளையம், ஆரங்கள் ஆகியவையும் அணிந்துள்ளாள். இவையும் அழகிய திருமேனிகளாகும்

**சோமாஸ்கந்தர் :** சோமாஸ்கந்த மூர்த்தியை கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கூறலாம். சிவன், உமை இருவரும் பத்மாசனத்தில் அமர்ந்திருக்க. இடையில் குமரன் பத்மபீடத்தில் நின்ற நிலையில் இரு கரங்களில் தாமரை மலரைத் தாங்கியுள்ளான். இறைவன் நான்கு கரங்களில் பின்னிரு கரங்களில் மழும்மான் தாங்கி முன்னிரு கரங்களில் அபய வரத முத்திரை காட்டிப் புன்முறுவலோடு அருள் பாவித்துக்கொண்டிருக்கிறார். மான் அவரை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கிறது. செவிப்பூ, மகர குண்டலம், பத்ர குண்டலம் ஆகியவை காதுகளில் அணிந்து, வாகு வளையம், ஆரங்கள், முப்பிரிவாக உள்ள புரிநூல், கழல்கள் ஆகியவை அணிந்து ஜடா மகுடத்துடன் காட்சியளிக்கிறார். இடதுகாலை மடித்து வலதுகாலைத் தொங்கவிட்டவண்ணம் அமர்ந்துள்ளார். அவருக்கு ஏற்றாற்போல, அருகில் இறைவி வலதுகாலை மடித்து இடதுகாலைத் தொங்க்விட்ட வண்ணம் அமர்ந்துள்ளாள். வலதுகரத்தில் மலர் தாங்கி இடதுகரத்தை ஆகூய ஹஸ்தத்தில் வைத்துள்ளாள். அன்னை, கரண்ட மகுடம், கேயூரம், கடகம், செவிப்பூ, வாகு வளையம், சன்னவீரம், தண்டை ஆகியவை அணிந்துள்ளார்.

**சண்டிகேசுவரர் :** இவரது செப்புத்திருமேனியும் நல்ல உயரமான, கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செப்புத் திருமேனியாகும். இரு கரங்களுடன் கூப்பிய நிலையிலுள்ள சண்டிகேசுவரர் மகுடத்தில் கொன்றை மலர் போன்ற ஒரு மலர் கவிழ்க்கப்பட்டுள்ளது.

இச் செப்புத்திருமேனிகள் தவிர இன்னும் பல உள்ளன. அவை கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலிருந்து தற்காலம்வரையுள்ள கலைப்பாணியில் அமைந்துள்ளன. அவை அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், உமாசந்திரசேகர், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, சுகாசனர். பள்ளியறை மூர்த்தி, விநாயகர், தேவியர் ஆகியோரது செப்புத் திருமேனிகளாகும்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY. * MADRAS-28. *
LIBRARY
Acc No. 8339
Date

# வழிபாடுகளும் விழாக்களும்

**திருத்தளிநாதர் கோயில்:** திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் அஞ்சுகோயில் தேவஸ்தானத்தின் கீழ் உள்ளது. இதன் வரவு செலவு கணக்குகளைக் குன்றக்குடியிலுள்ள அஞ்சு கோயில் தேவஸ்தானத் தலைமை அலுவலகமே கவனிக்கிறது. இங்கு நடைபெறும் வழிபாடுகளைத் தினசரி பூஜைகள், பிரதோஷம் போன்ற நாட்களில் நடைபெறும் விசேஷ அல்லது மாத பூஜைகள், வருடாந்திர, திருவிழாக்களில் நடைபெறும் பூஜைகள் அதாவது நித்ய, நைமித்திக, காம்ய பூஜைகள் என்று வகைப் படுத்தலாம்.

இங்கு செலவாகும் பூசைப் பொருள்களுக்குத் தேவைப் படும் செலவு கோயிலுக்குரிய நிலங்களின் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டும், மற்றும் அர்ச்சனை வசூல், மாவிளக்கு வைத்தல், காதுகுத்தல், முடிகாணிக்கை செலுத்துதல் ஆகியவை மூலம் கிடைக்கும் வசூல், வாடகை வசூல், உண்டியல் வசூல் ஆகியவற்றைக் கொண்டு கோயிலை நிருவகிக்கின்ற திருவண்ணாமலை, குன்றக்குடி ஆதீனத்தாரால் செய்யப்பட்டு வருகிறது.

**நித்யபூஜை :** நித்திய பூஜை பக்தி ஞான வகையைச் சேர்ந்ததாகும். இங்கு திருத்தளிநாதருக்கும், சிவகாமியம்மைக் கும் வைரவருக்கும் நான்கு காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. மற்ற சுற்றுக் கோயில் சுவாமிகளுக்கு ஒரு காலப் பூஜை மட்டுமே நடைபெறுகிறது. இவை காமிகாகமம், காரணாகமம் முதலிய ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டவை.

திருத்தளிநாதர் கோயிலில் தினமும் புனுகு திரவியம், மஞ்சள், குங்குமம், விபூதி, சந்தனம், சூடம், திரிநூல், தீப்பெட்டி, தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பால், தயிர், புஷ்பம், அரிசி, கடலைப்பருப்பு, உளுந்தம் பருப்பு, உப்பு, புளி, மிளகாய், கடுகு, சீரகம், மிளகு, பெருங்காயம், நல்லெண்ணெய், கடலெண்ணெய், மண்ணெண்ணை, விறகு, இலை, காய்கறி என்று பல பொருட்கள் பயன்படுகின்றன.

நாலுகாலப் பூஜைகள் காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, அர்த்த சாமம் என்ற நான்கு நேரங்களில் நிகழுகின்றன. காலை, உச்சிக்காலம், சாயரக்ஷை ஆகிய மூன்று நேரங்களில் புளியோதரையும் அர்த்தசாமத்தின் போது சம்பாசாதமும் படைக்கப்படுகின்றன. பைரவருக்கு அர்த்தசாமத்தில் வடையும் சம்பாசாதமும் படைக்கப்படுகிறது. இரவு பள்ளியறையில் சுண்டல், பால் முதலியனவை படைக்கப்படுகின்றன. ஒவ்வொரு காலத்திலும் திருமஞ்சனமாட்டி, ஆடைகள், புஷ்பங்கள் சார்த்தி அலங்கரித்து, தீபாராதனைகள் செய்தும் வழிபடுகின்றனர். தினமும் சாயரட்சையின் போதுதான் தேங்காய் பழம் நெய்வேத்தியம் செய்கிறார்கள். சுற்றுக்கோயில் சுவாமிகளுக்கும் ஒரு வேளை காலையில் மட்டும்தான் அபிஷேகம், பூஜை முதலியவை நடைபெறும். நடராஜருக்கும் சோமாஸ்கந்தருக்கும் நான்கு வேளைப் பூஜைகள் உண்டு. செவ்வாய், வெள்ளி, சனிக்கிழமைகளில் தான் ஓரளவு மக்கள் வழிபட வருகிறார்கள்.

தினமும் ஆறுவேளையும் பதியம் பாட ஓதுவார் ஒருவர் உள்ளார். காலையில் திருப்பள்ளியெழுச்சியும், பிறகு தேவாரம் அபிராமி அந்தாதி போன்ற பாடல்களைப்பாடுவார். தினமும் மாலை நேரங்களில் கர்நாடக சங்கீதம், தேவாரம் போன்ற பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

ஆறுகாலமும் மேளம், நாதஸ்வரம் வாசித்தல் உண்டு. அதிகாலையில் பூபாளமும், திருமஞ்சனத்தின் போது பிலஹரியும், காலைச்சந்தியின் போது தன்னியாசியும் உச்சிக்காலத்தில் மத்திமாவதியும், சாயரட்சையின் போது சங்கராபரணமும் அர்த்த சாமத்தில் தோடி, காம்போதி ஆகியவையும் வாசிப்பார்கள். திருவிழாக் காலங்களில் சங்கராபரணத்தில் தேவாரமும், சோடசதீபத்தின் போது நீலாம்பரியும், சுவாமி புறப்பாட்டின் போது நாட்டை. மல்லாரி ஆகியவையும் வாசிப்பார்கள்.

தினமும் அர்த்த சாமத்தில் பயிரவருக்கு மேளம் கிடையாது. அவர் யோக பைரவர் ஆதலால் அவர் நிஷ்டை கலையக்கூடாது என்பதற்காக இப்படிச் செய்கின்றனர்.

வைபரவருக்கு அர்த்தசாமம் நடக்கிறபோது குருக்கள், சுயம் பாகம், வைராவி, கைவிளக்கு ஆகியோரைத் தவிரவேறு யாரும் சன்னிதிக்குச் செல்லக்கூடாது. அதையும் மீறிச்சென்ற வர்கள், இன்னல்களை அனுபவிப்பார்கள் என்று கோயில் ஊழியர்கள் சில சம்பவங்களைக் கூறுகிறார்கள். இப்பயிர வர்க்கு வடைமாலை போன்றவை சாத்துதல் கிடையாது; நெய் வேத்தியம் மட்டும் தான்.

கோயிலுக்குச் சொந்தமான 'சிவகாமி' என்ற ஒரு யானை இருக்கிறது. சிறுகூடல்பட்டியைச் சேர்ந்த நகரத்தாரால் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. இதைக் கோயில் வேலை களுக்குப் பழக்குகிறார்கள். ஒரு நாளைக்கு நெய்வேத்தியத் திற்கு $4\frac{1}{2}$ லிட்டரும், யானைக்கு 4 லிட்டருமாக, $8\frac{1}{2}$ லிட்டர் பச்சரிசி செலவாகிறது.

**நைமித்திக பூஜைகள்:** தினமும் நிகழாது மாதத்தில் ஓரிரு நாட்கள் நிகழும் பூஜைகளை நைமித்திக பூஜைகள் எனலாம். பிரதேஷம் என்பது நந்திக்காகச் சிறப்பாக நிகழும் ஒரு வழிபாடாகும். பிரதோஷத்தன்று பிதோஷ மூர்த்தி எனப்படுகிற உமாசகிதர் கோயிலுள் இரண்டு வருடங்களுக்கு முன்புவரை எடுத்துவரப்பட்டது. தற்போது இல்லை. பிரதோஷத்தன்று நந்திக்கும் இறைவ னுக்கும் ஒரே நேரத்தில் தீபம் காட்டப்படுகிறது. தேங்காய், பழம், காப்பரிசி முதலியவை நந்திக்கும் படைக்கப்படுகிறது. மாதப் பிறப்பு, அமாவாசை முதலிய நாட்களில் விசேடப் பூஜைகள் இல்லை. வருடத்தில் ஒருநாள் தான் தீர்த்தவாரி நடைபெறும். மாதந்தோறும் நடைபெறுகிற பூஜைகள் வேறு எதுவும் இங்கு சிறப்பாக இல்லை.

**திருவிழாக்கள் :** "திருக்கொள் செம்மை விழவார் திருப் புத்தூர்"[1] என்று சிறப்பிக்கப்படுகின்ற திருப்புத்தூரில் திருத் தளிநாதர் கோயிலில் ஆண்டுதோறும் பல விழாக்கள் நிகழு கின்றன. விழாக்களின் மூலம் ஒருவரையொருவர் கண்டு, அளவளாவி, கூடி மகிழமுடிகிறது. திருவிழாக்களில் உற்சவ மூர்த்திகளின் புறப்பாடு நிகழுகிறது.

**ஜயந்தன் திருவிழா:** இந்திரன் புதல்வன் ஜயந்தன் இங்கு வந்து சாப விமோசனம் பெற்றதாகக் கூறும் புராணங்கள். ஒவ்வொரு சித்திரையும் முதல் வெள்ளியன்று, திருத்தளிநாதர் கோயிலில் உள்ள பைரவரைப் பூஜிப்பதாக ஐதீகம். ஒவ்வொரு வருட சித்திரை முதல் வெள்ளிக் கிழமையன்று, பைரவருக்கு ஜயந்தன் பூஜை செய்யும் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். மக்கள் கூட்டம் மிகுதி.

அன்று பயிரவர் சன்னிதானத்தில் யாகம் வளர்த்து காலை தொடங்கி இரவு பன்னிரெண்டு மணி வரை வேள்வி நடைபெறும். அரசு, ஆல், புரசு, தாயுருவி, வன்னி, மா, அருகு, பலா ஆகிய சமித்துகள் கொண்டு வேள்வி வளர்க்கப்படும். அன்று பயிரவர் உற்சமூர்த்தி குதிரை வாகனத்தில் புறப்படுவார். உற்சவர் காலையிலே எழுந்தருளி கல்யாண மண்டபத்திற்கு மண்டகப்படிக்கு வந்துவிடுகிறார். பயிரவர்க்கு (உற்சவருக்கு) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஆகியவை விண்ணப்பம் செய்யப்படும். அடுத்து சோடச தீபம் காட்டப்பெறும். பிறகு பைரவர் புறப்பாடு நிகழும். இரவு பன்னிரெண்டு மணிக்குள் உற்சவர் திரும்பி விடவேண்டும். ஆண்டில் இந்த ஒருநாள் மட்டிலும் தான் பயிரவர் புறப்பாடு நிகழும்.

மூலவருக்கு சாயரக்ஷையில் அஷ்டபயிரவ அர்ச்சனை நடைபெறும். 8 குருக்கள், 8 பேர் மந்திரம் சொல்ல, 8 புஷ்பத்தை (வில்வம், நொச்சி, மரு, மல்லிகை, மருக்கொழுந்து, சம்பங்கி, பிச்சி, தாமரை) ஒரே காலத்தில் அர்ச்சனை செய்வார்கள். இவ்வஷ்ட அர்ச்சனை முடிந்தபிறகு 7 முகக் கற்பூரத்தட்டை 8 குருக்களும் பிடித்துக் கொண்டு தீபம் பார்ப்பார்கள்.

முன்பு பயிரவருக்கு கடா பலி கொடுக்கும் பழக்கம் இருந்தது. மேலும் இத்தினத்தன்று சாதாரணமாக நடைபெறும் நெய்வேத்தியங்களுடன் விசேடமான நெய்வேத்தியங்கள் உண்டு. உச்சிக்காலத்தில் சம்பா சாதமும் தேன் வடையும் படைக்கப்படும். அஷ்ட பயிரவ அர்ச்சனை முடிந்தவுடன் சூயம், அப்பம், வெள்ளையப்பம், வடை, பாயசம், தேன்குழல், எள்ளுருண்டை ஆகிய எட்டு பலகாரங்களும்; அக்கார

அடிசில், பாலன்னம், எலுமிச்சையன்னம், புளியோதரை, தேங்காய் சாதம், எள் சாதம், சம்பா சாதம் ஆகியவையுமான 8 அன்னங்களும் படைக்கப்படும்.

புனுகு பயிரவருக்கு உகந்தது. வாசனைத் திரவியங்கள் அணிந்து கொண்டு இவர் சன்னிதிக்கு அருகில் யாரும் செல்லமாட்டார்கள். முகப்பரு வந்தால் பயிரவருக்கு வேண்டிக்கொண்டு புனுகு சாத்துவார்கள். குழந்தைகளுக்கு கக்குவான், இரும்ல் வந்தால் இவருக்கு வேண்டிக்கொண்டால் சரியாகிவிட்டபிறகு முடி காணிக்கையாகக் கொடுக்கிறார்கள். இத் தினத்தன்று மாவிளக்கு வைத்து மக்கள் அர்ச்சனை செய்து, பயிரவரை வழிபடுகிறார்கள். காது குத்தி, முடி இறக்குதலும் உண்டு.

**பிடாரியார் கோயில் திருவிழா :** திருத்தளிநாதர் கோயிலுக்கு வடக்கில், ஊரின் வட எல்லைத் தெய்வமாக உள்ள பூமாயியம்மன் கோயிலில் சித்திரை மாதத்தில் பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். பத்து நாளும், ஆகிற செலவுகள் திருத்தளிநாதர் கோயிலில் இருந்துதான் செலவழிக்கப்படும். சித்திரை பஞ்சமி திதிக்கு மறுநாள் அதாவது சித்ரா பௌர்ணமிக்கு ஐந்து நாட்கள் கழித்து காப்பு கட்டுவார்கள். மூல அம்மனுக்கு பூமாயியம்மன் கோயில் பூசாரியான உவச்சர் எனப்படுபவரும், உற்சவருக்குத் திருத்தளிநாதர் கோயில் குருக்களும் காப்பு கட்டிக்கொள்வார்கள். காப்புகட்டிக் கொடியேற்றி விழா தொடங்கும்.

விழாவிற்கு முதல் நாள் பூச்சொரி விழா நடைபெறும். இத்தினத்தில் மக்கள் கூட்டம் மிகுதியாக இருக்கும். உற்சவ அம்மனான பூமாயியம்மன், திருத்தளிநாதர் கோயிலில் உள்ளது. பத்து நாள் திருவிழாவின் போதும் காலையில் திருத்தளி நாதர் கோயிலிலிருந்து அம்மன் புறப்பட்டுச் சென்று இரவு அம்மன் திரும்பிவிடும். 8-ஆம் திருநாளன்று பண்டாரங்கள் கூத்தாடுவார்கள், அவர்களுக்கு மானியம் கொடுத்திருக்கிறார்கள். ஒன்பதாவது நாள் அமாவாசையன்று தேர், பத்தாவது நாள் தீர்த்தவாரி நடைபெறும். இப்பத்து நாட்களும் பறையர்கள் இரவு ஊரைச் சுற்றி வந்து பறையடிப்பார்கள்.

காலையில் அழைத்துச் சென்ற விக்கிரகத்தை இரவு மீண்டும் திருத்தளிநாதர் கோயிலுக்குத் தப்படித்துக் கொண்டு வந்து விடுவார்கள். 10-வது நாள் காப்பு அவிழ்த்த பிறகு திருத்தளி நாதர் கோயிலுக்கு வந்து பரிவட்டம் பெற்றுக் கொண்டு செல் வார்கள்.

மக்கள், பூமாயியம்மன் திருவிழாவில் பொங்கல் வைத்து, கோழி, கிடா போன்றவை பலிகொடுப்பார்கள். திருவிழாக் காலங்களில் சாமுண்டா எனப்படும் சக்திக்கு விசேட பூஜை கள் நடைபெறும். கோழி, முட்டை, கருவாடு, முருங்கைக் காய், கத்தரிக்காய் வைத்து படையல் செய்வார்கள்.

**வைகாசி விசாகப் பெருந்திருவிழா:** கிராம தேவதை களின் திருவிழாக்கள் முடிந்த பிறகுதான் திருத்தளிநாதர் கோயிலில் பிரமோற்சவம் நிகழும். இக்கோயில் பத்து நாள் திருவிழாவின்போது கிராம தேவதைகளுக்கு - பூமாயியம்மன், அங்காளம்மன் போன்றவைகளுக்கு பத்து நாட்களும் படித் துறை கொடுப்பார்கள்.

இத்திருவிழா வைகாசி விசாக நட்சத்திரத்தில் தொடங் கும். விழாத் தொடக்கத்திற்கு முன்னதாக மோதுகட்டுதல், வாஸ்து சாந்தி ஆகியவை நடைபெறும். திருத்தளிநாதர் கோயில் பத்து நாள் திருவிழாவில் பூமாயியம்மன் கோயில் பட்டர் இங்கு வந்து 'லவண்டை' (பேரினத் தாடனம்) அடித்துக்கொண்டு வருவார். இவர்கள் பத்து நாட்கள் காலையும் மாலையும் அஷ் டதிக் பாலகர்களுக்கு மட்டும்தான் இவ்வாறு பேரிகை கொட்டி வருவார்கள். இவர்களுக்கு, கோயிலில் காப்பு கட்டும் போதும், அவிழ்க்கும் போதும் பரிவட்டம் கட்டுவார்கள். திருவிழாவின் தொடக்கத்தில் திக்பாலகர்களுக்கு விசேட பூஜை உண்டு.

பிறகு கொடியேற்றி காப்புக் கட்டித் திருவிழா துவங் கும். கொடிக்கம்பத்தில் இடப லக்னத்தில் இடபக்கொடி ஏற்றப்படும். விழாக்காலங்களில் எல்லா நாட்களிலும் பிள்ளையார், சுப்பிரமணியர் சோமாஸ்கந்தர். அம்பாள், சண்டிகேசுவரர் ஆகிய கடவுளரை ஊர்வலம் வரச்செய்கின்ற னர். விநாயகரைப் பையூர் ஆட்களும், சண்டிகேசுவரரை

மெய்யப்பட்டி ஆட்களும், தெம்மாப்பட்டு ஆட்களும், அம்மனை கே.வயிரவன்பட்டி ஆட்களும், சோமாஸ்கந்த மூர்த்தியைத் திருப்புத்தூர் தம்பிப்பட்டி, புதுப்பட்டி ஆட்களும் பரம்பரையாகத் தூக்குகிறார்கள். இவ்வைந்து ஊர் மக்களும் பத்து நாட்களும் வருவார்கள். மற்ற ஊழியங்களைத் திருத்தளிநாதர் பட்டி, வாணியம்பட்டி ஆட்கள் செய்கிறார்கள். அரிபுரம் ஆட்கள் இறைவனுக்குக் குடைபிடிப்பார்கள். இவர்களுக்குக் கோயிலிலிருந்து படித்தனம் கொடுக்கப்படும்.

முதல் நாள் இறைவனும் அம்மனும் வெள்ளிக் கேடகங்களிலும், இரண்டாவது நாளும் வெள்ளிக் கேடகங்களிலும் மூன்றாவது நாள் இறைவன் பூத வாகனத்திலும், அம்பாள் அன்ன வாகனத்திலும் ஊர்வலம் வரச்செய்கின்றனர். நாள்காவது நாள் காலையில் திருத்தளிநாதருக்கு மந்திர நீர் முழுக்காட்டும், மாலையில் தீபாரதனையும் நடைபெறும். அன்று இரவு இறைவியும், இறைவனும் வெள்ளிக் கேடகங்களில் உலா வருவர்.

5-ம் நாள் காலையில் அம்மன் தவத்திற்குச் சென்று, மேற்குத் திருத்தளிநாதர் கோயிலில் இருப்பாள். இவளை அழைத்து வந்து, உச்சிக் காலத்திற்குள் திருக்கல்யாணம் நடைபெறும். அன்றிரவு திருப்புத்தூர் அகம்படியார், சேர்வைகளின் மண்டகப்படி. இரவு இறைவன் யானை வாகனத்திலும், இறைவி புஷ்ப பல்லக்கிலும் உலா வருவார்கள். இத் தினத்தில் மட்டும் தான் ஊர்வலம் சீதளி ஊருணியைச் சுற்றி வரும். 6-வது நாள் சிறுகூடல்பட்டி மு. பழ. வகையறாக்கள் மண்டகப்படி. வெள்ளி இடபவாகனங்களில் அன்னையும் இறைவனும் உலாவருவர். 7-வது நாள் நாயக்கர்கள் மண்டகப்படி. அன்றிரவு இறைவன் கைலாச வாகனத்திலும் இறைவி சிம்மவாகனத்திலும் பவனி வருவர். 8-வது நாள் காலை நடராசரை திருவீதி உலாவரச் செய்வார்கள். திருப்புத்தூர் சோழிய வேளாளர்களும், திருவிளக்கு நகரத்தார்களும் சேர்ந்து 8-ஆம் நாள் மண்டகப்படியைச் செய்வார்கள். அன்றிரவு இறைவனும் அம்மையும் குதிரை வாகனங்களில் எழுந்தருளுவார்கள்.

9-ஆம் நாள் தேர்த்திருநாள். திருத்தளிநாதர் கோயிலைச் சேர்ந்த மூன்று தேர்கள் உள்ளன. இவை திருத்தளிநாதர், சிவகாமியம்மன், விநாயகருக்காக ஆனவை. மற்றதெய்வங்கள் சகடைகளின் மீது தற்காலிகமாக அமைக்கப்படும் தேரில் எழுந்தருளுகின்றன. விநாயகர் தேரைவிட அம்மன் தேரும், அம்மன் தேரைவிட, திருத்தளிநாதர் தேரும் பெரியவை. இத்தேர்கள் அண்மைக் காலத்தில் செய்யப்பட்டவை. பழைய தேர்கள் எரிந்து விட்டதாகவும், தற்போதுள்ள தேர்களை நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் செய்து கொடுத்திருப்பதாகவும் கூறுகிறார்கள். தேர்களைச் சீலைகளாலும், மாவிலைத் தோரணங்களாலும் அலங்கரித்து பொதுமக்கள் வடம்பிடிக்க, திருத்தளிநாதரும் பஞ்சமூர்த்திகளும் பவனி வருவது கண்டு மகிழத்தக்கது. காலையிலேயே சுவாமி தேருக்குப் போய்விடும். திருப்புத்தூர் தம்பிபட்டி, தெம்மாப்பட்டி, புதுப்பட்டி அம்பலக்காரர்கள் வந்ததும் தேர் மாலை சுமார் மூன்று மணியளவில் வடம் பிடிக்கப்படும்.

பத்தாவது நாள் தீர்த்தவாரி நிகழும், கோயிலுக்கு வடபாலுள்ள ஸ்ரீதளி ஊருணியில் காலையிலேயே தீர்த்தவாரி முடிந்துவிடும் தீர்த்தவாரிமண்டபத்தில் திருத்தளிநாதர், அம்மன் பிள்ளையார், சுப்பிரமணியர், சண்டிகேசுவரர் முதலியோரை எழுந்தருளுவிப்பார்கள். இரவு தெப்பத் திருவிழா நிகழும். தெப்பத்தில் சோமஸ்கந்தர், அம்மன், பிள்ளையார் ஆகியோர் தான் பவனி வருவர். சுப்பிரமணியரும் சண்டிகேசுவரரும் தீர்த்த மண்டபம் வரை சென்று பிறகு கோயிலுக்குத் திரும்பி விடுவர்.

**பிற விழாக்கள் :** ஆவணி மாதம் விநாயக சதுர்த்தியன்று கோயில் சிப்பந்திகள் சேர்ந்து விநாயகரை எழுந்தருளப் பண்ணுவார்கள். மோதகம், நாவல்பழம் ஆகியவற்றைப் படைத்துச் சிறப்பான வழிபாடுகள் செய்கிறார்கள்.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரியில் அம்பாளுக்கு லட்சார்ச்சனை நடைபெறும். 9 நாட்களும் அம்மனை விதவிதமாக அலங்காரம் செய்து வைப்பார்கள். விஜய தசமியன்று பாலசுப்பிரமணியர் குதிரை மேலேறிச் சென்று அம்பு போட்டு

வருவார். ஸ்ரீதளி கீழ்க்கரையில் அம்பு போடப்படும். இந்த நவராத்திரி ஒன்பது நாளும் நெய்வேத்தியங்களை விநியோகம் செய்வார்கள். விஜய தசமியன்று ஆயுதங்களை, மருது பாண்டியர் காலத்தது என்று கூறப்படுகின்ற சம்தாடு (பிச்சுவா), கத்தி, கேடயம் போன்றவற்றை வைத்து வழிபடு வார்கள்.

முன்பு ஐப்பசி மாதத்தில் தேவரடியார்கள் ஆடும் கோலாட்டத் திருவிழா நடைபெற்று வந்தது; தற்சமயம் இல்லை. தீபாவளியன்று எல்லா சுவாமிகளுக்கும் தைலம் சார்த்திப் புத்தாடை அணிவித்து பலகார நெய்வேத்தியங்கள் செய்யப் படும்.

கார்த்திகைத் தீபத்தன்று சொக்கப்பனை கொளுத்துதல் நடைபெறும். அன்று சந்திரசேகரர் எழுந்தருளுவார். இம் மாதத்தின் நான்குசோமவாரங்களிலும் 108 சங்கு அபிஷே கங்கள் நடைபெறும். இச்சங்குகளில் ஒரு முச்சங்கும் வலம்புரிச் சங்கும் உண்டு மார்கழித் திருவாதிரையன்று நடராசருக்கு காலை 4 மணிக்கு அபிடேகமும், 5 மணிக்கு அருணோதயத்தில் புறப்பாடும் உண்டு. அன்று மணிவாசகருக்குப் பரிவட்டம் கட்டுவார்கள். கேடகத்தில் அம்பாளும் நடராசரும் திருவீதி உலா வருவார்கள்.

தைமாதச் சங்கராந்தியன்று எல்லாக் கோவில் சிப்பந்தி களுக்கும், கிராம தேவதைகளுக்கும் பொங்கல் பானை கொடுப் பார்கள். ஐந்து கோயில் தேவஸ்தானத்திலிருந்து இக்கோயி லுக்குப் பொங்கல் பானை வரும் இத்தினத்தில் மடைப்பள்ளி யில் 7 பானைகள் பொங்கல் பானைகளாக வைக்கப்பட்டு, பொங்கலிடப்பட்டு இறைவனுக்குப் படைக்கப்படும்.

சிவராத்திரியன்று ஐந்து ஜாம பூஜை விடிய விடிய நடக் கும். முதல் ஜாம பூஜை தேவஸ்தானத்தாலும், இரண்டாம் ஜாம பூஜை தேவகோட்டை இரட்டை ஜமீன் வகையினராலும், மூன்றாம் ஜாம பூஜை பிரமுகர்கள் உபயத்தாலும், நான்காம் ஜாமபூஜை குன்றக்குடி அடிகளாராலும், ஐந்தாம் ஜாம பூஜை தேவஸ்தானத்தாலும் நடத்தப்பெறும். அன்று ஏகதின இலட் சார்ச்சனையும் சிறப்பாக நடைபெறும்.

**கோயில் நிர்வாகம் :** திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதீனம் பிரான் மலை வகையறா ஐந்து கோவில் தேவஸ்தானத்தின் கீழ் திருத்தளிநாதர் கோயில் இருக்கிறது. குன்றக்குடியிலுள்ள தலைமை அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் இக்கோயில் நிர்வாகம் இயங்கி வருகிறது.

கோயிலுக்குச் சொந்தமான சிலநிலங்கள், திருப்புத்தூரைச் சுற்றிலும் உள்ளன. சிவகாமி வாய்க்கால், வயிரவ வாய்க்கால் ஓடுகின்ற நெடுமரம், வெளியாத்தூர், கொங்கரத்தி, திருப்புத்தூர், திருத்தளிநாதர் பட்டி, மாதவராயன் பட்டி, ஆலம்பட்டி, மெய்யபட்டி, வையூர் ஆகிய இடங்களில் கோயிலுக்குச் சொந்தமான சுமார் 65 அல்லது 70 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவைகளிலிருந்து நெல் வருகிறது. மேலும் உண்டியல், வாடகை, தர்ம கட்டணம் முதலியவற்றின் மூலமும் வருவாய் உண்டு.

**ஊழியர்கள் :** குருக்கள், பேஷ்காரர், மணியம், வயிராவி, ஜோஸ்யம், பரிசாரகர், பிராமணப் பிள்ளை, திருமுறை ஆசிரியர், ஓதுவார், மெய்க்காவல், பரிவட்டம், நந்தவனம், கைவிளக்கு, திருச்சன்னம், சுவாமி கோயில் காவல், அம்மன் கோயில் காவல், மணி அடித்தல், திருவலகு, பாத்திரம் விளக்சி, மேளம், நட்டுவம், கொத்தனார், வேளார் போன்றோரும மற்றும் தண்டல் மணியம், வசூல் மணியம், தோட்டக்காரன், யானைப்பாகன், காவாடிக்காரன் ஆகியோரும் இக்கோயிலில் பணிபுரிகின்றனர்.

இவர்களில் குருக்கள், வயிராவி, கைவிளக்கு, கொத்தனார், ஓதுவார், வேளார், ஆகியோருக்கு நிலங்கள் மான்யங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. வைராவிக்குப் பத்து ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. முன்பு வண்ணான், ஆசாரி, கொல்லன், தச்சன், ஆகியோருக்கும் மான்யம் இருந்திருக்கிறது. மற்றவர்களுக்கு மாத ஊதியம் கொடுக்கப்படுகிறது.

இரண்டாம் பிகாரத்திலும், மூன்றாம் பிரகாரத்திலும் உள்ள மலர்ச் செடிகளிலிருந்து கிடைக்கும் மலர்கள் கோயிலுக்கு பயன்படுத்தப் படுகின்றன. நந்தியாவட்டை, அலரி,

கொன்றை, மல்லி ஆகிய மலர்களைக் கொண்டு தொடுக்கப்பட்ட 50 முழம்பூ தினமும் கோவிலுக்குக் கொடுக்கப்படுகிறது. இங்கு பூக்கட்டிக்கொடுத்தல் தொடர்பான ஒரு பழைய கல்வெட்டுள்ளது. அதை கல்வெட்டுச் செய்திகளில் காண்போம்.

# கல்வெட்டுச் செய்திகள்

கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் வழக்கம் மிகப் பழங்காலந்தொட்டே தமிழகத்தில் நிலவி வந்துள்ளது.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே"

என்பதற்கொப்ப கல்மேல் எழுதப்பட்ட எழுத்துக்கள் இன்னும் நிலவி, வரலாற்றை உணர்த்திக்கொண்டிருக்கின்றன. கல்லில் எழுத்தைப் பொறிப்பதைத் திருப்புத்தூரில் உள்ள கல்வெட்டுக்கள் 'கல் வெட்டுதல்' என்று குறிப்பிடுகின்றன.

அரசியல் வரலாற்றில் திருப்புத்தூருக்கு முக்கியத்துவம் உண்டு. முற்காலப் பாண்டியர், பிற்காலப் பாண்டியர் பற்றியும், மற்றும் சமுதாயம், பண்பாடு, அரசியல், சமயம் பற்றியும் திருப்புத்தூர்க் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் திருத்தளிநாதர் கோயிலில் உள்ளன. கி.பி. 1908-ல் 52 கல்வெட்டுக்கள் படிக்கப்பட்டு அவற்றின் செய்திக் குறிப்புக்கள் அவ்வாண்டு அறிக்கை (Annual report of Epigraphy 1908) யில் 89 முதல் 140 முடியும் எண்களாக வெளிவந்துள்ளன. இவற்றில் பாண்டியர்களைச்சேர்ந்த 10 கல்வெட்டுக்களின் வாசகங்கள் தென்னிந்திய சாசனங்கள் தொகுதி 14-இல் (South Indian Inscription Vol XIV) வெளிவந்துள்ளன கி.பி. 1935-ல் 30 கல்வெட்டுக்கள் படிக்கப்பட்டு அவற்றின் செய்திக் குறிப்புக்கள் அவ்வாண்டு அறிக்கையில் 163 முதல் 191 முடியும் எண்களாக வெளிவந்துள்ளன. கி.பி. 1962-இல் 6 கல்வெட்டுக்கள் படிக்கப்பட்டு அவற்றின் செய்திக் குறிப்புக்கள் அவ்வாண்டு அறிக்கையில் 530 முதல் 536 முடியும் எண்களாக வெளிவந்துள்ளன. சாசன மாலையில் ஒரு கல்வெட்டின் வாசகம் வெளிவந்துள்ளது.

திருத்தளிநாதர் கோவில் கருவறை, அதிட்டான சுவர்ப் பகுதிகளிலும், முதல் திருச்சுற்று மாளிகைச் சுவர்களிலும், இரண்டாம் திருச்சுற்றுக் சுவர்களிலும், பைரவர் சன்னிதிக்கு

முன்னுள்ள மண்டபத்திலும் ஏராளமான கல்வெட்டுக்கள் உள்ளன. கோயிலைப் புதுப்பிக்கும்போது ஆங்காங்கு கற்கள் மாற்றப்பட்டு வைக்கப்பட்டுள்ள துண்டுக் கல்வெட்டுக்களும் உள்ளன. பெரும்பாலான கல்வெட்டுக்கள் மீது கனமாகச் சுண்ணாம்பு பூசப்பட்டும், சிதிலமடைந்தும் படிக்க முடியாமல் உள்ளன. இங்கு 2 வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும், இக் கோயிலுக்கு வடபுறம் உள்ள அங்காளம்மன் கோயிலில் ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டும் உள்ளது. திருத்தளிநாதர் கோயிலுக்குத் தெற்கிலுள்ள பூமாயியம்மன் கோயிலில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் இருந்தவற்றைக் கோயிலைப் புதுப்பிப்பதற்காக அகற்றியுள்ளனர். மற்றும் வாணியங் கோயில், அனுமார் கோயில், முனீஸ்வரர் கோயில் ஆகிய வற்றில் துண்டுக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

**கல்வெட்டுக்களின் அமைப்பு:** இந்தக் கல்வெட்டுக்கள் வரலாற்று அரசியல் செய்திகளையும் தாங்கி நிற்கின்றன. முகமதியர், சிங்களர், போசளர் படையெடுப்புக்கு திருப் புத்தூர் ஆளானதையும், கோயிலுக்கு ஏற்பட்ட இன்னல் களையும் கூறுகின்றன. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் புரட்டாசி அவிட்டத்தில் பிறந்தவன் என்று இங்குள்ள ஒரு கல்வெட்டால் அறியப்படுகிறது. அரச குடும்பத்தினர் பற்றியும் அரசியல் அதிகாரிகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள முடிகிறது. அரசனது ஆணையைத் தாங்கி நிற்கின்றன சில கல்வெட்டுக்கள். சில கல்வெட்டுக்கள் இறுதியில் 'இது பன்மாகேசுவரர் ரக்ஷை' என்று முடிகின்றன. சில கல்வெட்டுக்கள் கொடையைக் காப்பாற்றுகிறவர்களைப் போற்றுகின்றன. "இவை ரக்ஷிப்பார் ஆயிரத் தெழுநூற்றுவர் அவர்கள் ஸ்ரீ பாதம் என் தலைமேலென" என்று காலத்தால் முற்பட்ட மாறஞ்சடையனின் கல்வெட்டொன்று கூறுகிறது.

திருப்புத்தூரில் உள்ள கல்வெட்டுக்களில் வட்டெழுத்து, தமிழ், கிரந்தம் ஆகிய எழுத்துக்கள் காணப்படுகின்றன. திருத்தளிநாதர் கோயிலில் உள்ள பழமையானதாகக் கருதப் படும், கருவறையின் வடக்கில் உள்ள கல்வெட்டில் குறில் களுக்கும், ஒற்றெழுத்துக்கும் புள்ளி காணப்படுகின்றது. இதே போல வட்டெழுத்துக்களிலும் புள்ளிகள் காணப்படுகின்றன.

காலத்தால் முற்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் தனிக் கற்களில் பொறிக்கப்பட்டவை. திருக்கற்றளியின் வட சுவரில் உள்ள மாறன் சடையன் கல்வெட்டு முற்காலப் பாண்டியர் கல்வெட்டெனினும் தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டது. எனினும் வடமொழிப் பகுதி கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ள இடத்தில் தமிழ் உச்சரிப்பு 'ழி' வருமிடத்தில் தமிழ் எழுத்தில் எழுதப்படாமல் வட்டெழுத்து முறையில் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். அதாவது 'பொழியூர்' என்ற சொல்லில் 'ழி' வட்டெழுத்து முறையில் எழுதப்பட்டுள்ளது.

பாண்டியர் காலக் கல்வெட்டுக்களில் ஆண்டோடு நாட்களும் குறிக்கப்படுகின்றன. "கோவரகுணமாராயற்கு யாண்டு நான்கு நாள் நாலாயிரத்தறுநூற்று முப்பத்தைந்து" என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. பிற்காலம் பாண்டியர் கல்வெட்டுக்களில் ராசி, கிழமை, நட்சத்திரம் ஆகியவையும் கொடுக்கப் பட்டுள்ளன.

## கல்வெட்டில் காணும் மன்னர்கள்

திருப்புத்தூரில் பாண்டியர், சோழர், விஜயநகரர் ஆகியோருடைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலான காலத்தை சேர்ந்தவையாகும் இவை.

**பாண்டியர்கள்:** முற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களில் தான் வட்டெழுத்து காணப்படுகின்றது. முதல் பிரகாரத்தில் மேற்கில் கொன்றமரத்தடியில் இரு வட்டெழுத்து கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் ஒன்று 'மாறஞ்சடையன்' என்றும், மற்றொன்று 'வரகுணமாராயன்'என்றும் குறிக்கிறது. அங்காளம்மன் கோயிலில் மாறஞ்சடையனின் வட்டெழுத்துக் கல்வெட்டு காணப்படுகிறது. முதல் பாண்டிய பேரரசில் இரு வரகுண பாண்டியர்கள் ஆட்சி செய்துள்ளார்கள். முதலாம் ராஜசிம்ம பாண்டியனின் மகனான செடிலபராந்தக நெடுஞ் சடைய வரகுணன் ஒருவன். மற்றொருவன் பராந்தக வீர நாராயணன் தமையனும் சீமாற சீவல்லபனின் புதல்வனுமான இரண்டாம் வரகுணன் ஆவான். திருப்புத்தூர் கல்வெட்டுக்களில்

குறிக்கப்படுகின்ற மாறஞ்சடையனும், வரகுணனும் ஒருவரே என்பர் சிலர். இருவரும் வேறு என்பர். ஆனைமலை, திருப்பரங்குன்றக் கல்வெட்டுக்கள் முதல் வரகுணனை கோமாறஞ்சடையன் என்று குறிக்கின்றன. ஐவர் மலைக் கல்வெட்டில் இரண்டாம் வரகுணன் 'வரகுணமாராயன்' என்று குறிப்பிடப்படுகின்றான். இருவரும் ஒருவரே; முதல் வரகுணன் என்று சிலரும், இருவரும் ஒருவரே இரண்டாம் வரகுணன் என்று சிலரும், இருவரும் வேறானவர் என்று சிலரும் கூறுகிறார்கள்.

**முதலாம்வரகுணன்:** சீவரமங்கலச் செப்பேடு, வேள்விக் குடிச்செப்பேடு, ஆனைமலைத் திருப்பரங்குன்றக் கல்வெட்டுக் கள் ஆகியன இவன் காலத்தவை. ஆனைமலை, திருப்பரங் குன்றம் குடைவரைகளும் கழுகுமலை ஒற்றைக் கற்றளியும் இவன் காலத்தவை.

**இரண்டாம் வரகுணன்:** ஐவர் மலைக்கல்வெட்டு மூலம் கி. பி. 862 இல் ஆட்சிக்கு வந்தவனென அறியப்படுகின்றான் இவன் சிவப்பற்று மிக்கவன். மணிவாசகர் இவன் காலத்தவர் என்பர். இவனுக்குப்பிறகு இவன் தம்பி பராந்தக வீரநாரணன் பட்டத்துக்கு வந்தான்.

**பிற்காலப்பாண்டியர்:** முதல் பாண்டிய பேரரசு இரண் டாம் ராஜசிம்மனுடன் கி. பி. 9-ம் நூற்றாண்டில் தன் பெரு மையிழந்தது. பிறகு இருநூற்றாண்டுகள் சோழர் வசமாயிருந்த பாண்டிய அரசு கி. பி. 11 ஆம் நூற்றாண்டின் இறுதியில் புத் துயிர் பெற்று கி.பி. 1310-இல் முகமதியர் படையெடுப்பு வரை சிறந்திருந்தது. இக்காலப் பாண்டியர்களுடைய கல்வெட்டுக் கள் 60 க்கும் மேற்பட்டவை. திருத்தளிநாதர் கோயிலில் உள்ளன. அவற்றால் அவ்வேந்தர்களும் பிறரும் புரிந்த அறச் செயல்களும் வேறுபல செயல்களும் நன்கறியப்படுகின்றன.

**திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ வல்லப தேவர்:** இவ னுடைய 10, 13, 17, 20, 21-வது ஆட்சியாண்டுக் கல்வெட் டுக்கள் திருப்புத்தூரில் உள்ளன. இவன் மெய்க்கீர்த்தி 'திருமடந்தையும் ஜயமடந்தையும் திருப்புயங்களில் இனி திருப்ப'' என்ற தொடக்கத்தனவாய்க் காணப்படுகின்றன.

"மாடக்குளக்கீழ் மதுரையுள்ளானை அழகிய பாண்டியன் கூடத்திற் பள்ளிக் கட்டிலில்" எழுந்தருளியிருந்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. (III/1908) குலோத்துங்கனின் (முதல் குலோத்துங்கன்) படைத் தலைவனான காலிங்கராயன் வேண்டுகோளின்படி சில நிலங்களை இறையிலி செய்து கொடுத்திருக்கிறான். அதனால் இவன் முதல் குலோத்துங்கன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட 5 பாண்டியர்களுள் ஒருவனாக இருக்கவேண்டும் என்றும், இவன் குலோத்துங்கனுக்குக் கப்பம் செலுத்திக்கொண்டு பாண்டி நாட்டில் இருந்தான் என்றும் சதாசிவ பண்டாரத்தாரும்[1], நீலகண்ட சாஸ்திரியாரும் கூறுகின்றனர்.[2] எனவே இவன் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவனாக இருக்கவேண்டும்.

**மாறவர்மன் பராக்கிரம பாண்டியன்:** பராக்கிமர பாண்டியனது 3, 11, 12, 14, 20-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் திருத்தளியாண்டார் கோயிலில் உள்ளன. இவனும் முதற் குலோத்துங்கன் காலத்தில் இருந்த பாண்டியர்களுள் ஒருவன் எனவும், சடையவர்மன் ஸ்ரீ வல்லபனுக்குப் பிறகு ஆட்சி புரிந்தவன் எனவும் தெரிகிறது. இவன் மெய்க்கீர்த்தி 'திருமகள் புணர' என்று தொடங்குகிறது. பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் (98/1908) நரலோக வீரன் குறிப்பிடப்படுகிறான். இவன் முதல் குலோத்துங்கனின் படைத் தலைவனாயிருந்த காலிங்கராயன் (நரலோக வீரன்) என்பது மற்ற ஊர்களிலுள்ள கல்வெட்டுக்களாலும் தெரிகிறது. இதனால் பராக்கிரம பாண்டியன் முதல் குலோத்துங்கன் காலத்தில் இருந்தவனாக இருத்தல் வேண்டும்.

**சடையவர்மன் குலசேகர பாண்டியன்:** திருப்புத்தூரிலுள்ள இவனுடைய ஒரு கல்வெட்டின் மூலம் (101/1908) இவன் 1162-ல் பட்டத்துக்கு வந்தவன் என்பது தெரிகிறது. இரண்டாம் இராஜாதிராஜசோழன் காலத்தியவன்: கி.பி. 1190 வரை ஆண்டான். இவனுடைய 3, 4, 5, 9, 13, 14, 15, 17, 18, 23 ஆட்சியாண்டு கல்வெட்டுக்கள் திருப்புத்தூரில் உள்ளன. இவன் மெய்க்கீர்த்தி 'பூதலமடந்தை' என்று தொடங்குவதாகும். இவனுக்கும், பராக்கிரம பாண்டியன் என்பவனுக்கும் பாண்டி நாடு அரசாளும் உரிமைபற்றி பகைமையுண்டாயிற்று. பராக்

கிரமன் அப்போது இலங்கையரசனாயிருந்த பராக்கிரமபாகுவை உதவிக்கு அழைத்தான். இலங்கை மன்னனும் இலங்காபுரித் தண்டநாயகன் தலைமையில் பெரும் படையொன்றை அனுப்பினான். இலங்காபுரித் தண்டநாயகன் குலசேகரனோடு பல இடங்களில் போரிட்டான். வெற்றி இலங்காபுரித் தண்டநாயகனுக்கே.

குலசேகரன் கி.பி. 1167-இல் சோழன் இரண்டாம் ராஜாதிராஜனிடம், தனக்கு உதவிபுரியுமாறு கேட்டுக் கொண்டான். சோழனும் திருச்சிற்றம்பலமுடையான் பெருமாள் நம்பிப் பல்லவரையன் தலைமையில் பெரும்படையை அனுப்பினான். போரின் இறுதியில் சோழர் படை சிங்களரை வென்று, குலசேகரனை மீண்டும் அரசனாக்கியது. ஆனால் சோழன் செய்த உதவியை மறந்து குலசேகரன் பராக்கிரமபாகுவுடன் சேர்ந்து கொண்டான். இதையறிந்த சோழன், படையனுப்பி குலசேகரனை வென்று, பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனுக்கு நாட்டை அளித்தான். திருப்புத்தூர் கல்வெட்டுகளில் 'தேவர் கண்டன்' என்று குறிப்பிடப்படுபவன் குலசேகரனாக இருக்க வேண்டும். சிங்களப் படையெடுப்பு கி.பி. 1166-ல் நடைபெற்றிருக்க வேண்டும் என்று ஹூல்ஷ் சொல்லுகிறார் சிங்களப் படையெடுப்பின் போது திருப்புத்தூரும், திருத்தளிநாதர் கோயிலும் பாழ்படுத்தப்பட்டன.

**சுந்தரபாண்டிய தேவர் :** (கி.பி. 1216 - 1238) இவனது 2, 10, 11, 12, 21, 22-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுக்கள் பத்துக்கும் மேற்பட்டவை காணப்படுகின்றன. தன் ஆற்றலாலும் வீரத்தாலும் பாண்டிய இராச்சியத்தை நன்னிலைக்கு கொணர்ந்தான். திருப்புத்தூரிலுள்ள கல்வெட்டொன்றால் (183/1935) இவன் புரட்டாசி அவிட்டத்தில் பிறந்தவன் என்பது தெரிகிறது. இவன் காலத்தில் சோழநாட்டை ஆண்ட மூன்றாம் இராஜராஜன் வலிமை குன்றியிருந்தான். சுந்தரபாண்டியன் சோழனை வென்று பழையாறையில் வீராபிடேகம் செய்து கொண்டான். பிறகு தில்லைச் சிற்றம்பலவனைத் தொழுது தன்னாடு திரும்பும் வழியில் பொன்னமராவதியில் தங்கியிருந்தபோது இராசராச சோழனை அழைத்து அவனுக்கே சோழநாட்டு அரியணையை மீண்டும் வழங்கி அவனிடம் திறைகொண்டான். இதனால்

'சோனாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர்' என்ற விருதையும் பெற்றான். ராஜராஜன் கோப்பெருஞ் சிங்கனால் பிடிக்கப்பட்டு சேந்த மங்கலம் கோட்டையில் சிறை வைக்கப் பட்டான். பாண்டியன், கோப்பெருஞ்சிங்கன் ஆகியவர்களுக்கு எதிராகச் சோழனுக்கு உதவியவர்கள் கர்நாடகத்து ஹொய்சளர்கள்.

**வீரபாண்டியன் :** *(1295 - 1342)* இவனது 4, 10, 17, 20, 44, 46-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயிலில் காணப்படு கின்றன. இவனுடன் வாரிசு உரிமைப் போரில் ஈடுபட்டவன் சுந்தரபாண்டியன். சுந்தரபாண்டியனுடைய கல்வெட்டுக் கள் கி. பி. 1303 முதல் 1319 வரை காணப்படுகின்றன. வீர பாண்டியனும் சுந்தரபாண்டியனும் பாண்டி நாட்டில் ஒரே காலத்தில் வெவ்வேறு பகுதியிலிருந்து ஆட்சி செய்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இவ்விருவருக்கும் நிகழ்ந்த போரில் தோல்வியுற்ற சுந்தர பாண்டியன், தென்னகத்து செல்வங்களை கொள்ளையடித் தற்பொருட்டு வந்து கொண்டிருந்த முகமதியர் படைத் தலைவன் மாலிக்காபூரை உதவிக்கு அழைத்தான். இது கி. பி. 1310-இல் நிகழ்ந்திருக்கவேண்டும். இதன் விளைவால் மாலிக்காபூர், சோழ பாண்டிய நாடுகளை வென்று இராமேசு வரம் சென்று கோயில்களைக் கொள்ளையடித்து, வீரபாண்டி யனைப் பல இடங்களில் தாக்கி இறுதியில் பெரும்பொருளுடன் டில்லி திரும்பிச் சென்றான். முகம்மதியர் படையெடுப்பினால் ஏற்பட்ட இன்னல்களை வீரபாண்டியனுடைய இரண்டு திருப்புத்தூர் கல்வெட்டுக்கள் [119, 120/1908) கூறுகின்றன. இவை இவனை, 'சடையவர்மன் திரிபுவனச் ச்க்கரவர்த்திகள் வீரபாண்டிய தேவர்' என்றும் 'திருபுவனச் சக்கரவர்த்திகள் வீரபாண்டிய தேவர்' என்றும் குறிக்கின்றன.

**விக்கிரமபாண்டிய தேவர் :** *(கி. பி. 1401-1422)* இவனு டைய 4, 12, 13, 22-வது ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் திருத்தளிநாதர் கோயிலில் உள்ளன. கி. பி. 14, 15ஆம் நூற்றாண்டுகளில் தென் பாண்டி நாட்டில் அரசு செய்த பாண்டியர்களுள் இவனும் ஒருவன்.

**சோழர்கள் :** சோழர்காலக் கல்வெட்டுக்கள் இரண்டு திருத்தளிநாதர் கோவிலில் காணப்படுகின்றன. சோழர்கள் முற்காலப் பாண்டிய பேரரசு வீழ்ச்சியடைந்ததும் பாண்டி நாட்டைக் கைப்பற்றி சோழநாட்டுடன் இணைத்துக் கொண்டனர். ஆகையால் சோழர்களின் கல்வெட்டுக்கள் பாண்டிய நாட்டில் காணப்படுகின்றன. முதலாம் இராஜராஜன் காலத்திய கல்வெட்டொன்று கருவறை முன் மண்டபத்தின் அதிட்டானப் பகுதியில் காணப்படுகிறது. (105/7908) இவன் தன் ஆட்சியில் பாண்டி நாட்டை வென்று தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டவன். வீரராஜேந்திரன் கல்வெட்டொன்றும்(110/1908) உள்ளது. ராஜகேசரிவர்மன் என்று குறிப்பிடப்படுகிறான். இவன் முதல் இராஜேந்திரனின் மகன். திருப்புத்தூரிலுள்ள இவன் கல்வெட்டில் இவன் தந்தை கங்கை, கடாரம், பூர்வ தேசம் முதலியவற்றை வென்றது குறிப்பிடப்படுகிறது.

**விஜய நகர மன்னர்கள் :** கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிற்காலப் பேரரசான பாண்டிய அரசு நலிவுற்ற போது விஜய நகர மன்னர்கள் ஆளுகைக்கு தமிழகம் இலக்காகியது. இவர்களுடைய கல்வெட்டுகள் திருப்புத்தூரில் காணப்படுகின்றன.

இம்மடி நரசிம்ம மாத்ராயரின் சக ஆண்டு 1421-ஐச்சேர்ந்த (கி.பி. 1499) ஒரு கல்வெட்டு இவன் காலத்ததாகத் திருத்தளி நாதர் கோயிலில் உள்ளது (89/1908). விஜய நகரப் பேரரசை ஆண்ட 2-வது வம்சமான சாளுவ பரம்பரையின் முதல் மன்னனான சாளுவ நரசிம்மரின் இரண்டாவது மகன் இவர். கிருஷ்ண தேவராயரின் 3 கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. அவை சக ஆண்டுகள் 1432, 1440-ஐச் சேர்ந்தவை (கி. பி. 1510, 1518). விஜய நகரை ஆண்ட துளுவம்சத்தின் மன்னரான கிருஷ்ண தேவராயர் கி. பி. 1509-ல் முடிசூடினார். அரசியலிலும் ஆட்சித் துறையிலும் போர்த் திறனிலும் சிறந்து விளங்கினார். இவர் காலத்தில் ஒரு சில பகுதிகள் தவிர தென்னிந்தியா முழுவதும் விஜய நகரப் பேரரசிற்கு உட்பட்டிருந்தது. இவர் காலத்தில் நாகமநாயக்கர் தட்சிண மகாமண்டலேசுவராய் இருந்தார். இவரது இறுதிக் காலத்தில் நாகமநாயக்கரின் புதல்வர் தட்சிண மகா மண்டலேசுவரரானார்.

அச்சுத தேவராயர், கிருஷ்ணதேவராயர் இறந்த பிறகு அவரது தம்பி வீரப்பிரதாப அச்சுத தேவராயர் கி. பி. 1503-இல் அரியணை ஏறினார். இவரது கல்வெட்டுக்கள் நான்கு திருப்புத் தூரில் உள்ளன. அவை சகவருடம் 1452, 1457, 1160-ல் பொறிக் கப்பட்டவை. இவை கி. பி. 1530, 1535, 1538 ஆகிய ஆண்டு களைச் சேர்ந்தவை. சாளுவ நரசிம்மனுடனும் ஏனைய மன்னர் களுடனும் மேற்கொண்ட போர்களில் நாகம நாயக்கன் மகன் விசுவநாத நாயக்கன் இவனுக்கு உறுதுணையாய் நின்றான். அவனுடைய உதவிக்குப் பரிசாக அவனிடம் பாண்டிநாட்டு ஆட்சிப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. மதுரை நாயக்கர் வரலாறு இவனிலிருந்து தான் தொடங்குகிறது.

இந்த விஜயநகர மன்னர்களுடைய கல்வெட்டுக்களில், இவர்களுக்குக் கீழ்ப்பட்டு ஆண்ட, பாண்டிய நாட்டை ஆண்ட விஸ்வநாத நாயக்கன் மற்றும் தும்பிச்சி நாயக்கன், வெங்கல நாயக்கன், பெரிய ராமப்பய்ய நாயக்கர் போன்ற மதுரை நாயக்கர்களுக்குட்பட்ட நாயக்கர்களும் குறிப்பிடப்படுகிறார் கள் இவர்கள் நாயக்கரால் தென் இராமநாதபுரத்திற்கு அரசப் பிரதிநிதிகளாக நியமிக்கப் பட்டவர்களாதல் வேண்டும்.

**அரசகுடும்பத்தினரும் அரசியல் தலைவர்களும்:** பாண் டியரது ஆளுகையில் பல்வகைத் துறைகளிலும் தலைவர்களாய் அமர்ந்து, ஆட்சியை நன்கு நடைபெறச் செய்தவர்கள், அமைச்சர், படைத்தலைவர், அரையர், வரியிலார், புரவுவரித் திணைக்களத்தார், திருமுகம் முதலியோராவர்.

**தென்னவன் பல்லவரையனான மாறனாச்சன்:**

இவன் நொந்தா விளக்கொன்று, திருத்தளியாண்டார்க்கு எரிப்பதற்காகப் பொன் கொடுத்துள்ளான். (90-1908) இவன் ஊர் பொழியூர் நாட்டுப் பொழியூர்.

**மறவனணுக்கப் பேரரயனாயின கடம்பன் வேளான்:** வரகுணன் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றான். திருத்தளிப் படாரர்க்கு நந்தா விளக்கெரிப்பதற்காக, நிறைகுறையாப் பழங்காசு பதினைந்து கொடுத்திருக்கிறான். இக்காசிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு நந்தா விளக்கெரிக்க ஏற்பாடு

செய்து ஒரு நிலைவிளக்கும் கொடுத்துள்ளான். இவனே பள்ளித்தாமத்துக்காக நிறைகுறையாப் பழங்காசு பதினைந்து கொடுத்திருக்கிறான். இதிலிருந்து வரும் பொலிசையைக் கொண்டு "இருவிரல் அகலத்து இரண்டிரண்டு நறும்பூ இட்டுத்தொடுத்தன, இரு முழ நீளத்தன, ஒரோவடமாக நியதி பதினைந்து வடம் இடுவதாகத் திருப்புத்தூர் சபையாரிடத்தில் உடன் படிக்கை செய்துகொண்டான். *(137-1908)*

**பாரக்கிரம பாண்டிய உத்தரமந்திரி:** ஸ்ரீ வல்லப தேவனுடைய கல்வெட்டு ஒன்றில் அரசனது ஆணையை எழுதியவனாகக் குறிக்கப்படுகிறான். *(111-1908)* இதே கல்வெட்டில் 'காலிங்கராயன்' என்பவன் குறிப்பிடப்படுகிறான். அரசன் காலிங்கராயன் வேண்டுகோளுக்கு இணங்கத் திருத்தளி மாதேவர்க்கும், அருகிலுள்ள சைவமடத்திற்குள்ள நிலங்களை இறையிலியாக்கினான்.

**காலிங்கராயன் :** தொண்டை மண்டலத்திலுள்ள மணவிற் கோட்டத்து மணவிற் ஊரினன், அருப்பாக்கிழான், நரலோகவீரன் போன்ற பட்டங்களை உடையவன். முதல் குலோத்துங்கன் படைத்தலைவனாயிருந்து பெருமையெய்தியவன். விக்கிரசோழன் காலத்திலும் இருந்தவன். சோழன் நடத்திய பாண்டிய, சேரநாட்டுப் போர்களில் புகழ் பெற்றவன். இவன் தில்லையில் செய்த திருப்பணிகள் பல. ஸ்ரீ வல்லப தேவனை அடுத்து ஆண்ட மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டொன்றில் குறிக்கப்பெறும் நரலோக வீரனும் இவனும் ஒருவரே. மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் காலத்தில் இவன் 'நரலோகவீரன்' என்ற சந்தியை ஏற்படுத்தினான். நரலோகவீரன் அல்லது காலிங்கராயன் மண்டபத்தைத் திருத்தளிநாதர் கோயிலில் எடுப்பித்தான் என்று இரண்டு *(98, 131-1908)* கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. வல்லபதேவன் கல்வெட்டில் 'மகாமாத்திரன் பெரியாழ்வானின் மனைவி குறிக்கப்படுகிறாள். இவன் சோழமண்டலத்து மருகல் நாட்டுப் பூதினூரைச் சேர்ந்தவன்.

**உலகமுழுதுடையார் :** திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வல்லபதேவரின் மனைவி. வல்லபதேவரின் மெய்க்கீர்த்தியில்

"வீர ஸிம்ஹாஸனத்து உலகமுழுதுடையாரொடும் வீற்றிருந் தருளிய" என்னும் வரிகளாலும் இது உறுதிப்படுகிறது. இவள் திருத்தளியாண்டார் கோயில் திருமடைப்பள்ளி செய்வித்தார் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. *(115-1908)* ராஜேந்திர சோழ கேரளனான நிஷதராஜன் என்பவனும் வல்லபதேவர் கல்வெட்டில் குறிக்கப்படுகிறான். இவனே பராக்கிரம பாண்டி யன் காலத்திலும் திருத்தளிநாதர் கோயிலுக்கு நெல் கொடுத் துள்ளான். *(94-1908)* கண்டன் உய்ய வந்தானான காங்கேயன் என்பவன் சடையவன் குலசேகரன் காலத்திலும், *(1162-1190)*, திரிபுவனச் சக்கரவர்த்திகள் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலும் *(1216-1238)* வாழ்ந்தவனாக இருக்கவேண்டும். ஏனெனில் இருவருடைய கல்வெட்டுக்களும் காங்கேயனைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவன் பாண்டிய அரசியல் அதிகாரி களுள் ஒருவனாக இருக்க வேண்டும். கேரளசிங்க வளநாட்டுப். தேனாற்றுப் போக்கிலுள்ள நியமம் என்ற ஊரில் பிறந்தவன் என்று கல்வெட்டுக்களால் தெரிகிறது. இவ்வூர் குன்றக்குடி அருகில் உள்ள 'நேமம்' என்று வழங்கப்படும் ஊராகும். இவனைப்பற்றி காங்கேயன் பிள்ளைத்தமிழ் என்ற ஒரு நூலும் உண்டு. அதிசய பாண்டிநல்லூரான குட்டக்குடி, வரகுணப் பெருமாள் என்பவனால் திருப்புத்தூர் திருத்தளி யுள்ள கூத்தாடுதேவரான நடராசத் தேவருக்கு அளிக்கப்பட் டிருந்ததைக், காங்கேயன் திருத்தளியாண்டார் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பிப்பார்க்கு இறையிலியாகக் கொடுத் ததை ஒரு கல்வெட்டு கூறுகிறது. இவன் ஆணைகளைத் தாங்கிய கல்வெட்டுகள் பல திருத்தளிநாதர் கோயிலில் உள்ளன.

**திருக்கொடுங் குன்றமுடையான் நிஷதராஜன்:** குல சேகரன் காலத்திலிருந்த ஒரு அரசியல் அதிகாரியாக இருக்க வேண்டும். பாண்டி நாட்டு, பொன்னமராவதியைச் சேர்ந்த வன். 'புறமலை நாட்டுப் பொன்னமராவதி திருவாலந்துறை யுடையான் திருக்கொடுங் குன்றமுடையான் நிஷதராஜன்' என்று திருப்புத்தூர்க் கல்வெட்டு *(100-1908)* இவனைக் குறிப் பிடுகிறது. இவன் திருத்தளியாண்டார் கோயிலில் மேலைத் திருவாசலில் உள்ள திருச்சிற்றம்பலமுடைய மடத்திற்குப்

பொருள் கொடுத்திருக்கிறான். இதைக் குறிப்பிடும் கல்வெட்டில் இறுதியில் இவன் கையொப்பம் இட்டுள்ளான்.

**மும்முடிச் சோழ பழவமாணிக்கமான மழவச் சக்கரவர்த்தி:** என்ற ஒரு அரசியல் அதிகாரியும் குலசேகர பாண்டியன் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறான். இவனுக்கு உரித்தான தென்வாய் இடைக்குடியின் ஒரு பகுதி காராண்கிழமையாக விற்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வரியைக் கொண்டு அமாவாசை தினங்களில் திருத்தளியாண்டார்க்குப் பஞ்சாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்ததை ஒரு கல்வெட்டு விளக்குகிறது (167-1935). இவனே தன் பிறந்த நட்சத்திரமான மகத்தில் ஆண்டபிள்ளையாரின் (பைரவர்) திருமஞ்சனத்திற்கும் வழிபாட்டிற்குமாகப், பிரான்குன்ற நாட்டில் சில நிலங்களைக் கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுத்துள்ளான்.

**கண்டன் ஆளுடையான் கல்வாயில் நாடாழ்வான்:** கேரள சிங்க வளநாட்டின் ஒரு பகுதி கல்வாயில் நாடு. இது கல்வாசல் என்றும் குறிப்பிடப்படும். தற்போதைய திருமெய்யம் தாலுகாவின் சில பகுதிகள் கொண்டது கல்வாயில் நாடென்று கொள்ளலாம். இதை ஆண்டவன்தான் கண்டன் ஆளுடையானான குலசேகர கல்வாயில் நாடாழ்வான். இவன் பாண்டியனுக்கு உட்பட்டு இப்பகுதியை ஆண்டிருக்க வேண்டும். தென்வாய் இடைக்குடியின் மற்றொரு பகுதி இவனைச் சேர்ந்தது. இப்பகுதியும் காராண்கிழமையாக விற்கப்பட்டு அதிலிருந்து வரும் வரியைக் கொண்டு, திருத்தளிநாதர் கோயிலில் உள்ள விநாயகப் பிள்ளையாருக்கு வழிபாட்டிற்காகச் செய்யப்பட்டது. இவனே ஸ்ரீ ராமதேவ தயாபரன் என்பவனுக்குப் பூங்குன்ற நாட்டிலுள்ள ஒரு கிராமத்தில் பயிர் செய்யும் உரிமையை விற்று அதிலிருந்து கிடைக்கும் வரியைக்கொண்டு திருத்தளியாண்டார் கோயிலில் உள்ள ஆண்டபிள்ளையாருக்குண்டான நிவந்தங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தான். (187-1935)

**அவனி முழுதுடையாள்:** இவள் குலசேகரபாண்டியனின் மனைவி என்று கல்வெட்டுக்களால் தெரிகிறது. இவள் திருத்

தளிநாதர் கோயிலுக்கு, சிவராத்திரி வழிபாட்டிற்காக 30 சோழியன் காசுகள் கொடுத்துள்ளாள் (190/1935). மற்றும் இவளே திருமஞ்சன தீர்த்தத்திற்காக 4 தண்ணீர்ப்பானைகள் கொடுத்துள்ளாள்.

**அழகப் பெருமாள்**: இவள் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் மைத்துனன் என்பது திருப்புத்தூர் கல்வெட்டால் தெரிகிறது. (183/1935). அழகப்பெருமாள் வேண்டுகோள்படி, மாறவர்மன் சில ஆணைகள் பிறப்பித்துள்ளான், திருபுவனத்து சீயன் சம்பந்தன் அதிகைமான் என்பவனால் திருத்தளியாண்டாருக்கு, சுந்தரபாண்டியன் பிறந்தநாளான புரட்டாசி அவிட்டத்தில் விசேட வழிபாட்டிற்காகவும், அவனால் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட கூத்தாடு தேவருக்கும், தேவிக்கும் வழிபாட்டிற்காகவும் நிலம் கொடுத்துள்ளான். இந்த நிலத்தை அழகப்பெருமாள் வேண்டுகோள்படி மன்னன் தேவதான இறையிலியாகச் செய்தான்.

**செம்பொன்மாரி**: இவன் தாழையூர் நாட்டு மழவ மாணிக்கம் திருக்கண்ணைப் பேருடையானான மழவச் சக்கரவர்த்திகள் செம்பொன்மாரி (129/1908) எனப்படுகிறான். இவன் சுந்தரபாண்டியனுடைய அரசியல் அதிகாரிகளில் ஒருவனாக இருத்தல்வேண்டும். கி.பி. 1162 முதல் 1190 வரை ஆண்ட குலசேகர பாண்டியன் காலத்திலும் இருந்திருக்க வேண்டும். குலசேகர பாண்டியன் காலத்தில் சிங்களர் படையெடுப்பு ஏற்பட்டபோது, சிங்கள தண்டநாயகன், செம்பொன்மாரியைக் கைது செய்ததாக, இலங்கை வரலாற்றுநூல் மகாவம்சமும் கூறுகிறது. திருப்புத்தூரில் திருஞானசம்பந்தர் திருமடத்தி இருந்த ஸ்ரீ கந்தசிவா என்ற ஆச்சாரியருக்குச், சோழ தேசத்தில் இருந்த நிலத்தை விற்றுக் கொடுத்ததை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

**விசயாலய தேவன்**: இவள் சூரைக்குடிப் பகுதியை, பாண்டியர்க்குட்பட்டு ஆண்டு வந்தவன் ஆவான். இவன் காலத்தில் சடையவர்மன் வீரபாண்டியன் ஆண்டு வந்தான்

அப்போது முகமதியர் தென்னாட்டை ஆக்ரமித்தனர். திருப்புத்தூரும் திருத்தளியாண்டார் கோயிலும் முகமதியர்களால் கைப்பற்றப்பட்டது. முகமதியர் அங்கு தங்கிக் கோயிலைப் பாழ்படுத்தினர். அதன் விளைவால் திருப்புத்தூர் மக்கள் ஊரைவிட்டே வெளியேறினர். இத்தருணத்தில் விசயாலய தேவன் கோயிலைப் புதுப்பித்து, தெய்வங்களின் உருவங்களை மீண்டும் பிரதிஷ்டை செய்தான். முகமதியர் கொடுமைகளிலிருந்து மக்களை ஓரளவு காத்து சமூக சமய தொண்டு செய்தான். திருப்புத்தூர் மக்கள் விசயாலய தேவனுக்கு நன்றியறிதலைத் தெரிவிக்கும் பொருட்டுத் தாங்களே விரும்பி, ஒவ்வொருவரும் தாங்கள் தானியங்கள் அறுவடை செய்தலிருந்து குறிப்பிட்ட அளவு கொடுத்தனர். திருத்தளியாண்டார் கோயிலில் சில விசேட மரியாதைகளை இவன் பெற்றான். இச்செய்திகளை திருத்தளிநாதர் கோயிலிலுள்ள இரண்டு கல்வெட்டுக்கள் (119, 120/1908) கூறுகின்றன. இவன் கல்வெட்டுக்களில் 'அதலையூர் நாட்டுத் தேனாற்றுப் போக்கு சூரைக்குடி அவையான் பெரிய நாயனாரான விசயாலயதேவன்' என்று குறிப்பிடப்படுகின்றான்.

கல்வெட்டு முகமதியர்களை ''யவனர்'' என்று கூறுகிறது. 'யவனர்கள்' முகமதியர்களைக் குறிக்கும் என்பது 'யவனர்கள் அல்லா என வந்து'' என்று வரும் பல்சந்தமாலைப் பாடலாலும் தெரிகிறது.

இவர்களே அல்லாமல் புலவர்கள் சிலரும், தேவரடியார் இருவரும், பாண்டிநாட்டு, சோழநாட்டு மக்களும் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறார்கள். பல இனிமையான தமிழ்ப் பெயர்களைப் பார்க்கமுடிகிறது. 'அமுதிற் பிறந்தநாள்' என்று ஒருத்தி (109/1908) குறிப்பிடப்படுகிறாள்.

**பெரும்பற்றப் புலியூர் நம்பி :** இப்பெயர் பெற்ற புலவர் திருவாலவாயுடையார் திருவிளையாடலை இயற்றியவர் என்பதும், வேப்பத்தூர் சோழிய பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும், அந்நூற் பதிப்பின் முகவுரையுள் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் எழுதிய ஆசிரியர் வரலாற்றால் தெரிகிறது. இவ்வரைப் பற்றிய குறிப்புத் திருப்புத்தூர் சாசன

தாலும் அறியப்படுகிறது. திருத்தளிநாதர் கோயிலிலுள்ள கல்வெட்டொன்று மாறவர்மன் குலசேகரபாண்டியனது 36-ம் ஆட்சியாண்டில் (1268 36 = 1304) அமைந்ததாக உள்ளது. இதனுள் திருத்தளிநாதர் கோயில் அர்ச்சகர்களால் பெரும் பற்ற புலியூர் நம்பி என்பார்க்கு நிலங்கள் சில அளிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது. இங்ஙனம் உதவப்பெற்றவர் திருவிளையாடற் புராண ஆசிரியரா? வேறு பிறரா என்பது தெளிவுபடவில்லையாயினும் கோயில் தலத்தாரும் அதிகாரி களும் புலவர்க்கு அவர் பாடல் பெறும் பொருட்டு நிலமுதவி வந்தனர் என்பது பல கல்வெட்டுக்களால் அறியப்படுகின்ற மையின், அம்முறையில் மேற்கூறிய அர்ச்சகர்களால் நிலம் கொடுக்கப்பட்டவர் திருவிளையாடற் புராண ஆசிரியரான பெரும்பற்றபுலியூர் நம்பியாக இருக்கலாம் என்று கருத இடமுண்டு.

**மறைஞான சம்பந்தர் :** சுந்தரபாண்டியதேவரின் 15வது ஆட்சியாண்டில் கப்பலூர்ப் பொன்னன் உய்யவந்தானான மானாபரணன் மூவேந்த வேளான் என்பவனால் பிரதிட்டை பெற்ற ஓங்கு கோயில் உறைவார் மூர்த்தியின் மேல் 'திருவம் பலமுடையார் மறைஞான சம்பந்தர்' என்ற புலமை பெரியா ரால் சக 1406-இல் (கி. பி. 1484) புராணம் பாடப்பட்டது என்றும் இதற்காக மன்னாரு மங்கலம் என்ற ஊரில் கோயிலைச் சேர்ந்த ஐந்துமா நிலம் பரிசளிக்கப்பெற்ற தென்றும் மகாசபை கூறுகிறது. திருப்புத்தூரிலுள்ள சிவ மடம் என்னுமிடத்தில் வாழ்ந்தவர். மெய்கண்ட சந்தானத் தைச் சேர்ந்தவர். இதனால் ஓங்கு கோயில் என்பது திருப் புத்தூர்ப் பழைய சிவாலயத்துள் சுந்தரபாண்டியன் காலத்தில் இருந்தது எனவும், இதற்குத் தனியே புராணம் பாடப்பட் டிருந்தது எனவும் அறியலாம். 15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட புராணம் கிடைக்கவில்லை. இந்த மறைஞானசம்பந்தர் திருவாரூர்க் கமலாலயப் புராணம், திருவண்ணாமலைப் புராணங்கள் பாடிய மறைஞானசம்பந்த ரின் வேறாய் முற்பட்டிருந்தவர்.

**தேவரடியார்கள் :** இசையிலும், கூத்திலும் வல்லுநரான பெண்கள் பலர் கோயில் ஈடுபட்டிருந்தார்கள். இவர்கள்

கல்வெட்டுக்களில் தேவரடியார்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு தலைக்கோலிகள் தளிச்சேரிப் பெண்டுகள் பதியிலார் கோயிற்பிணாக்கள் என்றும் பெயர்கள் வழங்கின. கோயிலில் திருவலகிடுவதும், திருமெழுக்கிடுவதும், மலர் தொடுத்தலும், இவர்கள் மேற்கொண்டிருந்த பணிகளில் சில. இவர்கள், தேவாரம், திருவாசகம் ஓதுவதும், நடனம் ஆடுவதும் அவர்கள் சிறப்பாக ஈடுபட்டிருந்த கலைத்தொண்டுகளாம். ஏறக்குறைய எல்லாக் கோயில்களிலும் தேவரடியார்கள் தொண்டு செய்து வந்தனர் எனத் தெரிகிறது. அவர்களுக்கு மானியங்கள் விடப்பட்டன. திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் கல்வெட்டுக்களிலும் தேவரடியார்கள் குறிக்கப்படுகிறார்கள். சுமார் 50 வருடங்களுக்கு முன்பு வரை இங்கு தேவரடியார்கள் இருந்திருக்கிறார்கள். சடையவர்மன் குலசேகர பாண்டியனுடைய கல்வெட்டில் (190-1935) சுந்தர அம்மையாழ்வியான குலசேகர மாணிக்கம் என்ற தேவரடியாள் ஒருத்தியின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

கைலாசமுடைய நாயனார் கோயிலில், தேவரடியாளான ஒருத்தி திருநாவுக்கரசர் படிமத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபாட்டிற்காகப் பொருள் அளித்ததையும் விக்ரமபாண்டியனின் 12-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று கூறுகிறது.

விஜய நகர அரசின் கீழிருந்த சில பாண்டிய நாட்டு அரசியல் தலைவர்களையும் நாம் திருப்புத்தூர்க் கல்வெட்டுக்களின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**விஸ்வநாத நாயக்கன்:** நாகம நாயக்கனின் மகன். மதுரை நாயக்கர் பரம்பரையின் முதல் மன்னன். விஜயநகர மன்னனாயிருந்த அச்சுததேவரயானின் கீழ், கி.பி - 1533 முதல் 1542 வரை அரசாண்டான். இவனால் தமிழகம் அடைந்த நன்மைகள் பல. இவனது ஆட்சிக்கு உறுதுணையாய் இருந்தவர் இவருடைய முதலமைச்சரும் படைத்தலைவருமான தளவாய் அரியநாத முதலியாரவர். பாளையப்பட்டு முறையை ஏற்படுத்தியவர் இவரே. மதுரை அரசு 72 பாளையங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தலைவரால் ஆளப்பட்டு வந்தது. இவ்விஸ்வநாத நாயக்கனைப் பற்றிய கல்வெட்டொன்று

திருப்புத்தூரில் உள்ளது. ஆண்டு 1457-இல் (கி. பி. 1535) விஸ்வநாத நாயக்கன் நன்மைக்காக வரகுண புத்தூர் என்ற கிராமம் கோயிலுக்கு கொடையாகக் கொடுக்கப்பட்டது.

**தும்பிச்சி நாயக்கன்:** சக ஆண்டு 1426-இல் (கி.பி. 1504) தும்பிச்சி நாயக்கன் என்பவன் கேரளசிங்க வளநாட்டு காரையூர் சீர்மையிலுள்ள வெள்ளப்பள்ளம் என்னும் கிராமத்தை கோயிலுக்குக் கொடையாக அளித்துள்ளான். தும்பிச்சி நாயக்கனின் பல விருதுப் பெயர்கள் கல்வெட்டில் (178-1935) காணப்படுகின்றன. இவன் வரிசை நாட்டைச் சேர்ந்த ஏரலிங்கைய்ய நாயக்கனின் மகனாவான்.

மற்றும் வெங்கல நாயக்கன், வீரநரசிம்மரான செல்லப்பர் பெரிய ராமப்பய்யன் போன்றோரும் குறிக்கப்படுகின்றனர். இவர்கள் மதுரை நாயக்கருக்கு உட்பட்டு இராமநாதபுரம் பகுதிகளை ஆண்டவர்களாக இருக்கவேண்டும். வெங்கல நாயக்கனுக்கு திம்மப்பன் என்ற பெயரும் உண்டு. இப் பெயரால் இவன், திருப்புத்தூரின் ஒரு பகுதியான நெடு மரத்தில் திம்மப்பன் ஊருணியை சகம் 1440-இல் (கி.பி. 1518) கிருஷ்ண தேவராயர் காலத்தில் கட்டினான். திம்மப்பன் ஊருணி என்பது தற்போது 'தெம்மாப்பட்டு ஊருணி' என்று வழங்கப்படுகிறது.

## ஊரும் நாட்டுப்பிரிவும்

பாண்டிநாடு பரந்த நிலப்பரப்பு உடையதாக இருத்தலின் ஆட்சி நன்கு நடைபெறுமாறு முற்காலத்தில் பலபிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பலபிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு பல நிர்வாகிகளால் ஆளப்படும் நிர்வாகம் சிறப் பாகவும் செம்மையாகவும் இயங்க இயலும். கோட்டம், கூற்றம் அல்லது வளநாடு என்பவை தற்போதைய மாவட் டங்களுக்கும், நாடுகள் என்பவை தாலுகாவிற்கும் ஒப்பாகும் நாடுகள் பல ஊர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இது தவிர பிரமதேயம் சதுர்வேதிமங்கலம் என்பவை அந்தணர்களுக்கு வழங்கிய பகுதிகள், கோயிலுக்குச் சொந்தமானவை தேவ தானம் எனப்பட்டன. வணிகர்கள் வாழ்ந்தபகுதிகள் நகரங் காளகும்.

**திருப்புத்தூரும் நாட்டுப்பிரிவும்:** *கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் திருப்புத்தூர் 'திருப்புத்தூர் என்றும்' (136-1908) 'கொழுவூர் கூற்றத்துப் பிரமதேயமான திருப்புத்தூர்' என்றும், (139-1908) 'கொழுவூர் கூற்றத்து மீகுண்டாற்று பிரமதேய மான திருப்புத்தூர்' என்றும் (90-1908) குறிக்கப்பட்டுள்ளது திருப்புத்தூர் முற்காலபாண்டியர் காலத்திலேயே பிரமதேய மாக இருந்திருக்கிறது. கி. பி. 10, 11- ஆம் நூற்றாண்டுகளில் சோழர் ஆட்சியின் போதும், கி. பி. 12,13,14-ஆம் நூற்றாண்டு களில் பிற்காலப் பாண்டியர் ஆட்சியின் போதும் கி.பி. 15,16-ஆம் நூற்றாண்டுகளில் விஜயநகர மன்னர்கள் காலத்திலும் 'கேரள சிங்க வளநாட்டு பிரமதேயமான திருப்புத்தூர்' என்றும், பாண்டி மண்டலத்து கேரளசிங்க வளநாட்டு பிரமதேயமான திருப்புத்தூர்' என்றும், 'திருப்புத்தூர்' என்றும் குறிக்கப் பட்டுள்ளது. கேரளசிங்க வளநாடு என்பது பாண்டிநாட்டின் ஒரு பிரிவு. இன்றும் நாட்டுக்கோட்டை நகரத்தார் தாங்கள் திருமணத்தின் போது எழுதுகின்ற இசைக்குடிமானப் பத்திரத் திலும் பிறவற்றிலும் 'கேரளசிங்க வளநாடு' என்று குறிப் பிட்டே எழுதுகிறார்கள்.*

*கொழுவூர் கூற்றம் என்பது சோழர்கள் காலத்தில் கேரளசிங்க வளநாடாக மாறிய போதிலும் பிரமதேயம் என்பதும் திருப்புத்தூர் என்பதும் கல்வெட்டில் மாறாமல் இடம் பெற்றுள்ளது. சக ஆண்டு 1497-இல் (கி. பி. 1575) பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று (163/1935) திருப்புத்தூர் சீர்மை என்று குறிப்பிடுகிறது. 'சீர்மை' என்பது நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட நாட்டுப் பிரிவாகும். தற்போது திருப் புத்தூர், இராமநாதபுரத்து, திருப்புத்தூர்வட்டத்துத் திருப் புத்தூராக இருக்கிறது.*

**பிறஊர்களும் பிரிவுகளும்:** *மாறஞ்சடையன் கல்வெட்டுக் களில் பொழியூர் நாட்டுப்பொழியூர் மணற்குடி, அருகந்தூர், வேண்பைக்குடி நாட்டு இளவேண்பைக்குடி, (90, 136, 138-1908) ஆகியவை குறிக்கப்படுகின்றன. வரகுணமாராயர் கல்வெட்டில் முத்தூற்றுக் கூற்றத்துப் பெருமாத்தூர் இடம் பெறுகிறது.*

ஸ்ரீவல்லபதேவரின் கல்வெட்டுக்களில் 'மாடக்குளக் கீழ் மதுரை', மண்ணாணி மங்கலமான மேற்த்திருமங்கலம், கீழ் முள்ளிவயல் கேரள சிங்க வளநாட்டு அருவியூரான தேசி உய்ய வந்த பட்டணம், தஞ்சாவூர், கூற்றலூர், சோழமண்டலத்து கேய மாணிக்க வளநாட்டு மருகல்நாட்டு பூதனூர் ஆகியவை குறிக்கப்படுகின்றன.

மாறவர்மன் பராக்கிரமபாண்டியன் கல்வெட்டுக்களில் புறமலைநாட்டுப் பொன்னமராவதி, காரையூர், அதிசயபாண்டி நல்லூரான குட்டக்குடி, திருக்கொடுங்குன்றம் ஆகியவை குறிக்கப்படுகின்றன.

சடையவர்மன் குலசேகரன் கல்வெட்டுக்களில் தேனாற்றுப் போக்கு நியமம், தென்வாய், இடைக்குடி, சோழபாண்டிய வளநாட்டு குலசேகர சதுர்வேதி மங்கலம், கல்வாயில்நாடு பிரான் குன்றநாடு, மிழலைக் கூற்றத்து பாலூரான ராஜகேசரி நல்லூர் ஆகியவை குறிக்கப்படுகின்றன.

மாறவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டுக்களில் மிழலைக் கூற்றத்து நடுவீற் கூற்று புள்ளூர்க்குடி, கீழ்ச்செம்பி நாட்டு கீழைக் கொடும்பாளூரான மதுரோதய நல்லூர், கல் வாயில் நாட்டு அருவலம், திருப்புவனம், கேரளசிங்க வளநாட்டு வெளியாற்றூர், தாழையூர்நாடு, திருக்கோட்டியூர் ஆகியவை குறிக்கப்படுகின்றன.

மாறவர்மன் குலசேகரன் கல்வெட்டு, அருவியூரான குல சேகர பட்டணத்தைக் குறிக்கிறது.

கேரள சிங்க வளநாட்டு சோழிய நாராயணபுரமான அழகாபுரி, சூரைக்குடி, அதலையூர் நாட்டுத் தேனாற்றுப் போக்கு சூரைக்குடி ஆகியவை, வீரபாண்டியன் கல்வெட்டுக் களிலும், கல்வாயில் நாட்டுச் சடையனேரி, சப்பலூர், வரிசை காடு, நெடுமரம், நாரணமங்கலம், காரையூர் சீர்மையிலுள்ள வெள்ளப் பள்ளம், சுருவியூர் நகரமான குலசேகரபட்டணம், வரகுணபுத்தூர், சோழ, பாண்டிய வளநாட்டு சாந்தமங்கலம், பிரான்மலை ஆகிய ஊர்கள் விக்கிரமபாண்டியன் கல்வெட்

டுக்களிலும், விஜயநகர மன்னர்கள் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்படுகின்றன.

இக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும் ஊர்களுள் திருக் கொடுங்குன்றம் என்பது பிரான்மலை எனவும், நியமம்-நேயம் எனவும், திருவிராயீசுவரம்-திருவாலீசுவரம் எனவும் வழங்கப் படுகின்றன. காரையூர், நெடுமரம், அழகாபுரி, சதுர்வேதி மங்கலம், திருக்கோட்டியூர், திருபுவனம், சிறுவயல், பொன் னமராவதி, கூத்தலூர் போன்ற ஊர்கள் இன்னும் இதே பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

## பிற ஊர்க் கல்வெட்டுக்களில் திருப்புத்தூர்

திருப்புத்தூர் அருகிலுள்ள நகரத்தார் வயிரவப்பட்டியில் ஒரு கல்வெட்டு வயல் நடுவே உள்ளது (ARE 62/1946) இதில் திருப்புத்தூரும், திருத்தளிநாதர் கோயிலும் குறிக்கப் பட்டுள்ளது. விஜய நகர ஆட்சிக்கு பாண்டிநாடு உட்பட்டி ருந்த காலத்தில் 'இச்சக்குடி' என்றும் (Ichchakkudi) கிரா மத்தை திருத்தளிநாதர் கோயிலுக்கு வெங்கல நாயக்கன் என்பவன் மானியமாகக் கொடுத்ததைக் கூறுகிறது.

வைணவத் தலமான திருக்கோட்டியூரில் திருப்புத்தூர் சீர்மை குறிக்கப்படுகிறது. (A.R.E. 292/1923)பெரிச்சிக்கோயில் என்னும் ஊரில் உள்ள கல்வெட்டொன்றும் திருப்புத்தூரைக் குறிக்கிறது.

திருநெல்வேலி திருவாலீசுவரம் சிவன்கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் கி.பி, 12-ஆம் நூற்றாண்டில், சடைய வர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் திருப்புத்தூர் குறிப் பிடப்பட்டுள்ளது. திருப்புத்தூரைச் சேர்ந்த, 'திருப்புத்தூர் சோமாசி பள்ளிகொண்டான்' என்பவனும் 'திருப்புத்தூர் கொற்றவல்லி நாராயணன்' என்பவனும் சாட்சிக் கையெழுத் திட்டிருக்கின்றனர்.

ஈரோடு தாலுகாவில் உள்ள திங்களூரில் அழகைய்ய ராஜப் பெருமாள் கோவிலில் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்

திய கல்வெட்டில் (617-1905) 'பாண்டி மண்டல கேரள சிங்க வளநாட்டு திருப்புத்தூர்' குறிப்பிடப்படுகிறது. இவையனைத்தும், அக்காலத்தில் மக்கள் மற்ற ஊர்கள் அங்குள்ள மக்கள் ஆகியோருடன் கொண்டிருந்த தொடர்பை விளக்குகின்றன.

## கல்வெட்டில் கடவுளர்

முற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்களில் திருப்புத்தூர் இறைவனது பெயர் 'திருக்கற்றளிப் படாரர்' என்றும் (90-1908) திருத்தளிப் பெருமானடிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிற்காலப் பாண்டியர் விஜயநகர மன்னர் கல்வெட்டுக்களில் 'திருத்தளி பவுடாதேவர்' என்றும் ஸ்ரீ தளி பரமேசுவரர் என்றும் (93,1908), திருத்தளி உடைய பரமேசுவரர் என்றும், திருத்தளியாண்ட நாயனார் என்றும் குறிக்கப்படுகிறது.

அம்மை திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் என்றும் (123-1908) பள்ளியறை நாச்சியார் எனவும் அழைக்கப்படுகிறார். இவைகளையன்றி கோயிலுக்குள் கைலாசமுடைய நாயனார் (114-1908) அகத்தீசுவரம் உடையார் (130-1908) ஆகிய தெய்வங்களும் குறிப்பிடப்படுகின்றன. முதல் பிரகாரத்திலுள்ள, வடமேற்கு மூலையில் உள்ள அகத்தியலிங்கம் தான் அகத்தீஸ்வரமுடையவராக இருக்கவேண்டும்.

சடையவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டில் கூத்தாடுந்தேவரான நடராசதேவர் குறிப்பிடப்படுகிறார்.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களிலிருந்து பைரவர் அறியப்படுகிறார். பைரவர் வழிபாடு இங்கு சிறப்புற்றிருந்தது. பைரவர் 'ஆண்டபிள்ளையார்' என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறார்.

பாணலிங்க நாயனார் பைரவர் கருவறைக்குக் கிழக்கிலுள்ள நாத [illegible] கூறுகிறது [illegible] 69 93[illegible]. [illegible] பைர[illegible] [illegible] பாணலிங்க நாயனாராக இருக்கவேண்டும்

வீரபாண்டியன் காலத்தில் கேரளசிங்கவள நாட்டு சோழியபுரமான அழகாபுரியைச் சேர்ந்த மன்னார் குடையான் பொற்படிக நாயனார் திருவம்பலப் பெருமாள் என்பவன், 'திருவம்பலப் பெருமாள்' தட்சணாமூர்த்தி, திருச்சிற்றம்பல முடையார், திருவாதவூர் நாயனார்' ஆகியோர் படிமங்களைப் பிரதிஷ்டை செய்து நிவந்தங்கள் கொடுத்திருக்கிறான். மூன்றாம் பிரகாரத்தில் இருந்ததாகக் கூறப்படும் திருவம்பலப் பெருமாள், திருச்சிற்றம்பலமுடையார், திருவாதவூர் நாயனார் ஆகியோர் படிமங்களைப்பற்றி அறிய இயலவில்லை. கருவரை யின் தென்புற தேவகோட்டத்தில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் தக்ஷிணாமூர்த்தியின் படிமம் இன்றும் அங் குள்ளது (A R E 174, 175-1935).

'தியாகப்பெருமாள் நாயனார்' என்ற ஒரு இறைவன் பெயர் அச்சுத தேவராயர் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. 'ஓங்கு கோயில் உறைவார்,' 'உய்யநின்றாடுவார்' என்ற இறையுருவங்கள் பொன்னன் உய்யவந்தானான மானாபரண மூவேந்த வேளான் என்பவனால் இக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டன (180-1935) என்று தெரிகிறது. இவை எவை என்று தெரியவில்லை.

இங்கு கைலாசமுடைய நாயனார் கோயிலில் தேவரடி யாள் ஒருத்தி திருநாவுக்கரச நாயனார் உருவத்தைப் பிரதிஷ்டை செய்தாள் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது, (117-1908) 'சூரியதேவர்' என்ற ஒரு படிமமும் திருத்தளி நாதர் கோயிலில் இருந்தததாகத் தெரிகிறது (134-1908). மற்றும் திருத்தளிநாதர் கோயில் கல்வெட்டுக்களில் ஜயங் கொண்ட சோழ விண்ணகர ஆழ்வாரும் கோயிலும் குறிக் கப்படுகின்றது. இதைப் பற்றி அறிய இயலவில்லை.

அங்காளம்மன் கோயிலிலுள்ள மாறஞ்சடையனின் வட் டெழுத்துக் கல்வெட்டு 'ஜலசயனத்துப்படாரர்' என்ற பெருமாளைக் குறிக்கிறது. இதுபற்றியும் அறிய இயல வில்லை. இங்குள்ள ஒரு துண்டுக் கல்வெட்டில் 'அங்கா ளம்மன்' என்று காணப்படுகிறது. நின்ற நாராயணப் பெருமாள், கோயில் பற்றிய செய்தி 13-ஆம் நூற்றாண்டுக்

கல்வெட்டில் (140-1908) உள்ளது. இப்பெருமாள் கோயிலுள்ள கல்வெட்டில் 'கோலவராக விநாயகர்' குறிப்பிடப்படுகிறார். அங்காளம்மன் கோயிலும், நின்ற நாராயணப் பெருமாள் கோயிலும் தற்போதும் அதே பெயரில் உள்ளன. நின்ற நாராயணப் பெருமாள் கோயிலில் அதிட்டானப் பகுதியில் உள்ள கல்வெட்டுக்கள் படிக்க இயலாதபடி மண்ணுக்குள் புதைந்துள்ளன.

## கொடைகள்

திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் பெரும்பான்மையும் கொடையைப் பற்றியும் குறிக்கின்றன. இக்கொடைகள் நொந்தாவிளக்கெரிக்கவும், பூசைக்காக மலர்மாலை வழங்குதற்கும், திருப்பதியம் ஓதுவதற்கும், திருவிழா எடுப்பதற்கும் அளிக்கப்பட்டன. இக்கொடைகள் அரசமாதேவியர்களாலும், அரசனாலும், அதிகாரிகளாலும், தனிப்பட்டவர்களாலும் அளிக்கப்பட்டன.

**திருவிளக்குகள் :** கோயிலுக்கு விளக்கேற்றும் புனிதச் செயலுக்காகச் சிலர் கொடைகள் கொடுத்திருக்கிறார்கள். இரவும் பகலும் இடைவிடாது எரியும் விளக்குகள் நந்தா விளக்குகளாம். நந்தாவிளக்கு, நுந்தாவிளக்கு, நொந்தா விளக்கு என்று கல்வெட்டுக்களில் பலவாறு கூறப்படுகிறது. விளக்குகள், தராவால் செய்யப்பட்டவை என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. விளக்குகள் நிலைவிளக்கு, தராவிளக்கு, விளக்குத் தண்டு என்று கல்வெட்டுக்களில் கூறப்படுகின்றன. விளக்குகளின் எடைகளும் சில கல்வெட்டுக்களில் கொடுக்கப் பட்டுள்ளன.

கோயிலுக்கு விளக்குகளைக் கொடுத்ததோடு அமையாமல், அவற்றை எரிப்பதற்கும் பொன், காசு, நிலம் முதலியன கொடுத்து, ஒரு நாளைக்கு விளக்கு எரிப்பதற்கு இவ்வளவு நெய் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடு செய்துள்ளனர். பொதுவாக விளக்குகள் நெய்யால் எரிக்கப்பட்டன. நெய்க்காக ஆடு, பசு, எருமை காசு, பொன் ஆகியவை வழங்கப்பட்டன.

மாறஞ்சடையன் காலத்தில் பொழியூர் நாட்டுப் பொழியூர் தென்னவன் பல்லவரையனாயின மாறனாச்சன், திருத்தளி

யாண்டார்க்கு நந்தர்விளக்கு ஒன்று கொடுத்திருக்கிறான். இந்த நந்தா விளக்கின் எடை 120 பலம். இவ்விளக்கு இரவு பகல் முட்டாமல் சந்திராதித்தவல் எரிகிறதாக கோயில் பண்டாரத்தில் தினமும் சூல நாழியால் உரிநெய் கொடுக்கும்படியாக 40 கழஞ்சு பொன் மணற்குடி சபையார் கையில் கொடுத்திருக்கிறான் (90-1908).

அருகந்தூர் பிராமணி மாறம்பட்டாத்தாள் என்பவள் திருத்தளிப் பெருமானடிகளுக்கு நொந்தாவிளக்கெரிய பத்து காசுகள் கொடுத்திருக்கிறாள். நொந்தாவிளக்கெரிக்க முத்தூற்றுக் கூற்றத்து பெருமாத்தூர் மறவனணுக்கப்பேரரயனாயின கடம்பன்வேளான் என்பவன் நிறைகுறையாப் பழங்காசு பதினைந்து கொடுத்திருக்கிறான். இக்காசிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு நந்தா விளக்கெரிக்க ஏற்பாடு செய்துள்ளான் (137-1908).

ஸ்ரீ வல்லப தேவர் கல்வெட்டில், ஸ்ரீதளிபரமேசுவரற்கு இந்நாட்டுக் கூற்றலூர் வெள்ளாளன் திருக்குடிக்குடிதேவன் திருநொந்தாவிளக்கு ஒன்றினுக்காக நிசதம் உழக்கால், உழக்கு நெய் கொடுப்பதாக இக்கோயிலைச் சேர்ந்த இடையன் வேந்தன் பட்டநான திருவீதிக் கொள்கை என்பானிடம் சாவா மூவாப் பெரும்பசு 25-ம், எருமை 1-ம் கொடுத்துள்ளான் (108-1908).

சோழநாட்டு கேயமாணிக்க வளநாட்டு மருகல் நாட்டு பூதனூர் மஹாமாத்திரன் பெரியாழ்வானின் அகமுடையாள் அமுதிற் பிறந்தாள் என்பவள் தராநிலைவிளக்கு ஒன்று கொடுத்திருக்கிறாள். தினமும் விளக்கெரிக்க உழக்கு நெய் கொடுக்கும் படியாக இடையன் சேரமான் ஐயங்கொண்டான் வசம் சாவா மூவாப் பெரும்பசு 25-ம், எருமை ஒன்றும் கொடுத்துள்ளாள் (109-1908).

திருத்தளிப் பரமேசுவரற்கு ராஜேந்திர சோழ கேரளனான நிஷதராஜன், நுந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்கு சூல உழக்கால் உழக்கு நெய் சந்திராதித்தவல் கொடுக்கும்படியாக இடையன் நங்கன் சோறன் என்பவன் கையில் சாவாமூவாப் பேராடு 50 கொடுத்திருக்கிறான்.

தேனாற்றுப் போக்கு நியமத்தைச் சார்ந்த ஒருவன் திருத்தளி நாதர் கோயிலில் ஒரு விளக்கெரிப்பதற்காகப் பொருள் கொடுத்துள்ளான். விளக்குத் தண்டும் கொடுத்துள்ளான்.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கேரள சிங்க வெளியாற்றூர் குவலயத் தரையன் 50 சோழியன் காசுகளை கோயிலில் இரு விளக்கெரிப்பதற்காகக் கொடுத்து அதற்கான ஒப்பந்தமும் சிவபிராமணர்களிடையே செய்து கொண்டிருக்கிறான்.

மாறவர்மன் குலசேகரன் காலத்தில் பைரவர் சன்னிதிக்கு கிழக்கே உள்ள பாணலிங்க நாயனார் சன்னிதி முன்பாக இரு நொந்தா விளக்கெரிக்கும்படியாக கோயில் சிவபிராமணர்களிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு அருவியூரான குலசேகர பட்டணத்து ஸ்ரீ கைலாயமுடையான் 60 வராகன் கொடுத்திருக்கிறான் (169-1935).

விஜயநகர மன்னர் அச்சுததேவராயர் காலத்தில் திருத்தளியாண்டார் சன்னிதியிலும், சிவகாம சுந்தரியார் சன்னிதியிலும் எரிப்பதற்காகச் சந்தியாதீபம் இரண்டு, வெங்கல நாயக்கனால் கொடுக்கப்பட்டது.

**நிலக்கொடை :** கோயிலுக்கு நிலம் தானமாகக் கொடுத்தைப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. விளக்கெரிப்பதற்காகவும், கோயில் வழிபாட்டிற்காகவும், திருப்பதியம் விண்ணப்பம் செய்பவர்களுக்காகவும், பிறவற்றிற்காகவும் நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன. சில வேண்டுதல்களின் காரணமாகவும் நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன. கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட, கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் தேவதான நிலங்கள் எனப்பட்டன. இவை இறையிலியாக்கிக் கொடுக்கப்பட்டன. நிலத்தைக் கோயிலுக்கு விற்கும்போதும், மற்றவர்களுக்கு விற்கும்போதும், அதன் நான்கு பக்கஎல்லைகள், பரப்பளவு, ஓடும் வாய்க்கால்கள் ஆகியவை விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

பாண்டியன் வல்லபதேவன், காலிங்கராயன் வேண்டுகோளின்படி திருத்தளி மகாதேவற்கு திருப்படிமாறுள்ளிட்ட

நிவந்தங்களுக்காக இரு கிராமங்களை இறையிலியாக்கிக் கொடுத்துள்ளதை ஒரு கல்வெட்டு கூறுகிறது. (111-1908)

காங்கேயன் என்னும் அரசியல் அதிகாரி திருத்தளியாண்டார் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பிப்பாற்கு குட்டக்குடி என்னும் ஊரை இறையிலியாக் கொடுத்ததை சடையவர்மன் குலசேகரன் கல்வெட்டொன்று (99-1908) கூறுகிறது. மும்முடிச் சோழ மழவர் மாணிக்கமான மழவச் சக்கரவர்த்திகளால் பிரான்குன்ற நாட்டில் சில நிலங்கள் தேவதானமாகக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. இவன் தன் பிறந்த நட்சத்திரமான மகத்தில் ஆண்டபிள்ளையாரின் திருமஞ்சனத்திற்கும் வழிபாட்டிற்குமாகக் கொடுத்துள்ளான். (188-1935)

விஜய நகரத்தை அரசாண்ட வீரப்பிரதாப அச்சுத தேவ மகாராயர் நன்மைக்காகப் பெரிய ராமப்பய்ய நாயக்கனால் பைரவருக்கு நிலம் அளிக்கப்பட்டது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் வீர நரசிம்மராய நாயக்கரான செல்லப்பர் நன்மைக்காக திருப்புத்தூருடையான் சிங்கம நாயக்கனால் நிலம் வழங்கப்பட்டது. நாகம நாயக்கர் மகனான விஸ்வநாத நாயக்கன் நன்மைக்காக ஒரு கிராமம் வழங்கப்பட்டது.

## பிற செய்திகள்

**பூசைகளும் விழாக்களும்:** திருத்தளிநாதர் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் சிலவற்றின்மூலம் அக்காலத்தில் நடந்த சில விழாக்களைப் பற்றியும், பூசை முறைகளைப் பற்றியும் அறிந்துகொள்ளமுடிகிறது.

கோயில்களில் பல விழாக்கள் கொண்டாடப்பட்டன. அரசர்கள், அரசியல் அதிகாரிகளின் பிறந்த நட்சத்திரங்களில் விழாக்கள் எடுக்கப்பட்டன. சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் புரட்டாசி அவிட்டத்தில் பிறந்தவன். இந்நாளில் விசேட வழிபாட்டிற்காகக் கோயிலுக்கு நிலம் கொடுக்கப்பட்டதைத் திருப்புத்தூர் கல்வெட்டு கூறுகிறது.

மும்முடிச் சோழன் மழவர்மாணிக்கமான மழவச் சக்கரவர்த்தி, தன் பிறந்த நட்சத்திரமான மகத்தில் பைரவருக்கு

திருமஞ்சனம், விசேட வழிபாட்டிற்காக பிரான் குன்ற நாட்டில் சில நிலங்களைத் தேவதானமாகக் கோயிலுக்கு கொடுத்துள்ளான் (188-1935).

பாண்டிய மன்னர்களும், அதிகாரிகளும் தங்கள் பிறந்த நாளின் நினைவாகக் கோயில்களில் சந்தி ஏற்படுத்தி வழிபாடு செய்து வந்திருக்கின்றனர். தங்கள் பெயரால் சந்தி அமைத்து தங்களுக்கு நல்வாழ்வைத் தருமாறு வேண்டி, கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளனர். பிரான்மலைச் சீர்மையை ஆண்டுவந்த சிறுப்பண்ண நாயக்கன் என்பவன் தன் பெயரால் 'சிறுப்பண்ண நாயக்கன் சந்தி' என்ற சிறுகாலைச் சந்தி நடக்கவும் மற்றும் அமுதுபடிக்கும் ஏற்பாடு செய்துள்ளான் (163-1935).

முதல் குலோத்துங்கனின் படைந் தலைவனாய் இருந்த நரலோக வீரன் பெயரால், ஸ்ரீதளி பரமேசுவரர் கோயிலில் 'நரலோகவீரன் சந்தி' என்ற விழா நடத்த ஏற்பாடு செய்யப் பட்டது என்றொரு கல்வெட்டு கூறுகிறது (98-1908).

தைப்பூசம், சிவராத்திரி, சூரியகிரணம், அமாவாசை போன்ற நாட்களிலும் விசேட பூஜைகள், வழிபாடுகள் நடந்தன என்று தெரிகிறது. மழலைக் கூற்றத்துப் பாலூரரான ராஜகேசரி நல்லூரைச் சேர்ந்த ஆண்டபிரான் திருநெல்வேலியுடையான், திருத்தளிநாதர் கோயிலில் தைப்பூசத் திருவிழாவிற்காக ஆகும் செலவுகளுக்காகச் சில நிலங்களை இறையிலியாகக் கொடுத்துள்ளான். இத்தைப்பூசத் திருவிழா காலிங்கராயன் மண்டபத்திலும் ஆயிரத்தெழுநூற்றுவன் மண்டபத்திலும் நடக்குமென்று கல்வெட்டு கூறுகிறது (171-1935). "காலிங்கராயன் திருமண்டபத்திலே திருக்காப்பு நாண் சாத்தி அமுது செய்தருளிப் பூசத்துநாள் எழுந்தருளித், திருச்சுற்றிலே எழுந்தருளி, மடங்களிலும் திருப்பாட்டுக் கேட்டருளித் திருமண மண்டத்திலே..." என்று தொடர்கிறது கல்வெட்டு.

'அவனி முழுதுடையாள்' என்ற குலசேகரரின் பட்டத்தரசியார், திருத்தளிநாதர் கோயிலில் சிவராத்திரி வழிபாட்டிற்காக 30 சோழியன் காசுகள் கொடுத்துள்ளாள்.

அமாவாசை தினங்களில் திருத்தளியாண்ட நாயனார்க்கு பஞ்சாபிஷேகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டதை குறிக்கிறது ஒரு கல்வெட்டு (157-1935).

புறமலைநாட்டுப் பொன்னமராவதியான ராஜேந்திர சோழ கேரளனான நிஷகராஜன் திருத்தளியாண்டார் திருவிழாவிற்காக நெல் கொடுத்ததை ஒரு கல்வெட்டு கூறுகிறது (94 - 1935).

**மண்டபங்கள் :** திருத்தளிநாதர் கோயிலில் பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் காலிங்கராயன் மண்டபம், ஆயிரத்தெழுநூற்றுவன் மண்டபம், தயாபஞ்சரம் என்னும் மண்டபங்கள் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் மூலம் அறிகிறோம். சபையார் கூடித் தயாபஞ்சரம் என்னும் மண்டபத்தைத் திருப்பணி செய்ததையும் கல்வெட்டு கூறுகிறது. தயாபஞ்சரம் என்றழைக்கப்படும் மண்டபத்தில் மகாசபையார் கூடிச் சில கொடுக்கல், வாங்கல் செய்தனர் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. காலிங்கராயன் மண்டபத்தில், தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது என்று முதல் திருச்சுற்று மாளிகைச் சுவரிலுள்ள கல்வெட்டு கூறுகிறது. காலிங்கராயன் மண்டபம் என்பது முதல் பிரகாரத்தில் நடராசர் சன்னிதிக்கு முன்னுள்ள அழகிய சிற்ப வேலைப்பாடுடைய மண்டபமாக இருக்கலாம்.

**படிமங்கள் :** ஏற்கனவே செப்புத் திருமேனிகள் செய்வித்து எழுந்தருளப் பட்டதைக் கண்டோம். அரசியல் அதிகாரிகளும் தனிப்பட்டவர்களும் தெய்வங்களின் படிமங்களையும், அப்பர், மணிவாசகர் போன்றவர்களின் திருமேனிகளையும் செய்தளித்து, வழிபாட்டிற்கு வேண்டிய நிவந்தங்களை அளித்தமை பற்றி நாம் திருப்புத்தூர்க் கல்வெட்டின் வழி அறிகிறோம்.

சடையவர்மன் குலசேகரன் காலத்தில், 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியாரைக் கண்டிய தேவன் என்பவன் பிரதிஷ்டை செய்ததாக அறிகிறோம். (123-1908).

13-ஆம் நூற்றாண்டில், சடையவர்மன் வீரபாண்டியன் காலத்தில், கேரளசிங்க வளநாட்டுச் சோழிய நாராயணபுர மான அழகாபுரியைச் சேர்ந்த மன்னார்குடையான் பொற் படிச்சு நாயகன் திருவம்பலப்பெருமாள் என்பவன், திருத் தளிநாதர் கோயிலில் மூன்றாம் பிரகாரத்தில் கோபுரத்திற்கு வடக்கே 'திருவம்பலப் பெருமாள்' என்ற படிமத்தை எழுந் தருளிவித்துத் தட்சிணாமூர்த்தியைக் கருவறைத் தேவகோஷ் டத்தில் எழுந்தருளுவித்து அதற்கு வழிபாட்டிற்கு வேண்டிய பொருளும் கொடுத்துள்ளான். இவனே திருச்சிற்றம்பலமுடை யார் திருவாதவூர் நாயனார் என்னும் படிமங்களை மூன்றாவது பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்து, வழிபாட்டிற்காகப் பொரு ளும் கொடுத்துள்ளான்.

14-ஆம் நூற்றாண்டில் விக்கிரமபாண்டியன் காலத்தில் தேவரடியாள் ஒருத்தி கைலாசமுடைய நாயனார் கோயிலில் திருநாவுக்கரசர் உருவத்தைப் பிரதிஷ்டை செய்ததாக அறி கிறோம் (116-1908).

**மடங்கள்:** கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலி ருந்து, குலசேகர பாண்டியன் கல்வெட்டிலிருந்து நாம் திருப்புத் தூரில் இருந்த மடங்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. இக்காலத்தில் தமிழகமெங்கும் தேவார ஆசிரியர்கள் பெயரால் மடங்கள் தோன்றின. இவைகள் 'குகைகள்' என்று சொல்லப் பட்டன. பெரும்பாலும் இம்மடங்கள் யாத்திரிகர்கள் தங்கு மிடமாகவும், அடியவர்கள் தங்குகின்ற இடமாகவும் இருந்தன. பல மடங்கள் வழிப்போக்கர்களுக்கு உணவு முதலியன அளித்தன. மேலும் இங்கு சைவாகமங்கள் போதிக்கப்பட்டன. மன்னர்களும், அதிகாரிகளும், தனிப்பட்டவர்களும் இம்மடத் தின் வளர்ச்சிக்காகக் கொடைகள் கொடுத்திருக்கிறார்கள். கோளகி மடங்கள் என்ற சைவச் சார்புடைய மடங்கள் நாட்டில் ஆங்காங்கு நிறுவப்பட்டன.

திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் கல்வெட்டுக்களிலி ருந்து நாம் திருஞான சம்பந்தர் திருமடம், திருத்தொண்டத் தொகையான் திருமடம், திருச்சிற்றம்பலமுடைய திருமடம் என்ற மூன்று மடங்கள் திருப்புத்தூரில் இருந்ததாக அறிகி

றோம். திருத்தொண்டத் தொகையான் திருமடம் என்பது சுந்தரர் பெயரால் ஏற்பட்ட மடமாகும். சுந்தரர் தாம் இயற்றிய திருத்தொண்டத் தொகை காரணமாக இப்பெயர் பெற்றார்.

திருச்சிற்றம்பலமுடைய திருமடம் என்பது திருத்தளிநாதர் கோயிலின் மேலைத் திருவாசலில் இருந்தது என்று கல்வெட்டு கூறுகிறது (100-1908). இம்மடத்திற்குப், புறமலை நாட்டுப் பொன்னமராபதித் திருவாலந்துறையுடையான் திருக்கொடுங் குன்ற முடையான் நிஷதராஜன், அமுதுபடிக்காகப் பொருள் கொடுத்திருக்கிறான்.

திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலசேகரதேவரின் 13-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம் திருத்தொண்டத்தொகை யான் திருமடத்தைப் பற்றி அறிகிறோம் (104-1908). கோயி லைச் சார்ந்த மடத்தில், திருச்சிற்றலம்பலமுடையானான அபிமுக்தீஸ்வரர் என்பவர் நிர்வாகியாக இருந்தார் என்றும் அறிகிறோம் (167-1935). இம்மடம் கோயில் நிர்வாகத்தையும் கவனித்து வந்திருக்கிறது. 14-ஆம் நூற்றாண்டில் இம்மடம் பிக்ஷமடத்து முதலியாரின் சீடரான ராஜேந்திரத்து முதலியார் சைவப்பிரகாசரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இதை வீரபாண் டியனின் 4-வது ஆட்சியாண்டு கல்வெட்டு கூறுகிறது. (164-1935) இம்மடத்திற்குத் திருவிடைமருதூருடையான் திரு விராமீசுவரம் உடையான் பொருள் கொடுத்துள்ளான். கி.பி. 1484-ல், 'மறைஞான சம்பந்தர்' என்பவரால் திருத்தளி நாதர் கோயிலில் உள்ள 'ஒங்கு கோயில் உறைவார்' என்ற இறைவன் மீது 'ஒங்கு கோயில் புராணம்' பாடப்பட்டது என்று திருத்தளிநாதர் கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன (180 186-1935). இவர் கோயிலிலுள்ள சிவமடத்தில் வாழ்ந்தவர் என்றும், மெய்கண்ட சத்தானத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிகிறது. இப்புராணம் பாடியதற்காக இவருக்குக் கோயி லைச் சேர்ந்த மன்னாரு மங்கலம் என்ற ஊரில் ஐந்து மா நிலம் பரிசளிக்கப்பட்டதென்றும் தெரிகிறது.

திருஞான சம்பந்தர் திருமடத்தில் ஸ்ரீ கந்தசிவா என்ற ஆச்சாரியார் ஒருவர் இருந்தார் என்றும், அவருக்குத் தாழையூர் நாட்டு மழவமாணிக்கம் திருக்கண்ணைப்பேருடையான் மழவச்

சக்கரவர்த்திகள் செம்பொன்மாரி என்பவன், சோழ தேசத்தில் இருந்த நிலத்தை விற்றுக் கொடுத்தான் என்றும் ஒரு கல் வெட்டால் அறிகிறோம் (129-1908).

**மகாசபை:** திருப்புத்தூர்க் கல்வெட்டுகளிலும் மகாசபை குறிப்பிடப்படுகிறது. இது 'மூலபருஷை' எனவும் 'மகாசபை' எனவும், பெருங்குறி எனவும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. இச்சபை ஊர்க்காரியங்களையும், கோயில் நிர்வாகங்களையும் கவனித்து வந்தது.

திருப்புத்தூர் திருத்தளி நாதர் கோயிலில் திருநொந்தா விளக்கெரிப்பதற்கும், பள்ளித் தாமத்திற்காகவும் கடம்பன் வேளான் என்பவன் நிறைகுறையாப் பழங்காசு முப்பதை திருப் புத்தூர் சபையார் கையில் கொடுத்தான் என்று வரகுண மாராயரின் கி. பி. 8-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு கூறுகிறது.

சபையார் மரத்தடியிலும், கோயில் மண்டபங்களிலும் கூடி தீர்மானம் செய்தனர் என்று தெரிகிறது. ராஜராஜன் கல்வெட்டு, உறங்காப் புளி மரத்தடியில் சபையார் கூடி ஏதோ தீர்மானம் செய்திருக்கிறார்கள் என்று கூறுகிறது (105-1908).

திருப்புத்தூர் மூலபருடையார், ஐயங்கொண்ட சோழ விண்ணகர ஆழ்வார் கோயிலில் கூடியிருந்து ஸ்ரீ தளி பரமேசு வரர் கோயிலில் நரகலோக வீரன் என்ற சந்தி விழாவிற்கு சில நிலங்களை விற்றுப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று முடிவுசெய்தனர் என்றும் கல்வெட்டால் தெரிகிறது. திருத்தளிநாதர் கோயிலுள்ள தயாபஞ்சரம் என்னும் மண்டபத்தில் திருப்புத்தூர் சபையார் கூடி சில வரவு செலவு கணக்குகளைப் பார்த்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது (104-1908). கோயில் காணியாளரும், மூலபருடை மகா சபையாரும் தேவதான நிலங்களை மாற்றிக் கொண்டிருக் கிறார்கள்.

பெருமாள் குலசேகர தேவரை திருவடி தொழுது மதுரை ஏறப்போகைக்கு ஸ்ரீ மது திரவியம் வேண்டினமையில்' திருப் புத்தூர் மூலபருடையினர், கிராமத்தில் திருத்தளியாண்ட

நாயனார் கோயிலில் ஆயிரத்தெழுநூற்றுவன் திருமண்டபத்தில் கூடிக் கோயிலுக்குச் சொந்தமான சில நிலங்களில் பயிரிடும் உரிமையை இருநூறு சோழிய நற்பழங்காசுக்கு விற்றுக் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது ஒரு கல்வெட்டு (10-1908). ஏறப்போதல் என்பதற்கு லெக்சிகன் குறித்துச் செல்லுதல் என்று பொருள் தருகிறது. அதாவது மதுரை சென்று மன்னனை வணங்கிக் காணிக்கை செலுத்துவதற்காக 200 காசுகள் திரட்டப்பட்டுள்ளன.

சடையவர்மன் குலசேகர பாண்டியனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், காரையூர்கிழான் மகனும், அவன் சகோதரர்களும், மருமக்களும் சில அந்தணர்களைக் கொன்றார்கள் என்றும், சமுதாயத்திற்கு பல இன்னல்கள் விளைவித்தார்கள் என்றும், அதனால் அவர்கள் நிலங்கள் திருப்புத்தூர் மகா சபையாரால் பறிமுதல் செய்யப்பட்டு 500 சோழியன் காசுக்கு திருத்தளிநாதர் கோயிலுக்கு விற்கப்பட்டது என்ற செய்தி கூறப்பட்டுள்ளது (185-1935).

மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் பாண்டிய நாட்டை ஹொய்சளர்கள் ஆக்கிரமித்தனர். அப்போது ஏற்பட்ட குழப்பத்தின் போது விஷ்ணு, பத்மநாபன், பாலாசிரியன், சங்கர நாராயணன் போன்றோர் கோயில் கருவூலத்தை உடைத்துத் திருடினர். இக்குற்றத்திற்காகவும் சில அந்தணர்களைக் கொன்றதற்காகவும் இவர்கள் நிலங்களைப் பறிமுதல் செய்து, மூலபருடையார் திருத்தளியாண்டார் கோயிலுக்கு விற்றனர். இந்நிகழ்ச்சி கி.பி. 1239 ல் நடைபெற்றிருக்க வேண்டும்.

கோயில்களில் ஏதேனும் தவறுகள் ஏற்படின், தாங்களே தீர்க்க முயன்றது மட்டுமல்லாமல் அரசனிடமும் திருப்புத்தூர் சபையார் முறையிட்டிருக்கின்றனர் என்றும் தெரிகிறது. கி. பி. 1291-இல் மாறவர்மன் குலசேகரனின் ஆட்சியின் போது நடந்த நிகழ்ச்சி ஒன்றை திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் கல்வெட்டு விவரிக்கிறது. திருத்தளிநாதர் கோயிலின் நிர்வாகமும் நடத்தையும் (நிர்வாகி விதவைப் பிராமணியுடன் தொடர்பு கொண்டிருந்தான் என்று கல்வெட்டு கூறுகிறது) சரியில்லாததால், திருப்புத்தூர் சபையார் குலசேகரனிடம் முறையிட்டனர்,

என்று கல்வெட்டு கூறுகிறது (125-1908). அரசனுடைய முடிவைப் பற்றி அறிந்துகொள்ள முடியாதபடி கல்வெட்டின் இறுதி அழிந்துள்ளது.

மூலபருடையார் கூடி கோயிலிலுள்ள தயாபஞ்சரம் என்னும் படத்தைத் திருப்பணி செய்தனர் என்றும் தெரிகிறது (116-1908). பாடிக்காவல் உரிமைகள், திருப்புத்தூர் சபையாரால் குரைக்குடி ஆளையயன் பாளைச் சக்கரவர்த்திக்கு விற்கப்பட்டது என்றும் தெரிகிறது. மூலபருட மகாசபையாரைப் பாதுகாவலாகக் கொண்டு, பலர் கோவிலுக்குத் தானம் செய்துள்ளதை இங்குள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**கோயில் ஊழியர்கள்:** திருத்தளிநாதர் கோயிலில் பணி செய்த ஊழியர்களைப்பற்றியும் நாம் கல்வெட்டின் துணை கொண்டு அறிந்துகொள்ள முடிகிறது. சக ஆண்டு 1309-இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் ஸ்ரீருத்ர ஸ்ரீ மாகேச்வர ஸ்ரீகாரியம் செய்பவர்களும், மடபத்தியம் செய்வானும், கோயில் கணக்கனான பிரம்மப்பிரியனும் குறிப்பிடப்படுகிறார்கள். கோயிலில் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய சிலர் நியமிக்கப்பட்டிருந்தனர் என்றும், அவர்களுக்குக் கோயிலைச் சேர்ந்த நிலங்கள் இறையிலியாகக் கொடுக்கப்பட்டன என்றும் அறிகிறோம் (99-1908)

கடவுளர்க்கு அணிவிக்கப்படும் வஸ்திரங்களைத் துவைத்துத்தருவதற்கு வண்ணார்கள் கோயிலில் இருந்தனர். இவர்கள் திருவிளக்குச் சீலையிடும் வண்ணார் எனப்படுகின்றனர். இதைப்பற்றிய குறிப்பு மாறஞ்சடையனின் 4-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (90-1908) காணப்படுகிறது.

கோயிலைச் சார்ந்திருந்த இடையர்களைப் பற்றியும், நந்தா விளக்கு கொடுத்தவர்கள், எரிப்பதற்குத் தேவையான நெய்க்காக ஆடு, மாடு, எருமை போன்றவற்றை கோயிலைச் சேர்ந்த இடையன் வசம் கொடுத்து, தினமும் குறிப்பிட்ட நெய்யை விளக்கெரிப்பதற்குக் கொடுக்குமாறு செய்துள்ளார்கள்.

திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், மலர்மாலை கட்டுதல், தேவாரம் ஓதுதல், இசை, நடனம் போன்றவற்றிற்காக

கோயில்களில் தேவரடியார்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களைப் பற்றியும் இரண்டு கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

கோயிலில் பூஜை, திருமஞ்சனம் போன்ற காரியங்களுக்காக அந்தணர்கள் பலர் இருந்தனர். இவர்களைச் 'சிவபிராமணர்கள்' என்று கல்வெட்டு கூறும். சக ஆண்டு **1309**-இல், திருத்தளிநாதர் கோயிலில் முப்பது வட்டத்து சிவபிராமணர்கள் இருந்ததாகத் தெரிகிறது. இந்த கோயில் ஊழியர் அனைவருக்கும் ஊதியமாக குறிப்பிட்ட அளவு நெல்லும், நிலமும் கொடுக்கப்பட்டிருந்தது. அர்ச்சகர்களுக்கு சில உரிமைகளும் சலுகைகளும் கொடுக்கப்பட்டிருந்தன (*126-1908*).

**அளவைகள் :** திருத்தளிநாதர் கோயில் கல்வெட்டுக்களின் மூலம் அக்காலத்தில் நிலவிய அளவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது. நீட்டலளவையாக விரல், முழம் ஆகியவை வரகுணபாண்டியனின் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. "இருவிரல் அகலத்து இரண்டிரண்டு நறும்பூ இட்டுத் தொடுத்தன இருமுழ நீளத்தன ஒரோ வடிமாக நியதி பதினைந்து வடம் இடுவதாக..." எனவரும் கல்வெட்டுப் பகுதியால் (*137-1908*) இதையறிலாம்.

நிறுத்தல் அளவையாகப் 'பலம்' என்பது காணப்படுகிறது. மாறஞ்சடையனின் கல்வெட்டு, தென்னவன் பல்லவரையனான மாறனாச்சன் கொடுத்த நந்தாவிளக்கின் எடை **120** பலம் என்று கூறுகிறது.

முகத்தல் அளவைப் பெயர்களாக உழக்கு, நாழி, உரி, ஆகியவை கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. நாழி, சூல நாழி எனப்பட்டிருக்கலாம். 'சூல நாழியால் நிசதி உரிநெய்' கோயிலுக்கு நந்தா விளக்கெரிப்பதற்காகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததை ஒரு கல்வெட்டு கூறுகிறது. உழக்கும் சூல உழக்கு எனப்பட்டது (*108-1908*).

பொன்னை நிறையெடுக்கப் பயன்பட்டகல் 'காசுகல்' எனப்படும் என்பது வல்லபதேவன் கல்வெட்டொன்றால் அறிகிறோம் ((*97-1908*).

# இலக்கியச் செய்திகள்

திருப்புத்தூரைப் பற்றிப் பேசுகின்ற இலக்கியங்கள் பெரும்பாலும் சைவ இலக்கியங்களாகவே உள்ளன. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் தொடங்கி அண்மைக்காலம் வரை திருப்புத்தூர் பலவாறு இலக்கியங்களில் காட்டப்படுகிறது.

சம்பந்தர் தேவாரம், அப்பர் தேவாரம், அருணகிரி திருப்புகழ், சிவகங்கைக் கும்மியும் அம்மானையும், திருப்புத்தூர் ஸ்தல புராணம் (வடமொழி), திருப்புத்தூர் புராணம் (தமிழ்) சேதுபுராணம், சூரைக்குடி புராணம், மயூரகிரி புராணம், திருப்புத்தூர் பதிற்றுப் பத்தந்தாதி ஆகிய இலக்கியங்கள் திருப்புத்துரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. 'திருக்கோட்டியூர் திருப்புத்தூர்களின் பள்ளியேசல்' ஒன்று திரிகூட ராசப்ப கவிராயரால் இயற்றப்பட்டது என்பது சென்னைப் பல்கலைக் கழகக் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்திலுள்ள குறிப்பால் தெரிகின்றது.

**சம்பந்தர்:** திருப்புத்தூர் திருத்தளிநாதர் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார். இது முதல் திருமுறையில் உள்ளது. திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் 'ஓங்கு கோயில்' என்று குறிப்பிடப்படுகிறது.

"பாங்கு நல்ல வரிவண் டிசைபாடத்
தேங்கொள் கொன்றை திளைக்கும் திருப்புத்தூர்
ஓங்கு கோயில் உறைவா ரவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே"[1]

திருப்புத்தூர் சோலைகள், தேனும் மணமும் நிறைந்தவை. அச்சோலை சந்திரன் திளைக்கும் தன்மையது. இங்கு வண்டுகள் ஒலித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கும். இப்பதி புகழுடையது. இங்கு நீர்வளம் மிகுதி.

"நெய்தலாம் பல் கழுநீர்மலர்ந்தெங்கும்
செய்கள் மல்குஞ் சிவனார் திருப்புத்தூர்"[2]

இத்தலத்தின் சோலைமீது படரும் மேகங்கள் அச்சோலை மலர்களின் மணம்படிந்து மணமுடையனவாகத் திகழ்ந்து கொண்டிருக்கும்; இளமயில்கள் தெருவு தோறும் திரிந்து கொண்டிருக்கும் என்றெல்லாம் ஞானசம்பந்தரால் திருப்புத் தூரும், திருத்தளிநாதரும் புகழப்படுகிறார்கள்.

**திருநாவுக்கரசர்:** 6-ஆம் திருமுறையில் திருப்புத்தூர்த் திருத்தாண்டகத்தில் திருப்புத்தூர் வளங்கள் அழகாகக் குறிப் பிடப்பட்டுள்ளன. இத்தலம் முழுவதும் நல்லதிருத்தமான வயல்களைப் பெற்றது. இவ்வூரிலுள்ள வீதிகள் நீண்டு தேர் சென்றுமீளும் பெருமைமிக்கன. 'தேரோடும் நெடுவீதி' என்று கூறப்பட்டுள்ளது. கொன்றைமலர்கள் நன்குமலர்ந்து பொன் போல் பூத்திருந்தன. மலராகிய பொன்னைக் கைநீட்டி வாங்கிக் கொள்வதுபோலக் காந்தள் மலர்கள் கைகள் போல மலர்ந்திருந்தன. நல்ல நாட்டுவளம் பெற்று, வண்டுகள் இசை செய்தவண்ணம் இருந்த இவ்வூரில் நல்ல வளமான எருமைகள் அழகுடன் மடுக்களில் படிந்து இன்புறும். எருது களின் உழைப்பை மிகுதியும் கொண்ட வயல்களையுடையது இவ்வூர். அழகிய மாடங்கள் உண்டு. தென்றல் காற்று வீசும் இப்பகுதி, சிறப்புப் பொருந்தியது.

உரமழித்த சலன்தரன்தன் ஆகங்கீண்டவோராழி படைத் தவன்காண்' என்னும் திருப்பதிகத்தில் திருமறைக் காடு, திருவேகம்பம், பெரும்பற்றப் புலியூர், ஆரூர், கழுக் குன்றம் ஆகிய தலங்களுடன் இணைத்துத் திருப்பத்தூர் வைப்புத் தலமாகப் பாடப்பட்டுள்ளது.

"கரமரவு வல்வினைநோய் அகற்றினான்காண்
காமரு பூங்கச்சியேகம்பத்தான் காண் பெரு
மருவு பேருலகில் பிணிகள் தீர்க்கும்பெரும்
பற்றத் தண்புலியூர் மன்றாடிகாண் தருமருவு

1, 2 திருஞான சம்பந்தர் தேவாரம், முதல் திருமுறை, பதிகம் - 26 கழக வெளியீடு.

3. வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்-பாண்டிநாட்டுக் கோயில்கள்.

கொடைத்தடக்கை அளகைக்கோன்றன் சங்காத்தி
ஆரூரில் தனியாளைக் காண் திருமருவுபொழில்
புடைசூழ் திருப்புத்தூரில் திருத்தளியான் காண்
அவனென் சிந்தையானே[1]

இலக்கியத்தில் சங்கம் பற்றிய குறிப்பு முதல் முதலாக திருநாவுக்கரசர் பாடல்களில்தான் இடம்பெற்றுள்ளது. இவ் விதத்திலும் இத் திருத்தாண்டகப் பதிகம் இன்றியமையாத தாகத் திகழ்கிறது.

**அருணகிரிநாதர்:** திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில் இரண்டாம் திருச்சுற்றில் வடக்குப் பார்த்துள்ள சுப்பிர மணிய சுவாமியை இருபாடல்களில் பாடியுள்ளார்.

**மயூரகிரி புராணம் :** திருப்புத்தூர் அருகிலுள்ள குன்றக் குடியைப் பற்றிய தலபுராணமிது. இதிலும் திருப்புத்தூர் மிகச்சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இலக்குமி வழிபட்டதலம் என்பது கூறப்படுகிறது. திருப்புத்தூர் இறைவனுக்கும், இக்கோயிலையொட்டிய குளத் திற்கும் பெயர் வந்த காரணமும் விளக்கப்படுகின்றது. செந் தாமரையாசனியாகிய இலக்குமி தேனைச் சொரிகின்ற வாசனை பொருந்திய கொன்றை வனத்தில் வீற்றிருக்கும் அந்த சிவபெரு மானைச் சந்நிதியில் நின்று வேண்டுதல் செய்து அகன்ற ஒரு தடாகத்தை உண்டாக்கி அதில் ஸ்நானஞ் செய்து எழுந்து ஆகமவிதிப்படி பூசித்து அவ்விடத்தில் சிவபெருமான் இட பாரூடராய் வந்து வரங்களைக் கொடுக்கப் பெற்று திரிலோகங் களும், ஆசையாற் றாழ்ந்து நிற்கின்ற சிறப்பினையுடைய விட்டு லிணது பதத்தைப் பெற்றாள்.

"சீதேவி கண்டினாற் திருத்தளியென்றுரைப்பர்
அந்தத் தீர்த்தம் தன்னைக்

1. திருநாவுக்கரசர் தேவாரம் - 6-ம் திருமுறை - பதிகம் 290 கழக வெளியீடு.
1, 2. அருணகிரி நாதர் - திருப்புகழ் - திருப்புத்தூர்.

காதேறுங் குவளை விழியன்னவள்
பூசித்தனாற் கங்கைசூடு
மாதேவர் தமைமுயர் திருத்தளி யாரென்
பரந்த வளங்கொடானம்
வேதாவின் பிரளயத்தும் அழிவின்றியிருக்கும்
உண்மை விளம்பினோமால்"[1]

திருப்புத்தூருக்குக் 'கொன்றைவனம்' என்றும் பெயர் இருந்திருக்கிறது என்பதும் இதனால் தெரிகிறது. மேலும் 'திருப்புத்தூர் மேவும் விமலனே போற்றி போற்றி'[2] என்று திருத்தளி நாதரைப் போற்றிப் புகழ்கிறது.

**சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும்:** 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்விலக்கியம் எளிய இனிய நடையில் இன்றியமையாத வரலாற்றுச் செய்திகளைத் தருகிறது. திருப்புத்தூர்க் கோட்டையைப் பற்றியும், மருதுவீரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் திருப்புத்தூரில் நடந்த சண்டையைப் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. இந்நூல் எழுந்த காலத்தில் திருத்தளிநாதர் கோயிலும், வைரவர் சன்னிதியும் குளமும் மிகச் சிறப்பாக இருந்திருக்கவேண்டும் எனத்தெரிகிறது. திருப்புத்தூரைப் பற்றிக் குறிப்பிடுகின்ற இலக்கியங்கள் அனைத்தும் 'திருப்புத்தூர்' என்றே குறிக்க, இந்நூல் மட்டும் பேச்சுவழக்கில் உள்ளது போலத் 'திருப்பத்தூர்' என்ற அழைக்கிறது.

"திருப்பத்தூர் மாநகர்"[1]
"தேரும் திருக்குளமும் சிவாலயமும்
சிறந்த திருப்புத்தூர்க் கோட்டைக்குள்ளே"[2]
"திருப்பத்தூர் தன்னில் தளர் திருத்தளீசர்"[3]
"தேவர்கள் புகழ்ந்து போற்றும் திருப்புத்தூர்"[4]
"சீலமுடன் எழுந்து திருப்புத்தூர் போயிருந்தால்
கால வயிரவனார் காப்பார் கடைபோக."[5]

1-2. மயூரகிரிபுராணம்.

1-4. சிவகங்கைச் சரித்திரக் கும்மி - முத்துசாமி.

5. சிவகங்கைச் சரித்திர அம்மானை - முருகையன் அல்லது முருகேசன்,

மேலும் மருதுசகோதரர்கள் திருப்புத்தூரில் தென்மூலைக் கொத்தளத்தில் புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற வரலாற்றுச் செய்தியையுல் தருகிறது.

**பெரியபுராணம் :** திருஞான சம்பந்தர் பாண்டி நாட்டு சிவத்தலங்களுக்குச் சென்று வழிபட்ட போது திருப்புத்தூர் சென்றார் என்ற செய்தியைக் கூறவருகையில் சேக்கிழார் திருப்புத்தூரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

"பற்றார்தம் புரங்கள் மலைச்சிலையாற் செற்ற
பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து"[1]

**சூரை மாநகர்ப்புராணம் :** நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுடைய கோயில்களுள் ஒன்றான சூரைக்குடியைப் பற்றியும் அத்தலத்தைப் பற்றியும் கூறுகின்ற இந்நூல் திருவாவடுதுறை ஆதினத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. இப்புராணத்திலும் திருத்தளியீசர், திருக்குளம், திருப்புத்தூர் ஆகியவை சிறப்பித்துப் பேசப்படுகிறது.

சூரைக்குடியில் வாழ்பவனான, குறுநில மன்னர் குலத்தில் உதித்த பொன்னான விசயாலய தேவன் என்பவன் காலத்தில் மதுரையிலிருந்து புலவர்கள் தென் பாண்டி நாட்டிலுள்ள சிவதலங்களைத் தரிசித்துக் கொண்டு திருப்புத்தூர் வந்து சேர்ந்தனர். இதையறிந்த விசயாலயன் அவர்களைக் காணவேண்டும் என்ற வேட்கையோடு தூது விடுகிறான்.

வளவிலா வளங்கண் மல்கியமைதரு திருப்புத்தூர்வாழ்

1. பெரியபுராணம் - திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம். பாண்டி நாட்டு யாத்திரை. பக்கம் 435. பாடல் 886. திருப்பனந்தாள் - ஸ்ரீ காசிமடம் வெளியீடு.

மேலும் மருதுசகோதரர்கள் திருப்புத்தூரில் தென்மூலைக் கொத்தளத்தில் புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற வரலாற்றுச் செய்தியையுல் தருகிறது.

**பெரியபுராணம் :** திருஞான சம்பந்தர் பாண்டி நாட்டு சிவத்தலங்களுக்குச் சென்று வழிபட்ட போது திருப்புத்தூர் சென்றார் என்ற செய்தியைக் கூறவருகையில் சேக்கிழார் திருப்புத்தூரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

"பற்றார்தம் புரங்கள் மலைச்சிலையாற் செற்ற
பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து"[1]

**சூரை மாநகர்ப்புராணம் :** நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுடைய கோயில்களுள் ஒன்றான சூரைக்குடியைப் பற்றியும் அத்தலத்தைப் பற்றியும் கூறுகின்ற இந்நூல் திருவாவடுதுறை ஆதினத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. இப்புராணத்திலும் திருத்தளியீசர், திருக்குளம், திருப்புத்தூர் ஆகியவை சிறப்பித்துப் பேசப்படுகிறது.

சூரைக்குடியில் வாழ்பவனான, குறுநில மன்னர் குலத்தில் உதித்த பொன்னான விசயாலய தேவன் என்பவன் காலத்தில் மதுரையிலிருந்து புலவர்கள் தென் பாண்டி நாட்டிலுள்ள சிவதலங்களைத் தரிசித்துக் கொண்டு திருப்புத்தூர் வந்து சேர்ந்தனர். இதையறிந்த விசயாலயன் அவர்களைக் காணவேண்டும் என்ற வேட்கையோடு தூது விடுகிறான்.

வளவிலா வளங்கண் மல்கியமைதரு திருப்புத்தூர்வாழ்

1. பெரியபுராணம் - திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம். பாண்டி நாட்டு யாத்திரை. பக்கம் 435. பாடல் 886. திருப்பனந்தாள் • ஸ்ரீ காசிமடம் வெளியீடு.

அளவிலா ஆனந்தக் கூத்தரடி தொழுதமர்ந்தார் ஆங்கண்[1]
இவ்வாறாக இப்புராணம் திருப்புத்தூர் பற்றிக் குறிப்பிடுகிறது.

**சேது புராணம்:** பாண்டி நாட்டு சிவத்தலங்கள் பதினான்கைக் குறிப்பிடுகையில் திருப்புத்தூரையும் குறிக்கிறது[2]

**தற்கால இலக்கியங்கள்:** தற்காலத்தில் எழுதப்பட்ட 'திருப்புத்தூர் சீதளிநாதன் பதிற்றுப்பத்தந்தாதி'

பொன்னியலும் சாலிவளர் வயல்சூழ்ந்த
திருத்தளியாம் புத்தூரின் கண்"[3]

என்று திருப்புத்தூரைப்பற்றிக் குறிக்கிறது. இதில் திருத்தளி நாதர், சிவகாமியம்மை, பைரவர் மூவரும் போற்றப்படுகிறார்கள். இத் தலத்தின் புராணம் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. நாட்டுக் கோட்டை நகரத்நார் மரபைச் சேர்ந்த ராய. சொக்கலிங்கம் அவர்கள் இத்தலபுராணத்தைத் தமிழிற் பாடியிருக்கிறார்கள். இப் புராணமேயன்றி வடமொழிப் புராணமும் தமிழ்மொழிப் புராணமும் பயின்றோர் ஒருவர் தமிழ்நடையில் எளிமையாக எழுதிய புராணமும் உண்டு.

1. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை - சூரைமாநகர்ப் புராணம் - பக்கம் 59 - பாடல் 24.

2. நிரம்ப அழகிய தேசிகர் - சேதுபுராணம் - திருநாட்டுச் சிறப்பு.

3. மதுரை திராவிட கவிபூஷணம் கவிராஜ பண்டிதர் நா. கனகராஜ ஐயர் - திருப்புத்தூர் சீதளிநாதன் பதிற்றுப் பத்தாந்தி.